# கல்கி


KALKI
10.5.87
ரூ. 1.50




“காப்பாற்றுங்கள்

பொம்மலாட்டக் கலையை!”

# வெளியிடும் ஒரு பயணி



“நான் என்னுடைய மனைவி கூறு மனைத்தையும் ஏற்றுக் கொள்கிறேன்... ஆம், கிட்டத்தட்ட. ஒரு ஈகிள் ஹைலோ வாங்கி வரும்படி அவள் கூறியதும்... உடனே வாங்கிக் கொடுத்தேன்.

விடுமுறையில் பல ஊர்களுக்கு சுற்றுப்பயணம் செய்யும்போது, ஹைலோ மிகவும் உபயோகமாக இருக்குமென நினைத்தேன். யாருக்கு வேண்டும் அந்த ஆயிரக்கணக் கானப் பிரயாணத் தொல்லைகள்? யாருக்கு வேண்டும் மீண்டும் அந்த கடந்த ஆண்டைப் போன்ற பெருந் தொல்லை தரும் பிரயாணம்?

ஈகிள் ஹைலோவிலே போதுமான குளிர்ந்த தண்ணீரை வைத்துக் கொண்டால்—பிரயாணத்தின் போது எல்லா தொல்லைகளுக்கும் ஒரு முடிவுகட்டலாம். குழந்தைகளும் மீண்டும் மீண்டும் வெளியில் விற்கும் ‘கோல்டு டிரிங்க்’ கேட்கமாட்டார்கள். (அது குழந்தைகளுக்கும் என்னுடைய பாக்கெட்டிற்கும் ஆரோக்கியமானதன்று!) பிரயாணம் செய்யும்போது கிடைக்கும் மோசமான தண்ணீரையெல்லாம் குடிக்கத் தேவையில்லை இனி. ஆம்! ஹைலோவிற்கு செய்யும் செலவு மிகவும் பயனுள்ளதாகும்—தினசரி வீட்டு உபயோகத்திற்கும் ஏற்றது. இப்போது இல்லத்தரசிகள் சிந்திக்கத் தொடங்கிவிட்டார்கள் குளிர் சாதனப் பெட்டி இல்லாமலேயே குழந்தைகள் குளிர்ந்த நீரை குடிக்கலாம் என்பதை—அது மட்டுமா ஹைலோவினால் இன்னும் எத்தனை யெத்தனையோ உபயோகங்கள்.

ஹைலோ ஒரு வரப்பிரசாதமாய் அமையப் போகிறது வீட்டினுள்ளும் வெளியிடங்களிலும்... அப்படித்தானே?”

உடையாத ஈகிள் தெர்மோவேர் அணிவரிசையிலே ஒரு பிரிவுதான் ஈகிள் ஹைலோ கூலர்கள். இவை விதவிதமான உருவமைப்புகளிலும் அளவுகளிலும் மற்றும் வண்ணங்களிலும் எளிதில் தண்ணீர் ஊற்றக் கூடிய குழாயுடன் கூடிய உறுதி வாய்ந்த குனஸ்ட்டாஃப் கட்டுடனும் வருகின்றன. தெரிந்தெடுக்க வசதியாக—அலுமினியம், ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் அல்லது ப்ளாஸ்டிக் உள்ளமைப்பு கொண்டவை; சில மடக்கும் கால்கள் உள்ளவை. காப்பியிலிருந்து தேநீர் வரை சூடாக வைக்கவும், பழரசம் முதல் லஸ்ஸி வரை குளிர்ச்சியாக வைக்கவும் உகந்தது.



*நிரம்பிய அன்பிலேயே மிகச் சிறந்த சீதோஷ்ணப் பாதுகாப்பு.*

**ஈகிள் ஃப்ளாஸ்க் பிரை. லிட்.**


பதிவுபெற்ற/தலைமை அலுவலகம் & ப்ளான்ட்-I தலேகாவ் 410507, தில்லா. புனே. (மஹாராஷ்ட்ரா) கிராம்ஸ்: EAGLEFLASK புனே 410 507 தொலைபேசி: 321-3, டெலக்ஸ்: 0145-296 EGLE-IN

ப்ளான்ட்-II இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், கிண்டி, சென்னை-600032 தொலைபேசி: 431095/433874 டெலக்ஸ்: 041-7101 EGLE-IN

எக்ஸ்போர்ட் அலுவலகம்: பம்பாய். தொலைபேசி: 322096/97, டெலக்ஸ்: 011-73297 EGLE-IN

விற்பனை அலுவலகங்கள் & டெப்போக்கள்: • டில்லி 3315066/731561 • ஜெய்ப்பூர் • கான்பூர் • கல்கத்தா 257350 • கௌஹாத்தி • பாட்னா 22446 • அஹமதாபாத் 399028 • இந்தோர் 64336 • பெங்களூர் 223299 • ஹைதராபாத் 67088 • சென்னை 24270 • திருச்சூர்.


குறிப்பு: ஈகிள் தெர்மோவேர்™ ஒன்று தான், பேடெண்டு பெற்ற பாலியூரெதேன் பாலிஇன் கலக்கல் சீதோஷ்ண

காப்புரிமையிட்டது. இத்தயாரிப்புகளைப் போலி செய்ய முடியுமே தவிர இதே தரத்திற்கு செய்துவிட முடியாது.

பல்வலவும் செய்திடலாம் நீங்கள் ஈகிள் உதவியால்

Location Courtesy: Akbarallys

பல்கலைக் கழகத்திலும் மானபங்கம்!
மருத்துவமனையிலும் கற்பழிப்பு!

# பெண்களுக்கு எதிரான குற்றங்கள் — விடிவு காலம் எப்போது?

சென்னை பல்கலைக் கழகத்தின் பத்திரிகை மற்றும் வெகுஜனத் தொடர்புத் துறை பேராசிரியர் D. சதாசிவம் (54) கடந்த வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டார். இவர் தமது துறையில் இரண்டாம் வருட வகுப்பில் பயிலும் மாணவி ஒருவரிடம் தகாத முறையில் நடந்து கொள்ள முயன்றதாகக் கூறப்படுகிறது.

சம்பந்தப்பட்ட மாணவி புகார் செய்த தன் பேரில் காவல் துறையினர் இ.பி.கோ. பிரிவு 354—இன் கீழ் (ஒரு பெண்ணை மான பங்கம் செய்யும் எண்ணத்துடன் பலவந்த மாக அணுகுவது) பேராசிரியரைக் கைது செய்தனர்.

வெள்ளிக்கிழமை மாலை தன்னுடைய ரிகார்டு புத்தகங்களை ஆராய்வதற்காகத் தன்னைப் பின்தங்கச் சொல்லிவிட்டுத் தன்னிடம் பேராசிரியர் தவறாக நடந்து கொள்ள முயன்றதாகப் புகாரில் தெரிவித்துள்ளார் அம்மாணவி.

பேராசிரியர், பிற்பாடு ஜாமீனில் விடுதலை செய்யப்பட்டார்.

பேராசிரியரின் மறுப்பு: தமக்கு அபகீர்த்தி ஏற்பட்டுள்ளதாகவும், அதனால் எதிர் வழக்குத் தொடரப் போவதாகவும் நஷ்ட ஈடு கோரப் போவதாகவும், அதற்குப் பல்கலைக் கழகத்தின் அனுமதி வேண்டிக் காத்திருப்பதாகவும் பேராசிரியர் தெரிவித்தார்.

— இந்தியன் எக்ஸ்பிரஸ் 26.4.87 இதழில் வெளியான செய்தி.

இதுபோன்று அவ்வப்போது செய்திகள் வந்த வண்ணம்தான் இருக்கின்றன. இந்தச் சமுதாயத்தில் பெண்களுக்கு என்ன பாதுகாப்பு? நீதித் துறை இந்தப் பிரச்னையை இன்று எவ்வாறு அணுகுகிறது? எப்படி அணுக வேண்டும்? இத்தகைய குற்றங்கள் குறைய வழி என்ன? உயர்நீதி மன்ற முன்னாள் நீதிபதி கிருஷ்ணசாமி ரெட்டியாரைச் சந்தித்துப் பேசியபோது அவர் சொன்னவை:

கற்பழிக்கப்பட்டப் பெண்ணுக்கு எதிராகப் பத்து சாட்சியங்கள் இருக்கலாம். ஆனால் அவை எல்லாவற்றையும்விட அவளது ஒரு வார்த்தைக்கு அதிகம் மதிப்பு தரப்பட வேண்டும். எந்தப் பெண்ணுமே தான் கற்பழிக்கப்பட்டதாகவோ, தன்னிடம் ஒருவர் தவறான முறையில் நடந்து கொள்ள முயன்றதாகவோ பொய் சொல்லவே மாட்டாள் — காரணம், அது நமது இன்றைய சமூக அமைப்பில் அவளுக்குத் தாங்க முடியாத அவப்பெயரைத்தான் முதலில் பெற்றுத் தரும். அவளது எதிர்காலமே ஒரு கேள்விக் குறியாகிப் போகும். அதனால் தனது மானத்தையும், எதிர்காலத்தையும் பணயம் வைத்து ஒரு பெண் மற்றவருக்கு அபகீர்த்தி தேடித் தர முயல மாட்டாள். வெகு அபூர்வமான மனவிகாரம் காரணமாக மட்டுமே ஒரு பெண், தான் கற்பழிக்கப்பட்டதாகப்



• கிருஷ்ணசாமி ரெட்டியார்.

பொய் சொல்லக் கூடும். அல்லது இன்னும் அபூர்வமாக, பொய் சொல்வதால் தான் இனி புதிதாக எதையும் இழக்கப் போவதில்லை என்று எண்ணக் கூடிய நல்நடத்தை குறைவான பெண், குற்றச்சாட்டைப் புனைந்துரைக்கக் கூடும். ஆனால் இத்தகைய வழக்குகள் மிக அபூர்வம் என்பதோடு, சந்தர்ப்பச் சூழ்நிலைகளைக் கொண்டு இப்பொய்களை வெகு சுலபமாகக் கண்டுபிடித்துவிடலாம். பார்க்கப் போனால் நமது பெண்களுள் அனேகம் பேர் சமூக ஏசலுக்குப் பயந்து, உண்மையை வெளியே சொல்லவே தயங்குவார்கள். எனவே இத்தகைய வழக்குகளில் பெண்கள் துணிந்து உண்மையைச் சொல்ல முன்வருவதைப் பாராட்ட வேண்டும். அவர்களுக்கு நியாயம் கிடைக்கச் செய்வது நீதிபதியின் கையில்தான் இருக்கிறது.

நீதிபதிகள் சட்ட வல்லுனர்களாக இருந்தால் மட்டும் போதாது. மனித இயல்புகளை அறிந்தவர்களாகவும் இருக்க வேண்டும். அதோடு நம் நாட்டின் கலாசார, பாரம்பரியப் பின்னணியையும் தங்கள் மேற்பார்வையின் கீழ் உள்ள பகுதியில் வாழும் மக்களின் பழக்க வழக்கங்களையும் அறிந்தவர்களாகவும் இருக்க வேண்டும். இந்த நடைமுறை அறிவு, அனுபவ ரீதியான சிந்தனை ஆகியவற்றைப் பெற ஒரு நீதிபதி சாதாரண மக்களுடன் நெருங்கிப் பழக வேண்டும். தன் மட்டத்தில் உள்ள உயர் வகுப்பினரிடையே மட்டும் வளைய வந்து அவர்களது 'செயற்கை' உலகத்தை மட்டுமே பார்த்தும் அனுபவித்துக் கொண்டுமிருந்தால்சாதாரண மனிதர்களின் பிரச்னைகள் நீதிபதிக்குத் தெரிய வராமலே போகக் கூடும். அந்தப் பிரச்னைகளையும் அந்த வட்டாரத்தின் வாழ்க்கை முறைகளையும் அங்கு நிலவும் சந்தர்ப்பச் சூழ்நிலைகளையும் அறியாத ஒரு நீதிபதி, சூழ்நிலை, சந்தர்ப்பம் உணர்த்தும் — **Circumstantial evi-dence** — எனப்படும் சாட்சியங்களைக் கொண்டு ஆராய்ந்து சரியான தீர்ப்பு வழங்க முடியாது.

எல்லாவற்றுக்கும் மேலாக, ஒரு நீதிபதியிடம் உண்மையைக் கண்டுபிடிக்கும் வேகமும் தாகமும் இருக்க வேண்டும். தாகத்தால் வாடுபவன்தான் தண்ணீரைத் தேடிக் கண்டுபிடிப்பான். அத்தகைய தவிப்பு இருந்தால் தான் நீதிபதிகளும் உண்மையைத் தேடி அடைவர்.

கற்பழிப்பு வழக்குகளில்பெண்களுக்கு நியாயம் கிடைப்பதற்காகச் சட்டத்தை மாற்றவோ, திருத்தவோ, புதிய சட்டங்களைக் கொண்டு வரவோ வேண்டிய அவசியம் இல்லை என்பது என் கருத்து. தற்போது இருக்கின்ற சட்டத்தையும் விதிகளையும் கொண்டே நல்ல முறையில் நியாயம் வழங்க முடியும். சட்டம் என்பது வெறும் காகிதம் தானே. எல்லோருக்கும் அடிப்படை வாழ்க்கை வசதிகள் கிடைக்க வேண்டும், நியாயம் கிடைக்க வேண்டும். இந்தத் தர்மத்தினை நிலைநாட்டத்தான் சட்டம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. நீதிக்காகத்தான் சட்டம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அந்த நீதி தோற்பது சட்டத்தால் அல்ல; நீதிபதிகளால்தான் என்று நான் நம்புகிறேன்.

சட்டத்தை வளைக்கலாம், உடைக்கக் கூடாது. எவ்வளவு தூரம் வளைப்பது என்பது கைதேர்ந்த, அனுபவஸ்தர்களான நீதிபதிகளுக்கே தெரியும்.

'தண்டனையை அதிகரிப்பதன் மூலம் கற்பழிப்புக் குற்றங்களைக் குறைக்க முடியுமா?' என்ற கேள்வி எழுகிறது. இக்குற்றத்துக்குத் தற்போது பத்து ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை வழங்குகிறார்கள். இதனை அதிகப்படுத்தும் முயற்சிகளும் எடுத்து வருகிறார்கள். ஆனால், பொதுவாக இத்தகைய குற்றங்களில் ஈடுபடுபவர்கள் ஒன்று உணர்ச்சிவசப்பட்டுக் காரியத்தில் இறங்கி விடுகிறார்கள் அல்லது மிகவும் யோசித்து, திட்டமிட்டு அதில் ஈடுபடுகின்றார்கள்.

முதலாம் வகையைச் சேர்ந்த குற்றவாளிகள் தண்டனையைப் பற்றி நின்று, யோசித்துச் செயலாற்றுவதில்லை; இரண்டாம் வகையைச் சேர்ந்தவர்கள் குற்றத்தைத் திட்டமிடுவதோடு,சட்டத்திலிருந்துதப்பும்வழியையும் திட்டமிட்டு வைத்திருப்பார்கள். அத்தகையவர்கள் நீதியை விலை கொடுத்து வாங்கக் கூடத் துணிவார்கள். எனவே தண்டனையை அதிகரிப்பதன் மூலம் இப்பிரச்னைக்குத் தீர்வு காண முடியும் என்று நான் நம்பவில்லை.

தண்டனையை அதிகரிப்பதைவிட, தண்டனையைக் கொடூரமாக்கினால் பலன் இருக்கும். சில நாடுகளில் இத்தகைய குற்றவாளிகளைத் தெருவில் நிறுத்தி வைத்துச் சாட்டையடி கொடுப்பார்கள். அந்த மாதிரிக் கொடூரமான தண்டனைகளைக் காண்பவர்கள் குற்றம் செய்யப் பயப்படுவார்கள். ஆனால் ஜனநாயகத்தில் இத்தகைய கொடூர தண்டனைகள் சாத்தியமில்லை. நாகரிக, முன்னேற்றமும், முற்போக்குச் சிந்தனையும் கொண்ட நாடுகள், 'பழிக்குப் பழி' என்ற கொள்கை அடிப்படையில் தண்டனைகள் வழங்க அனுமதிப்பதில்லை. மரண தண்டனை மட்டுமே இதற்கு விதிவிலக்கு.

குற்றவாளிகளைச் சிறையில் கடுங்காவலில் வைப்பதைக் காட்டிலும் முன்காலத்தில் செய்தது போல் அந்தமான் போன்ற தனி இடங்களில் திறந்த வெளிச் சிறைச்சாலைகளில் வைத்துக் கட்டாய உடல் உழைப்பில் அவர்களை ஈடுபடுத்தலாம். இப்போதும் சிறைகளில், குற்றவாளிகள் வேலை செய்கிறார்களே என்று கேட்கலாம். அந்த வேலைகளெல்லாம் அவர்கள் 'அரசாங்க விருந்தினராக' இருக்கும் செலவைக் கூட ஈடுகட்டாது. தனியிடங்களில் திறந்த வெளிச் சிறைகளில் குற்றவாளிகளை வைப்பதாலும் அவர்களை உழைக்கச் செய்வதாலும் சமூக விரோத சக்திகளை அப்புறப்படுத்துவதோடு நாட்டுக்கு உபயோகமான உற்பத்தியிலும் அவர்களை ஈடுபடுத்தியதாகிறது.

## பெண்களுக்கெதிரான குற்றங்கள்! 1986—இல் பதிவாகியுள்ளவை:

| வரிசை என் | மாநிலங்கள் | கற்பழிப்பு | மானபங்கம் | வரதட்சணை தகராறில் மரணம் |
|---|---|---|---|---|
| 1. | ஆந்திரப் பிரதேசம் | 229 | 644 | 199 |
| 2. | பீஹார் | 254 | 199 | 24 |
| 3. | குஜராத் | 80 | 356 | 6 |
| 4. | ஹரியானா | 79 | 212 | 31 |
| 5. | கர்னாடகா | 96 | 370 | 37 |
| 6. | கேரளா | 81 | 311 | 2 |
| 7. | மத்தியப் பிரதேசம் | 904 | 2732 | — |
| 8. | மகாராஷ்டிரா | 285 | 922 | 42 |
| 9. | ஒரிஸா | 86 | 369 | 6 |
| 10. | பஞ்சாப் | 41 | 27 | 19 |
| 11. | ராஜஸ்தான் | 477 | 743 | 64 |
| 12. | தமிழ்நாடு | 158 | 515 | 17 |
| 13. | உத்திரப் பிரதேசம் | 841 | 1043 | 310 |
| 14. | மேற்கு வங்காளம் | 262 | 170 | 25 |

ஒவ்வொரு மனிதனும் கடுமையாக உழைத்து நாட்டின் வளர்ச்சிக்குத் தன் பங்கைச் செய்ய வேண்டும். இல்லாவிட்டால் அவன் நாட்டுக்கே சுமையாகிறான். இதில் ஒரு வேடிக்கை என்னவென்றால் நமது அரசியல் சாசனம் உரிமைகளை அள்ளித் தந்திருக்கிறதேயொழிய கடமைகளைச் சுட்டிக் காட்டவில்லை. ஒருவன் வேலையே செய்யாமல் தனது முன்னோர் சொத்தை அனுபவித்தபடி வாழ நமது அரசியல் சாசனம் அனுமதிக்கிறது. யாரையும் உழைக்கும்படி கட்டாயப் படுத்த இயலாது! ஆனால் நமது வேதங்களோ, கடமையைச் சரியாகச் செய்வதைத்தான் தர்மமாகவே கூறுகின்றன......! மனிதன் போதிய வேலைச் சுமை இன்றிச் சோம்பியிருக்கும்போதுதான் தகாத எண்ணங்களுக்கு ஆட்படுகிறான்.

லீகல் எயிட் போர்டு, பெண்களின் சட்டப் பிரச்னைகளில் உதவுவதற்கென்றே சென்னையில் ஒரு மையத்தை ஆரம்பித்திருக்கிறது. ஒவ்வொரு நாளும் மாலை மூன்று முதல் ஆறு மணிவரை கில்ட் ஆஃப் சர்விஸ் வளாகத்தில் பெண் வழக்கறிஞர்களும் சமூக சேவகிகளும் கூடி, தங்களை நாடி வரும் பெண்களின் சட்டப் பிரச்னைகளுக்குச் சுலபமாகவும் சீக்கிரமாகவும் தீர்வு காண உதவி வருகிறார்கள். நீங்கள் ஆரம்பத்தில் குறிப்பிட்ட செய்தியில் பாதிக்கப்பட்ட பெண் கூட போலீஸிடம் செல்வதற்கு முன்னால் இவர்களை அணுகியிருந்தால் நிச்சயம் உதவியிருப்பார்கள்.

லீகல் எய்டு போர்டு கிராமங்களில் சட்ட உதவி முகாம்கள் நடத்தி வருகிறது. அத்தகைய சில முகாம்களுக்குச் சென்று வந்த அனுபவத்திலும், எனது சொந்த அனுபவத்தின் அடிப்படையிலும் சொல்கிறேன்—பெண்கள் — குறிப்பாகக் கிராமத்துப் பெண்கள் நாணயம் மிக்கவர்கள். தங்கள் கணவனே பொய் சொன்னால்கூடப் பதறிவிடுவார்கள். உரிமைகளைக் கேட்டுப் பெறவும் இவர்கள் சமீப காலமாக அதிகம் முன்வருகிறார்கள். இவர்கள்தான் கிராமப் பகுதிகளின் முதுகெலும்பாக இருந்து வருகிறார்கள். பெண்கள் வேலைக்குப் போகலாமா என்று பட்டினத்தில் பட்டி மன்றங்கள் முழங்குகையில் இவர்கள் கிராமங்களில் அமைதியாக வீட்டு வேலைகளையும் செய்து, குடும்பப் பொறுப்பையும் ஏற்றுப் பகல் பொழுது முழுக்க வயல்களில் வேலைக்குப் போய் வரவும் செய்கிறார்கள்.

நகரங்களில்தான் நாகரிகப் போர்வையில் பெண்கள் மிகவும் இழிவுபடுத்தப் படுகிறார்கள். போதாக்குறைக்குப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு அளிக்கப்படுவது போலவே பெண்களுக்குச் சலுகைகள் வேறு தரப்படுகின்றன. இதெல்லாம் வேற்றுமை கற்பித்து உயர்வு தாழ்வுகளுக்குத்தான் இடமளிக்கும். எனவே, 'சலுகைகளை ஏற்காதீர்கள்; சம உரிமை கேளுங்கள்' என்றுதான் பெண்களுக்கு நான் சொல்லி வருகிறேன்.

நமது பாரம்பரியத்தில் பெண்களுக்கு மிக உயர்ந்த இடமே அளித்திருந்தார்கள். 'சகதர்மிணி' என்ற சம அந்தஸ்தை அவளுக்குக் கொடுத்துப் போற்றினார்கள். அவளுக் கென்று ஒரு தர்மம் — வாழ்க்கை முறை — இருந்தது. பார்வைகளும், நோக்குகளும் மாறி, திரிந்து இன்று பெண்களின் நிலை தாழ்ந்து போய்விட்டது. நமது மாபெரும் பொக்கிஷத்தில் அழுக்கு சேர்ந்துவிட்டது.

ஆனால் இளைய தலைமுறையைப் பார்க்கும் போது சிறிதளவு நம்பிக்கை ஏற்படுகிறது. இன்றையத் தலைமுறைப் பெண்கள் குறிப்பாக, படித்த பெண்கள், ஆண்களுடன் சரிநிகர் சமானமாகப் பழகினாலும் மிகுந்த தற்காப்பு உணர்வும், தைரியமும் உள்ளவர்களாக இருக்கிறார்கள். இவர்களை அங்கிகரிக்க நமது சமூகத்துக்குத் தெரியவில்லை என்பதே வருத்தத்துக்குரிய விஷயம். 'நள்ளிரவில் ஒரு பெண் தனியே சாலையில் தடங்கலின்றி நடந்து போக எந்த நாட்டில் முடிகிறதோ அதுவே நாகரிகமான நாடு' என்று மகாத்மா காந்தி சொன்னார். ஆனால் இன்றைக்கோ, நமது பொது மருத்துவ மனைகளிலும், பல்கலைக் கழகங்களிலும்கூட பெண்களுக்குப் பாதுகாப்பு இல்லை. இந்த இழி நிலையை எதிர்த்து வலுவான குரல்கள் எழுப்ப வேண்டும்.

சந்திப்பு: **எஸ்ஸார்**

புகைப்படம்: **சுப்பா**

ஹோலி பண்டிகைக்கு இன்னும் சில தினங்களே இருந்தன. உதய்பூர் அருகே உள்ள குடலி கிராமம் வண்ண மயமாகக் களை கட்ட ஆரம்பித்திருந்தது. ஆனால் அங்கு அணை கட்டும் வேலையில் ஈடுபட்டிருந்த சுமார் இருநூறு தொழிலாளர் குடும்பங்களுக்கு மட்டும் ஹோலியை வரவேற்கும் உற்சாகம் இல்லை. இரண்டு மாதங்களாக அவ் வேலையில் ஈடுபட்டிருந்தவர்களுக்கு நியாயமாகச் சேர வேண்டிய, அரசு நிர்ணயித்த

# காப்பாற்றுங்கள் பொம்மலாட்டக் கலையை!



• புகைப்படம்: கே. வி. ஆனந்த்.

தினக்கூலியான ஒன்பது ரூபாயை ஐந்து ரூபாயாகக் குறைத்து விட்டிருந்தார் காண்ட்ராக்டர். 'நியாயமாகச் சேர வேண்டிய தொகைக்கு ஒரு பைசா குறைந்தாலும் பெற்றுக் கொள்ள மாட்டோம்' என்று கூற அவர்களுள் யாருக்கும் தைரியம் இல்லை. ஹோலி பண்டிகையைக் கொண்டாடவும் வழியில்லை. குழப்பமும் சோகமுமாக அவர்கள் வாடினார்கள்.

ஒரே நாளில் அவர்களது பிரச்னை தீரவும் அவர்கள் ஹோலிப் பண்டிகையை விமரிசையாகக் கொண்டாடவும் காரணமாக இருந்தது ஒரு பொம்மலாட்ட நிகழ்ச்சி —

குடலியில் வேலை செய்த ஒருவர் தமது நண்பரான பொம்மலாட்டக் கலைஞர் அஜய் குமாரை அணுகினார்; நிலைமையை விளக்கி



அஜய் குமார் பால்.

ளூர். அஜய்குமார் தமது பொம்மைகள் சகிதம் மோட்டார் சைக்கிளில் குடலிக்குப் புறப்பட்டார். அவருடன் ஒரே ஒரு உதவியாளர் மட்டும் சென்றார். போகும் வழியிலேயே அஜய்குமாரின் மூளை ஒரு புதிய பொம்மலாட்ட நிகழ்ச்சிக்கான கதையை யோசித்துத் தயார் செய்தது.

அன்றிரவு குடலியில் இரண்டு லாந்தர் விளக்குகளின் வெளிச்சத்தில் அஜய்குமார் நடத்திய பொம்மலாட்ட நிகழ்ச்சியின் கதை இதுதான்:

கனிமச் சுரங்கம் ஒன்றில் வேலை பார்த்த ஊழியர்களுக்கு நியாயமான — அரசு நிர்ணயித்த — ஊதியம் கிடைக்கவில்லை; முதலாளி பல பொய்க் காரணங்களைக் கூறி அவர்களை ஏமாற்றி வந்தான். ஹோலி பண்டிகை நெருங்கியது. ஊழியர்களிடம் பண்டிகை கொண்டாடப் பணமில்லை. அவர்களுடைய தலைவன் அவர்களிடையே ஒற்றுமை ஏற்படும் வண்ணம் பேசினான். குறைந்த ஊதியம் கொடுத்தால் வாங்கிக் கொள்ள வேண்டாம் என்றும் ஹோலி தினத்தில் தங்கள் அதிருப்தியை வெளிப்படுத்த வண்ணப் பொடிக்குப் பதில் மண்ணையும்,வண்ணத் திரவத்துக்குப் பதில் வெறும் தண்ணீரையும் உபயோகிக்கும்படி கூறினான். வைராக்கியத்துடன் ஊழியர்களும் அந்தச் 'சத்தியாக்கிரஹ'ப் பாணிப் போராட்டத்தில் ஈடுபடவே, முதலாளி மனம் மாறி அவர்களுக்கு நியாயமாகச் சேர வேண்டிய தொகையைத் தந்து விட்டான்.

இந்த நிகழ்ச்சியைப் பார்த்த குடலி மக்களுக்கும் வைராக்கியம் பிறந்தது. மறுநாள் காண்ட்ராக்டர் கூலியைக் குறைத்துக் கொடுத்த போது அதைப் பெற்றுக் கொள்ள மறுத்தனர். கட்டட வேலைக்கு மணல் சுமந்து வந்த லாரிகள் திரும்பிச் சென்ற போது அவற்றில் ஏறி ஓசிப் பிரயாணம் செய்து மாவட்டத் தலைமை அலுவலகத்துக்குச் சென்று புகார் செய்தனர். உடனே அவர்களுக்குச் சேர வேண்டிய முழுத் தொகையையும் கொடுக்கச் சொல்லித் துணைக் கலெக்டர் உத்தரவு பிறப்பிக்க, அந்த வருடம் ஹோலி பண்டிகையை ஊழியர்கள் விமரிசையாகக் கொண்டாடினார்கள்.



• காகிதக் கூழ் கொண்டு பொம்மை தயாரிக்கப்படுகிறது.

• பயிற்சி முகாமில் அஜய் குமார் பால் பொம்மை தயாரிக்கக் கற்றுத் தருகிறார்.



உதய்பூர் மாவட்டத்திலேயே மற்றொரு கிராமமான பஹாராவில், செல்வாக்கு மிக்க ஒருவர் கீழ் ஜாதிப் பெண் ஒருத்தியைக் கற்பழித்துவிட்டார். வழக்கமான அலட்சியத்துடன் போலீஸ் வழக்குப் பதிவு செய்ய மறுத்ததோடு, 'இதெல்லாம் சகஜம். இதைப் பெரிதுபடுத்தாமல் விட்டு விடுவதுதான் நல்லது' என்கிற ரீதியில் பேசியது. அவ்வூர்ப் பெண்கள் ஒன்றுகூடி, குற்றவாளிக்குத் தண்டனை பெற்றுத் தருவதென்று முடிவு செய்தனர். ஆனால் அதை எப்படிச் சாதிப்பது என்பது அவர்களுக்குத் தெரியவில்லை. அஜய்குமாரின் பொம்மலாட்டம்தான் அவர்களுக்கு வழிகாட்டியது.

இம்முறை அஜய்குமார் காந்திய பாணியில் சாத்விகப் போராட்டங்கள் நடத்தும் முறைகளை விளக்கி ஒரு பொம்மலாட்ட நிகழ்ச்சி வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியைப் பார்த்த பஹாரா மஹிளா மண்டல் பெண்கள், மறுநாளே உள்ளூர் காவல் நிலையத்தின் முன் வழி மறித்துக் கூட்டமாக உட்கார்ந்தார்கள். வழக்குப் பதிவு செய்யும் வரை நகர மறுத்தார்கள். அவர்களுள் ஒரு பகுதியினர் மாவட்டத் தலைநகருக்குச் சென்று புகார் செய்தார்கள். அங்கிருந்து பஹாராவுக்கு உடனே ஒயர்லெஸ் செய்தி அனுப்பப்பட்டது. குற்றவாளி கைது செய்யப்பட்டார்.

பொம்மலாட்டத்தைத் தொழிலாகக் கொண்டுள்ள உலகப் புகழ்பெற்ற கலைஞர் அஜய்குமார் பாலின் வாழ்வில் இப்படிப் பலசுவையான சம்பவங்கள், அனுபவங்கள்.

''கிராமப்புறக் கல்வித் திட்டங்களைப் பொம்மலாட்டக் கலையைக் கொண்டு அமுல்படுத்துவது சுலபம் என்று உங்கள் அனுபவங்களின் அடிப்படையில் சொல்லலாமா?'' என்று அஜய்குமாரைக் கேட்டபோது அவர் சொன்னார்:

''நிச்சயமாக! குடும்பநலத் திட்டம், அடிப்படை சுகாதாரம், தன்னிறைவு போன்றவற்றின் முக்கியத்துவத்தை உணர்த்த பொம்மலாட்டக் கலையைப் போல் வேறு கருவி இல்லை என்பேன். நவீன சாதனமான சினிமாவிற்கு இருக்கும் தாக்கம் பொம்மலாட்டத்துக்கும் இருக்க முடியும். இன்னும் கேட்டால் இடத்துக்கும் சந்தர்ப்பச் சூழ்நிலைக்கும் ஏற்ப, பொம்மலாட்ட நிகழ்ச்சியின் கதை வசனத்தை அவ்வப்போது மாற்றி அமைத்துக் கொள்ள முடியும் என்பதால் சினிமாவை விட அதன் மதிப்பு அதிகம் என்றே சொல்வேன். உதாரணமாக, கிராமங்களுக்குப் போகும்போது அந்த வட்டாரங்களில் உள்ள பிரபல்மான மனிதர்களைப் (நல்லவர்களானாலும் சரி, பொல்லாதவர்களானாலும் சரி) போன்ற பாத்திரங்களை எங்கள் நிகழ்ச்சியிலும் புகுத்தி விடுவோம். இதனால் எளிய மக்களைச் சுலபமாக நெருங்க முடிகிறது.''

''இருந்தாலும் பொம்மலாட்டக் கலை சினிமாவைப் போல் பிராபல்யம் அடைய



கல்பனா ஸ்ரீராம்

சில மாதங்களுக்கு முன் அஜய்குமார் பால் சென்னையில் ஒரு பொம்மலாட்டப் பயிற்சி முகாம் நடத்தினார். பொம்மைகள் செய்வது, அவற்றை இயக்குவது, நிகழ்ச்சிகள் தயாரிப்பது போன்ற பயிற்சிகள் இம்முகாமில் அளிக்கப்பட்டன. அதில் பயின்று இக்கலையின்மேல் காதல் கொண்ட, கல்பனா ஸ்ரீராம் (அட்டைப் படம் காண்க) மீண்டும் ஒரு பயிற்சி முகாமுக்கு ஏற்பாடு செய்து அஜய்குமாரைச் சென்னைக்கு வரவழைத்துள்ளார். இரண்டு முகாம்களில் சுமார் 120 பேர்கள் பதினைந்து நாட்களுக்குப் பயிற்சி பெறுகின்றனர். இதில் சேவா சமாஜத்தைச் சேர்ந்த முப்பது மாணவர்கள் இலவசமாகப் பயிற்சி பெறுகின்றனர். இவர்களின் பயிற்சிச் செலவை பல செல்வந்தர்கள் தாமே முன்வந்து ஏற்றுள்ளனர்.

''உங்களுக்கு ஏன் இக்கலை மீது ஆர்வம் ஏற்பட்டது'' என்று கல்பனாவைக் கேட்டபோது அவர் சொன்னார்:

''இந்தியாவில் நிலவும் சூழ்நிலையில் பொம்மலாட்டத்தை விடச் சிறந்த தகவல் தொடர்பு சாதனம் இருக்க முடியாது என்று நான் நம்புகிறேன். குக்கிராமங்களில் கூட நிகழ்ச்சிகளை நடத்த முடியும். இது ஓர் அழகான கலை என்பதோடு ஓர் உபயோகமான கலை என்பதையும் உணர்கிறேன். அதனால் இதனைப் பிரபலமாக்கி, பல பேரிடம் கொண்டு போக என்னால் இயன்றதைச் செய்ய வேண்டும் என்று என்னுள் ஒரு வேகம் பிறந்துவிட்டது. அதனால்தான் இந்தக் கோடையில் வெயிலை வீணாக்காமல் இம்முயற்சியில் இறங்கியிருக்கிறேன்.''

இரண்டு குழந்தைகளுக்குத் தாயான கல்பனா, 'பொம்மலாட்டமும் குழந்தைகள் நடத்தையும்' (Puppetry & juvenile behaviour) என்ற தலைப்பில் டாக்டர் பட்டத்துக்கு ஆராய்ச்சி மேற்கொள்ள இருக்கிறார். நுண்கலையில் எம்.ஏ. பட்டம் பெற்றவர் இவர்.



# சுவைத்து மகிழ்ந்து வளர்ச்சி அடைந்திடும் வழி-ஃபாரெக்ஸ்®

| குழந்தையின் உயரம் மற்றும்* எடையை சோதித்திடுங்கள் | ஆண் குழந்தை | | பெண் குழந்தை | |
|---|---|---|---|---|
| | எடை (கிலோ) | உயரம் (செ.மீ.) | எடை (கிலோ) | உயரம் (செ.மீ.) |
| **3** மாதம் | 5.2 | 59.1 | 4.9 | 58.4 |
| **6** மாதம் | 6.7 | 64.7 | 6.1 | 63.7 |
| **9** மாதம் | 7.3 | 68.2 | 6.9 | 67.0 |
| **12** மாதம் | 8.4 | 73.9 | 7.8 | 72.5 |

* இது இந்தியக் குழந்தை மருத்துவ ஆராய்ச்சிக் கழகத்தால் வழங்கப்பட்டது. இது இந்தியக் குழந்தைகளுக்கு மட்டுமே சராசரியாகும். குழந்தையின் வளர்ச்சி உங்கள் டாக்டரின் திருப்திக்கேற்ற வகையில் இருந்தால் போதும்.

வண்ணமய பாப்பா— பராமரிப்பு வழிகாட்டி இலவசமாய் பெற்றிட இதை அனுப்புங்கள் இங்கே: க்ளின்டியா லிமிடெட் (FPD/31), டாக்டர் அன்னி பெஸன்ட் ரோட், ஒர்லி, பம்பாய்-400 025.,




உங்கள் குழந்தை பரிபூரண அபிவிருத்தியும் வளர்ச்சியும் அடைந்திட போஷாக்கு நிறைந்த ஃபாரெக்ஸ் அளியுங்கள்.

**ஃபாரெக்ஸ்®**

சுவைத்து மகிழ்ந்து வளர்ச்சி அடைந்திடும் வழி

26/203

வில்லையே, அது ஏன்?''

''அது ஒரு கிராமியக் கலை என்பதால் தான். சினிமாவில் இருக்கும் படாடோபம், சினிமா நட்சத்திரங்களைச் சூழ்ந்துள்ள பகட்டு இவற்றையெல்லாம் ஓர் எளிய கிராமியக் கலையில் காண முடியுமா? ஆனால் பொம்மலாட்டம் ஒரு பழம்பெரும் பாரம்பரியக் கலை. அதைக் கற்றுக் கொண்டு நிகழ்ச்சிகள் நடத்துவதற்குநிறையஉழைப்பும் திறமையும் வேண்டும்.''

''அதன் பாரம்பரியம் என்ன...?''

''சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே இக்கலை பிறந்ததாகச் சொல்வார் கள். இதுபற்றிய கர்ண பரம்பரைக் கதை களும் உண்டு. சேவக்ராம் என்று ஒரு மரத் தச்சன் இரண்டு மரப்பொம்மைகள் செய் தானாம். அவற்றுக்கு உயிர் கொடுக்கும்படி சிவபெருமானிடம் வேண்டினானாம். சிவபெருமான் அவன் கேட்ட வரத்தை அளித்தார். ஆனால் பொம்மைகளை சேவக் ராம் தொட்டபோது அவை மீண்டும் உயி ரிழந்து விட்டன! மீண்டும் அவன் சிவபெரு மானிடம் வேண்ட, அவர் பொம்மைகளுக்கு நூல் கட்டி, அவற்றைக் கையால் தொடாமல் இயக்கச் சொன்னாராம். இப்படிப் பிறந்தது தான் பொம்மலாட்டக் கலை என்பார்கள். இன்றைக்கும் ராஜஸ்தானில் சுமார் 2000 குடும்பங்கள் பாரம்பரிய மரப் பொம்மை களை வைத்துக் கொண்டு நிகழ்ச்சிகள் நடத்தி வருகின்றன. அவர்கள் முழுக்க முழுக்க இக்கலையையே நம்பி வாழ்கிறார்கள்.''

சினிமாவுக்கு இருக்கும் ஆதரவு பொம்ம லாட்டக் கலைக்கு இல்லை என்றீர்கள். ஆனால் காலப் போக்குக்கு ஏற்ப இதனை நவீனப் படுத்தாவிட்டால் பிற நவீன சாதனங் களுடன் எப்படிப் போட்டி போட முடியும்? நவீனமாக்குதல் என்பதை ஒரு கலையின் வளர்ச்சிக்கு அடையாளமாக நீங்கள் ஏற்றுக் கொள்ளவில்லையா?''

''பாரம்பரியத்தைக் குலைக்காமல் நவீனப்படுத்துவதுதான் அறிவுடைமை. அப்படிச் செய்யாவிட்டால் கலையின் நயம் அழிந்து போகும். உதாரணமாக நவீன பொம்மலாட்ட நிகழ்ச்சிகளில் ஏராளமான பொம்மைகளையும் அவற்றை இயக்க ஏரான மான நபர்களையும் பயன்படுத்துகிறார்கள். ஒருசெய்தியைஎவ்வளவுகுறைந்தகாலத்தில், எவ்வளவு குறைவான வார்த்தைகளில், எவ்வளவு குறைவான பாத்திரங்களைக் கொண்டு சொல்கிறோம் என்பதில்தான் பொம்மலாட்டத்தின் வெற்றி அடங்கியிருக் கிறது. ராஜஸ்தானின் பாரம்பரியப் பொம்ம லாட்டக் கலைஞர்கள் நிகழ்ச்சி நடத்தினால் இரண்டு அல்லது மூன்று இயக்குனர்கள் மட்டுமே பொம்மைகளைப் பயன்படுத்தி நடத்துவார்கள். நானும் கிராமங்களில் நிகழ்ச்சிகள் அளிக்கும் போது ஒரே ஒரு உதவியாளனை மட்டுமே அழைத்துப் போகி றேன். இதனால் நான் நவீனமாக்குவதற்கு எதிரி என்று அர்த்தமில்லை. நானே ஒரு மொப்பெட் இஞ்ஜினைப் பயன்படுத்தி ஒரு ஜெனரேட்டர் தயாரித்துள்ளேன். எனது



## தோல் பொம்மலாட்டம்!



தோல் பொம்மைகள்

நான்கு விதப் பொம்மைகளைப் பயன் படுத்திப் பொம்மலாட்ட நிகழ்ச்சி நடத்த லாம்: 1. நூலைக் கட்டிய பொம்மைகளை இயக்கி; 2. கையுறை போல் பொம்மையைக் கையில் மாட்டிக் கொண்டு விரல்களால் அசைவு ஏற்படுத்தி; 3. இரு கழிகளில் பொம் மையைச் செருகி, கழிகளை அசைத்து, ஆட்டி; 4. திரைக்குப் பின் பொம்மையை மறைத்து, திரையில் நிழலாகத் தோன்றச் செய்து, இயக்கி. இவற்றுள் கடைசி முறை தான் தோல் பொம்மலாட்டத்தில் கையாளப் படுகிறது.

கிட்டத்தட்ட அழிந்தே போய்விட்ட நிலையில் இருக்கும் தோல் பொம்மலாட்டக்

நிகழ்ச்சிகளை மின் இணைப்பு இல்லாத சில கிராமங்களில் நடத்தும் போது இந்த ஜெனரேட்டரைப் பயன்படுத்துகிறேன். பொம்மைகளைக் காகிதக் கூழ் கொண்டு தயாரிக்கிறேன்.''

''டி. வி. இப்போது வேகமாக இந்தியா முழுவதும் பரவி வருகிறது. டி. வி. யில் பொம்மலாட்ட நிகழ்ச்சிகளை நிறையக் காண்பிக்கச் செய்தால் அக்கலை இன்னும் அதிக மக்களைச் சென்றடைந்து பிரபல்யம் பெறுமே?''

''டி. வி. யில் பொம்மலாட்ட நிகழ்ச்சியைத் திரையிட்டால் அதன் ஜீவனே அழிந்து போகும். கலைஞருக்கும் காண்போருக்கும் இடையே ஒரு அணுக்கம் இருப்பது இக் கலைக்கு மிக அவசியம். மேலும் டி. வி. யில் மறு ஒளிபரப்புக்குப் பணம் தர மாட்டார்கள். இதை நான் மிக வன்மையாக எதிர்க்கிறேன். பல ஏழைக் கலைஞர்களின் நிகழ்ச்சிகளைப் பதிவு செய்து வைத்துக் கொண்டு வாரம் ஒரு முறை ஒளிபரப்புகிறார்கள். — இதனால் கலைஞனுக்கு என்ன லாபம்? பாரம்பரியக் கலைஞனின் ஒரே செல்வம் அவனது கலைதான்! டி. வி. பிரபலமாக ஆக இந்தக் கலைக்கு வரவேற்புக் குறையும். கலைஞனின் வருவாய் பாதிக்கப்படும். வருவாய் தராத கலை நாளாவட்டத்தில் நலிந்து நசியும்.''

''இக்கலையைக் காப்பாற்ற நமது இந்திய அரசு என்ன முயற்சி செய்கிறது? இன்னும் என்ன செய்ய வேண்டும்?''

''மத்திய, மாநில அரசுகள் பொம்மலாட்டக் கலையைப் பேண முயற்சிகள் செய்து கொண்டுதான் இருக்கின்றன. நம் நாட்டில் ஒரு பொம்மலாட்டக் கலைஞரை முதன் முதலில் கௌரவித்த மாநில அரசு தமிழக அரசுதான். திருமதி சீதாலக்ஷ்மி என்ற பெண்மணிக்குச் சென்ற வருடம் விருது வழங்கியது. அந்த அம்மையார் தோல் பொம்மலாட்டக் கலைக்கு மிகச் சிறந்த சேவை செய்து வருகிறார். ஆனால் பல சமயங்களில் அரசாங்கம் எவ்வளவு முயற்சிகள் எடுத்துக் கொண்டாலும் அவற்றின் பலன்கள் கலைஞர்களைச் சென்று அடைய விடாமல் இடையில் உள்ளோர் தடுத்துத் தாங்களே அனுபவித்து வருகின்றனர். பொம்மலாட்டக் கலைஞர்களுக்குத் தரப்படும் சன்மானமும், மிகக் குறைவுதான். ஒரு நாட்டியக் கலைஞருக்கோ இசைக் கலைஞருக்கோ ஆயிரக் கணக்கான ரூபாய்களைத் தயங்காமல் தரும்போது பொம்மலாட்டக் கலைஞருக்குச் சில நூறு ரூபாய்கள் தரவே யோசிக்கின்றது அரசாங்கம். உண்மையிலேயே இந்தக் கலையைக் காப்பாற்ற அரசு விரும்பினால் பொம்மலாட்டக் கலைஞர்களின் குழந்தைகள் தங்கிப் படிக்க, விடுதிகளுடன் கூடிய ஒரு பள்ளியை ஆரம்பிக்க வேண்டும். இப்பள்ளிகளில் அக்குழந்தைகள் தங்கள் பாரம்பரியக் கலையைக் கற்பதோடு அடிப்படைக் கல்வியும் பெற வேண்டும். அப்போதுதான் கலைஞர்களின் வளர்ச்சி முழுமையானதாக இருக்கும். பாரம்பரியம் குலையாமல் புதிய யுக்திகள் புகுத்தப்பட்டு, கலையும் பரிமளிக்கும்.''

''பள்ளி, கல்லூரிகளில் பொம்மலாட்டத்தை ஒரு பாடமாகச் சொல்லித் தந்தால்...?''

''சொல்லித் தரலாம். இன்னும் கேட்டால்

---

கலையை, கைகொடுத்துக் காப்பாற்றி வருபவர் ஐம்பத்தெட்டு வயதான திரு. லட்சுமணன். மத்தியத் தோல் ஆராய்ச்சி நிறுவனத்தில் விஞ்ஞானியாகப் பணியாற்றி வரும் லட்சுமணன், சென்னை ஸ்கூல் ஆஃப் ஆர்ட்ஸில் முறையாக ஓவியக்கலை பயின்றவர். டிரேஸிங் பேப்பர் போன்ற மெல்லிய தோலின் அடியில் படத்தை வைத்துக் கொண்டு தோலில் படத்தை trace செய்து கொண்டு வண்ணம் தீட்டுகிறார்கள். குறைந்தபட்சம் 44 அங்குல நீளத்தில் தோல் இருப்பது அவசியம். நன்கு வளர்ந்த ஆடு, மாடுகளின் தோல்தான் இதற்கு ஏற்றது. டிரான்ஸ்பரன்ட் தோலாக மாற்ற, கிட்டத்தட்ட இருபது நாள் பதனிடுதல் தேவை. இதற்கான தொழில்நுட்பத் திறன் மத்தியத் தோல் ஆராய்ச்சிக் கழகத்தினுடையது. ரகசியமானது!

புராண நிகழ்ச்சிகள் மட்டுமின்றி, இருபது அம்சத் திட்டம், கு.க. திட்டம், வனவிலங்குகள் பாதுகாப்புத் திட்டம் போன்றவற்றின் முக்கியத்துவத்தை உணர்த்த நிகழ்ச்சிகள் தயாரித்து வருகிறார் லட்சுமணன். விழுப்புரத்தில் கம்பன் கழகச் சார்பில் ராமாயண நிகழ்ச்சியும் சமீபத்தில் ஸ்ரீரங்கம் ராஜகோபுர கும்பாபிஷேகத்தின் போது சிறப்பு நிகழ்ச்சிகளும் அளித்தார் லட்சுமணன். சேலத்தில் இவர் நிகழ்ச்சியை மக்கள் மரத்தின் மீது கூட உட்கார்ந்து பார்த்தார்கள்! ஒரு சமயம் இவர் ஊர் திரும்ப பஸ் ஏறியபோது சாமான்களைப் பார்த்துவிட்டு கண்டக்டர் ஏற்றிக் கொள்ள மறுத்து விட்டார். ''நமக்காக மெட்ராஸிலேருந்து வந்து நிகழ்ச்சி நடத்தியிருக்காங்க. அவங்களையா ஏத்திக்க மாட்டேங்கிறே? ஏத்துய்யா!'' என்று கிராம மக்கள் கண்டக்டருடன் சண்டை போட்டு லட்சுமணனை பஸ் ஏற்றி அனுப்பி வைத்தார்கள்.

தோல் பொம்மலாட்டக்கலை அழிந்து வருகிறது. அதைப் பாதுகாக்க ஒரு தனி நிறுவனம் தேவை; இக்கலையில் புதுமைகளைப் புகுத்தவும் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளவும் இத்தகைய நிறுவனம் உதவும்; தோல் பொம்மை மியூசியம் ஒன்று அமைக்க வேண்டும் என்பன போன்ற நோக்கங்களுடன் ஆரம்பிக்கப்பட்டது 'இந்திய பப்பெட் அகாடமி.' லட்சுமணன் அதன் தலைவர்.

''எனக்குக் குழந்தை குட்டிகள் கிடையாது. பொம்மலாட்டக்கலைதான் என் குழந்தை. அதனால் இக்கலைக்காக என் சொந்தப் பணத்தைச் செலவு செய்து வருகிறேன். என் குழுவில் இப்போது ஏழு பேர் பயிற்சி பெற்று வருகிறார்கள்'' என்கிறார் லட்சுமணன்.

— சாருகேசி

குழந்தைகளுக்குப் பொம்மலாட்டம் மூலமாகவே அனைத்துப் பாடங்களையும் சொல்லித் தரலாம்! அப்படி ஒரு பொம்மலாட்டப் பாடத் திட்டத்தை நான் வகுத்தே வைத்திருக்கிறேன். பள்ளி ஆசிரியர்களுக்கு இக்கலையைக் கற்பிக்கும் திட்டத்தையும் வகுத்திருக்கிறேன். எனக்கு இந்தக் கலையில் ஆர்வம் ஏற்பட்டதே பில் பேயர்ட் என்ற அமெரிக்க பொம்மலாட்டக் கலைஞரின் நிகழ்ச்சியைப் பார்த்தபிறகுதான். அவர் 'டிரெஷர் ஐலண்ட்' கதையை நிகழ்ச்சியாக வழங்கினர். காட்சி மாற்றங்களுக்கு இடையே சிறு சிறு கல்வி நிகழ்ச்சிகளையும் வழங்கினர். இவை என்னை மிகவும் கவர்ந்தன. முதியோர் கல்வித் திட்டத்துக்கான பயிற்சிக்குப் போன போதும் பிறகு கல்கத்தாவின் சேரிகளில் கல்வித் திட்டங்களை அமுல்படுத்தப் பணியாற்றிய போதும் இந்தக் கலையின் சக்தியை நான் முழுவதும் உணர்ந்தேன்.''

''அயல்நாடுகளில் இக்கலையின் அந்தஸ்து என்ன?''

''எங்கு சென்றாலும் இந்திய பொம்மலாட்டக் கலைஞர்கள் மிகுந்த மரியாதையுடன் நடத்தப்படுகின்றனர். அவர்களது நிகழ்ச்சிகளுக்கு அமோக வரவேற்பு இருக்கிறது. 1964 இல் புகாரெஸ்டில் நடந்த பொம்மலாட்டக் கலைவிழாவில் இந்திய நிகழ்ச்சி முதல் பரிசு பெற்றது. ஆனால் உலகெங்கிலும் பொம்மலாட்டக் கலைஞர்கள் ஏழைகளாகவே இருக்கிறார்கள். எல்லா நாடுகளிலுமே இக்கலை உயிர் வாழப் போராடிக் கொண்டுதான் இருக்கிறது.''

அஜய் குமாரிடம் விடைபெற்று எழுந்த போது தமது பொம்மைக் குழந்தைகளை நமக்கு அறிமுகம் செய்து வைத்தார். ''இவற்றோடு உறவாடி உறவாடி ஒரு பந்தமே ஏற்பட்டு விடுகிறது. இவைகளைப் பிரிந்து என்னால் இருக்கவே முடியாது'' என்றார் உணர்ச்சி வசப்பட்டு.

''அமெரிக்காவில் ஒரு நிகழ்ச்சிக்குப் பிறகு ஒரு சிறுவன் மேடைக்கு வந்தான். எனது பொம்மைகளுள் ஒன்று அவனுக்கு ரொம்பப் பிடித்துப் போயிற்று. அதை அவன் பணக்காரத் தந்தை விலை பேசினர். நான் அதிர்ந்து போனேன். 'உங்கள் மகனின் விலையைச் சொல்ல முடியுமானால் நான் என் பொம்மைக்கு விலை சொல்கிறேன்' என்றேன். அவர் பேசாமல் போய் விட்டார். ஆனால் இன்னொரு சந்தர்ப்பத்தில் வேறு ஒரு சிறுவன் மேடைக்கு வந்து எனது பொம்மைகளுள் ஒன்றை எடுத்து ஆசையாக முத்தமிட்டு விட்டுத் தந்தான். இந்தச் செயல் என்னை நெகிழச் செய்தது. அப்பொம்மையை அவனுக்கே பரிசாகத் தந்தேன். உடனே அச்சிறுவன் தன்னுடன் எடுத்து வந்திருந்த ஒரு சிறு குரங்கு பொம்மையை எடுத்து எனக்குப் பரிசளித்தான். அதை இன்னும் பத்திரமாக வைத்திருக்கிறேன்.''

அந்தக் கலைஞரின் குழந்தை உள்ளத்தை எண்ணி வியந்தபடி விடைபெற்றோம்.

பேட்டி: **சீதா ரவி**

புகைப்படங்கள், மேலட்டை வண்ணப்படம்:

**யோகா**

---



நடிகை: பேப்பரைப் படிச்சுட்டுச் சிரிக்கறீங்களே... ஏதும் ஜோக்கா?

கணவன்: ஊஹூம்! உன்னையும் என்னையும் பத்திய நியூஸ் தான் போட்டிருக்கான்... நடிகை நளினிஸ்ரீ தன் கணவருக்கு சம உரிமை அளிப்பவர்னு!

— உ. ராஜாஜி

---

# அடுத்த இதழில்...



## அந்த 10 பேரின் எதிர்காலம்..?

## —அன்பழகன் பேட்டி



# கல்கி

## விடுமுறை மலர் 1987

**விளையாட்டு வீரர்கள்:**

ஷைனி ஆபிரகாம் — செஸ் ஆனந்த்.

**விண்வெளி சாகசங்கள்:**

ராகேஷ் சர்மா; ருஷ்ய — அமெரிக்க சாதனைகள்.

**கோகுலம் பக்கங்கள்:**

வள்ளியப்பா தயாரிப்பு.

**ஆன்மீக அற்புதங்கள்:**

ஸ்ரீரங்கம், சிதம்பரம் — தனுசு ஓவியங்கள்.

**நகைச்சுவை அம்சங்கள்:**

நடனம், செல்லம், அரஸ், உமாபதி வழங்கும் வண்ணச் சிரிப்புக்கள்!

**சிறுகதைகள்:**

பிரபல எழுத்தாளர்களின் இருபதுக்கும் மேற்பட்ட சிறுகதைகள் — வேதா, அரஸ், மாருதி, ம. செ. முதலிய பிரபல ஓவியர்களின் வண்ணச் சித்திரங்களுடன்.

**அமரர் கல்கி**

எழுதிய இலங்கைப் பயணக் கட்டுரை — மாலி சித்திரங்களுடன்.

**காத்தாடி ராமமூர்த்தி**

தயாரிப்பில் உருவான மேடை நாடகம்.

**புஷ்பா தங்கதுரை**

வழங்கும் மர்ம நாவல்.

**வண்ண வண்ணப் பக்கங்களில் மிளிரும்......**

**மாலே தீவுகள்:**

நெஞ்சை அள்ளும் இயற்கைக் காட்சிகள்.

**சினிமா நட்சத்திரங்கள்:**

சத்யராஜ் — ரேகா.

**அரசியல் தலைவர்கள்:**

வி. பி. சிங் — ப. சிதம்பரம்.


**இசை வல்லுனர்கள்:**

கன்னியாகுமரி — ஜாகிர் ஹுசேன்.

**320 பக்கங்கள் : : விலை ரூ. பத்துதான்!**

மே 15 ஆம் தேதி எல்லா கல்கி ஏஜெண்டுகளிடமும் கிடைக்கும். உங்கள் பிரதிக்கு உடனே பதிவு செய்து கொள்ளுங்கள். ரிஜிஸ்தர் தபாலில் பெற ரூ. 15 அனுப்பவும்.


உங்களோட எனக்கு என்ன தகராறு? ஒண்ணுமில்லே!
நமக்குள்ளே ஒரு சர்ச்சையும் இல்லேங்கறேனே!
பிரதமரை நீக்க அதிபருக்கு அதிகாரம் உண்டா?
ஒரு ஆராய்ச்சி



ஈழத் தமிழர்
மொதல்ல பால் கொடுக்கணும்!
தமிழக மக்கள்
ரூ. நான்கு கோடி உதவி


தண்ணீரை திறக்க வேண்டாம்!



# கல்கி

1987 மே 10
மலர் 45 இதழ் 41
பிரபவ சித்திரை 27



## நிதி நிர்வாகமும் தெரியவில்லை ; நீர் நிர்வாகமும் தெரியவில்லை !

பிச்சை எடுப்பவனிடம் சிக்கன உபதேசம் செய்யும் அதிமேதாவித்தனத்தில் இறங்கியிருக்கிறது தமிழக அரசு! சட்டியில் இருந்தால்தானே அகப்பையில் வரும் என்பது கூடத் தெரியவில்லை அதற்கு!

காலையில் எழுந்தால் குளிப்பது கிடக்கட்டும், பல் துலக்கவே தண்ணீர் இல்லை. தாகம் தணிக்கவும் சமையல் செய்யவும் முடியாமல் கிலோ மீட்டர் நீளத்துக்குக் குடங்களின் க்யூ. பம்ப் அடித்தால் தோள் துவண்டு, நாவரள்வதுடன் சரி, சொட்டு நீரைக் காணோம்! இந்த லட்சணத்தில், ''குடி நீரை வீணாக்காதீர்கள்! சிக்கனமாய்ச் செலவு செய்யுங்கள்!'' என்று அலறுகின்றன சென்னையின் பல இடங்களில் இருபதடி பானர்கள்! அதிலும் எம்.ஜி. ஆர். படம்! ஜேப்பியாருக்குப் பப்ளிசிடி! வரிப் பணத்தில் விளம்பரம் செய்து கொண்டு போகட்டும், விடிவு காலம் எப்போது?

தமிழகத்தின் தலைநகரில்தான் முன்பு குடிநீர்ப் பஞ்சம் கடுமையாக இருக்கும். இந்த ஆண்டு தமிழகத்தின் பெருநகரங்களிலிருந்தும் குக்கிராமங்களிலிருந்தும் சோகக் கதைகள் வந்த வண்ணமிருக்கின்றன. அரசோ, நாளுக்கொரு முரண்பட்ட அறிக்கை விட்ட வண்ணமிருக்கிறது. 'தண்ணீர்ப் பற்றாக்குறையை சமாளித்து விடுவோம்' என்கிறது. கூடவே, 'வறட்சி, வந்து பாருங்கள்!' என்று மத்திய அரசுக்குத் தூது அனுப்புகிறது. 'தண்ணீர் விநியோக அளவு குறையாது' என்கிறது; உடனேயே, 'ஒருநாள் விட்டு ஒரு நாள் நீர் சப்ளை' என்கிறது.

இந்தப் பஞ்சம் இன்று நேற்றல்ல, ஆண்டு தோறும் கோடை காலத்தில் வருகிற ஒன்றுதான். யோசித்து நிரந்தரப் பரிகாரம் காணக் கூடாதா? 'கோடையைச் சமாளித்து விட்டால் அப்புறம் தண்ணீர்த் தட்டுப்பாடு பற்றிச் சிந்திக்க வேண்டிய அவசியம் என்ன?' என்று கல்கி பேட்டியிலே அமைச்சரே கேட்கிறார்! யாரிடம் சொல்லி அழ?

நிரந்தரப் பரிகாரத்துக்குத் திட்டங்கள் இல்லாமல் போகவில்லை. பேசப்படுகின்றன; பத்திரிகைகளில் செய்தியாக வெளியிடப்படுகின்றன. இரு வகையிலும் தலைவர்கள் பப்ளிசிடி பெற்றுக் கொண்டதோடு சரி, முடிந்தது கதை!

வீராணம் திட்டத்துக்கு மூடு விழா நடத்தியது அ.தி.மு.க. அரசு. வரி செலுத்தும் குடிமகனுக்குப் பல கோடி ரூபாய் நஷ்டமாயிற்று.

'இதோ கிருஷ்ணா நதி நீர் வரப் போகிறது' என்றது எம்.ஜி. ஆர். அரசு. தமிழனின் பல கோடி ரூபாய் வரிப் பணம் ஆந்திர மாநிலத்துக்கு அன்பளிப்பாகப் போய்ச் சேர்ந்ததுடன் சரி, கிருஷ்ணா, கோவிந்தா ஆயிற்று!'

'இதோ பார் மந்திரத்தில் மாங்காய்! கொட்டப் போகிறது செயற்கை மழை! விமானம் வாங்கியாயிற்று! மேகங்கள் மீது மழை விதை தெளிக்க அயல்நாட்டு நிபுணர்கள் வந்தாயிற்று' என்றது தமிழக அரசு. சிலரது காட்டிலே மட்டும் பண மழை பெய்ததுடன் சரி. தமிழனுக்கு மேலும் பல கோடி நஷ்டம்! அண்ணாந்து பார்த்துக் கழுத்து வலி மிச்சம்!

போதாக்குறைக்கு எம்.ஜி. ஆர்., அமெரிக்கா சென்று வந்தார். 'அற்புதமான ஐடியா கொண்டு வந்திருக்கிறேன்! கடல் நீரைக் குடி நீராக்குவேன்' என்றார். கடல் அலைகள் பொங்கிச் சிரிக்கின்றன; நமக்கோ வயிறு பற்றி எரிகிறது!

அப்புறம் ஏதோ கட்டளைக் கால்வாய் என்று பேச்சு அடிபட்டது. ஒரு கட்டளையும் பிறக்கவில்லை. நீருக்குப் பதில் குழாயில் வரும் காற்று போல் அதுவும் புஸ்....

இப்போது இவை எல்லாவற்றையும் அம்போ என்று விட்டு விட்டு, மாநில அரசின் தலைமைச் செயலர் தலைமையில் ஒரு குழு அமெரிக்காவுக்குப் பறந்து போயிருக்கிறது! எதற்குத் தெரியுமா? சென்னையில் நிலத்தடி நீரைப் பயன்படுத்த உலக வங்கியிடம் ஒரு திட்டத்தைத் தந்திருந்ததாம் தமிழக அரசு. அதை அமுல்படுத்தப் பண உதவி கோரிப் பெறத்தான் பறந்திருக்கிறது இந்தக் குழு! இவர்கள் போய்க் கேட்டவுடனேயே உலக வங்கி பதறி அடித்துக் கொண்டு, கோடி கோடியாய்க் கொட்டிக் கொடுத்து விடும் பாருங்கள்! வாரி எடுத்துக் கொண்டு திரும்பி, கண் மூடித் திறக்கும் நேரத்தில் நகரெங்கும் ஆழ்குழாய்க் கிணறுகள் இறக்க, பொங்கு புனல்கள் போல் தண்ணீர், திரும்பிய பக்கமெல்லாம் பீச்சி அடிக்கப் போகிறது பாருங்கள்! கோடையில் சென்னை, குளிர் குற்றாலமாய் மாறி விடப் போகிறது பாருங்கள்! எதிர் பார்த்துப் பார்த்து வெயிலில் கண்கள் எரிய, இமைகள் தாமாகவே மூடிக் கொள்ள, பகற் கனவில் பொங்கு புனல்கள் நர்த்தனமாடக் காணுங்கள்! யார் கண்டது, உங்களுக்கு அதிர்ஷ்டமிருந்தால் அவற்றின் இடையே எம்.ஜி. ஆரும், ஜெயலலிதாவும் டூயட் பாடி ஆடக் கூடச் செய்யலாம்!

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்.



க்ளூகோன்-டி ஸூப்பர்ஹீரோ.
களைப்பூட்டும்
வெய்யிலிலும்
களிப்பூட்டும்
சக்திப்பெருக்கு
Glucon-D
200g
High-grade, finely powdered glucose enriched with vitamin D and calcium phosphates.
200 GRAMS NET
GLINDIA LIMITED
Dr. Annie Besant Road
Bombay 400 025, India.
Max. Price
Rs.
Local Taxes
Extra
புதிய, அசல், வண்ணமயமான பேக்கைப் பார்த்து வாங்குவீர்.
களைப்பூட்டும் வெய்யில் நாளிலே உங்கள் குழந்தைக்குத் தேவை க்ளூகோன்-டி: க்ளூகோஸ், விட்டமின்-டி, கால்ஸியம் ஃபாஸ்ஃபேட்டுகள் அடங்கிய உடனடி சக்திபானம்.
பழரசம், தேநீர், காபி அல்லது தண்ணீரிலே கலந்து அருந்த, குடும்பத்தினர் அனைவர்க்குமே புத்துணர்ச்சி தரும் பானமாக அமைகிறது. 100, 200, 500 கிராம் பேக்கெட்டுகளில் கிடைக்கிறது.
க்ளூகோன்-டி
ஸூப்பர்ஹீரோ மிகவிரும்பும் சக்திபானம்.


HTA 1097

* வி. சூர்யா, மன்னார்குடி

? ஆவிகளுடன் உரையாடிய அனுபவம் உண்டா?

! பல ஆண்டுகளுக்கு முன்னால் ஒரு மடாதிபதி என் தகப்பனாரின் ஆவியைத் தருவிப்பதாகவும் அவருடன் பேச வருமாறும் என்னை அழைத்தார். 'எனக்கு இதுபோன்ற காரியங்களில் நம்பிக்கை இல்லை, மன்னிக்கவும்' என்று பதிலெழுதி விட்டேன். நான் உரையாடி, உறவாடி, இரங்கி அனுபவிக்கும் ஒரே ஆவி, காலைகாப்பிக்கோப்பையிலிருந்து கிளம்புவது.

* சைதை வி. முரளி, சென்னை—15

? சில வாரங்களுக்கு முன்பு கூட 'ஆற்றலை உணராத அனுமன்' என்று ராஜீவை வர்ணித்துத் தலையங்கம் எழுதிய கல்கி, இன்று அவரைத் 'திருவாளர் அகத்தம்' என்று கூறுவது ஏன்?

! அதற்குச் சில வாரங்களுக்கு முன்னால் அவரை 'ஓஹோஹோ' என்று கல்கி தலையங்கத்தில் பாராட்டியதும் உண்டு. என்ன செய்ய, ராஜீவின் போக்கு மாறும்போது விமர்சனமும் மாறத்தானே வேண்டியிருக்கிறது!

* பழ. நாகப்பன், சென்னை—7

? நெடுஞ்செழியனை அதிகாரிகள் அவமதித்தார்களாமே?

! அதற்காக நெடுஞ்செழியன் கோபப்பட்டாயிற்று: அந்த அதிகாரிமீது நடவடிக்கையும் எடுத்தாகியிருக்கும். ஆனால் நெடுஞ்செழியனை உத்தேசித்து ரயில்வே அதிகாரிகள் உயர் நீதிமன்றத்தின் பிரதம நீதிபதியை அவமதித்துவிட்டார்களே, அதற்காக நெடுஞ்செழியன் வருத்தமாவது தெரிவித்தாரோ?

* எம். கல்யாண சுந்தரம், திருநரையூர்

? 'கருணாநிதி சந்திரமண்டலம் சென்றாலும் அவரை விட மாட்டேன்! பின் தொடர்வேன்' என்று காளிமுத்து கூறியிருக்கிறாரே!

! **True follower** போலும்!

* டி. டேவிட் ஜான் பிரிட்டோ,
திருத்துறைப்பூண்டி

? ராஜீவ் காந்தியை டிஸ்மிஸ் செய்வது பற்றி ஜனாதிபதி சட்ட நிபுணர்களைக் கலந்து ஆலோசித்தாராமே?

! 'ஐயய்யோ! பிரதமரைப் பதவி நீக்கம் செய்துவிடாதீர்கள்! உங்களுக்குப் புண்ணியமாகப் போகட்டும்! பிரதமர் பிழைத்துப் போகட்டும்! அனாவசியக் குழப்பம் ஏற்படுத்த வேண்டாம்!' என்றெல்லாம் கமலாபதி திரிபாதி ஒரு குரல் அழுதிருப்பதைப்



* புதிய முயற்சி

* கோபித்தார். வருந்துவாரா?





* ஒரு குரல் அழுது....



* வாதாட ஒரு வழக்கு



* நாலுவித மகிழ்ச்சி



* சந்திரனிலும் தொடர்ந்து

## ஆவிகளுடன் உரையாடிய அனுபவம் உண்டா?

பார்த்தால், நீங்கள் குறிப்பிட்டுள்ள செய்தியில் உண்மை இருக்கும் போலத்தான் தோன்றுகிறது!

* நிலாப்ரியன், நந்தியநல்லூர்

? ஓர் அரசியல் ஜோக் ப்ளீஸ்!

! மாண்புமிகு முதலமைச்சர் சேக்கிழாரை விட, மாண்புமிகு முதலமைச்சர் எம்.ஜி. ஆரை மேலானவராகத் தாம் கருதுவதாக டீ.வி. பேட்டியில் கோவி. மணிசேகரன், கூறக் கேட்டபோது, பிரமாத ஜோக்காகவே அது விளங்கி, குபீர் சிரிப்பை வரவழைத்தது. 'எழுத்தின் மதிப்பு உயர உயர, எழுத்தாளன் இப்படித் தாழ்ந்துதான் போக வேண்டுமா?'என்று அந்த நிகழ்ச்சியின் இதர சில பகுதிகள் எண்ண வைத்தன.

* கே.ஜி.எஃப். பழனிச்சாமி, பெங்களூர்

? சிவசங்கரியின் கதைசொல்லும் காஸெட் — புது முயற்சி பற்றி?

! அவர் கதை சொல்லவில்லை; கதை படித்திருக்கிறார். கதை சொன்னால் ஒருவேளை இன்னும்கூட அதிகமாக ரசிப்பது சாத்தியமாகலாம். ஆனால் கதை படித்தவரை, உணர்ச்சியோடும் பல்வேறு கதாபாத்திரங்களை இனம் கண்டு கொள்ள வசதியாக தொனிவித்தியாசத்தோடும்படித்திருக்கிறார். என்னதானுகட்டும், நாமே படித்து, கதாபாத்திரங்களை மனத் திரையில் நடமாடவிட்டு ரசிப்பதில் உள்ள இன்பம் இதில் கிட்டவில்லை என்பதே என் முடிவு. 'அவ்விடத்துக் கருத்து எப்படியோ?

* க. தியாகராஜன், நெய்வேலி *

? 'இலவச மதிய உணவுத் திட்டத்தால் பயனில்லை; அது வறுமையைத் தொடரச் செய்யும் திட்டமே' என்று பால்கிவாலா கூறியிருப்பது பற்றி?

! பொருளாதார ரீதியிலும் லட்சிய நோக்கிலும் பார்த்தால் அவர் கூறுவது உண்மையே. தாம்பெற்றபிள்ளைகளுக்குத்தாமே உணவளிக்க முடியாத நிலையில் பெற்றோரை வைத்திருப்பது தவறுதான். வேலை வாய்ப்புகளைப் பெருக்கி, விலைவாசிக்கேற்ப நியாயமான. ஊதியம் கிடைக்கச் செய்து, தத்தம் குடும்பத்தைத் தாங்களே காத்துக் கொள்ள ஏற்ற சூழலை மக்களுக்கு உருவாக்குவது தான் அரசின் கடமை; ஆனால் மனிதாபிமான நோக்கில் பார்க்கும்போது, நம் கருத்து மாறிவிடுகிறது. 'பெற்றோரின் வாழ்க்கைத் தரம் என்றோ உயரும்வரை காத்திராமல் இன்றே குழந்தைகளுக்குச் சத்துணவு கிடைக்கவேண்டும்; அதனால்அவர்கள் உடல் வளர்ச்சியிலும், அறிவாற்றலிலும் சிறக்க வேண்டும். அது எதிர்கால இந்தியாவின் சிறப்புக்கு இன்று போடப்படும் அஸ்திவாரம்' என்று பால்கிவாலாவுடன் வாதாடத் தோன்றுகிறது.

* வி. தாண்டவமூர்த்தி, பள்ளவெளி

? வி.பி. சிங், 'பதவி பறிப்பு' என்று தலையங்கத்தில் எழுதப்பட்டுள்ளதே, அவராகவேதானே ராஜினமா செய்தார்?

! பதவிப் பறிப்பில் பல வகை உண்டு. டிஸ்மிஸ் செய்வது ஒன்று; ராஜினமாவைக் கோரிப் பெறுவது ஒன்று! ராஜினமா செய்ய வேண்டிய சூழலை உருவாக்குவது ஒன்று. வி.பி. சிங், அமைச்சரவையில் தாம் நீடிப்பதை விரும்பாமல் தாமாகவே ராஜினமா செய்துவிடவில்லை. அமைச்சரவையில் அவர் நீடிப்பதைப் பிரதமர் விரும்பாததால் ராஜினமா செய்ய வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளானர்.

* வி.கே. சங்கர், சென்னை—35

? ராம ஜன்ம பூமி பிரச்னைக்குத் தீர்வு காணும் வகையில் சையது ஷகபுதின், காஞ்சி சங்கராச்சாரியாரைச் சந்தித்தது பற்றி?

! பிரச்னை தீருகிறதோ இல்லையோ, தீர வேண்டும் என்ற நல்லெண்ணம் இருப்பது புரிகிறது. இதுவே பெரிய முன்னேற்றம் தான். சுமுகமான தீர்வுக்குப் பரமாச்சார்யாளுடன் சேர்ந்து நாமும் பிரார்த்திப்போம். 'நம்மில் ஒற்றுமை நீங்கிடில் அனைவர்க்கும் தாழ்வே.

* ராஜகோபால், சென்னை—82

? சமீபத்தில் உங்களிடம் பாராட்டைப் பெற்றவர் யார்?

! நாலுவிதமாக மகிழ்ச்சி அளித்த கோவி. மணிசேகரன். 'மாண்புமிகு முதலமைச்சர் காரணமாகத்தான் கோவிக்குக் கிடைத்தது ராஜராஜன் பரிசு' என்று சிலர் கூறிய போதிலும், ஒரு நல்ல நூலுக்கு அப்பரிசு கிடைத்ததில் முதல் மகிழ்ச்சி. 'வேங்கை வனம்', கதாபாத்திரங்களின் வடிவமைப்பினாலும், குணச்சித்திரங்களைச் செதுக்கிய அழகாலும், கதைப் பின்னலின் சிறப்பாலும், விறுவிறுப்பான நடையினாலும் தரமானது. ஒரு தமிழ் எழுத்தாளர் லட்ச ரூபாய் பரிசு அளித்து மாநில முதல்வரால் கௌரவிக்கப்பட்டிருக்கிறார் என்பதில் இரண்டாவது மகிழ்ச்சி. அந்த எழுத்தாளர் நண்பர் மணிசேகரனாக அமைந்ததில் மூன்றாவது மகிழ்ச்சி. கதை கல்கியில் வெளியானது என்பதில் நான்காவது மகிழ்ச்சி.

* ரூ 15 பரிசு பெறுபவர்:

க. தியாகராஜன்,
எம். 152/2, மந்தாரக்குப்பம் காலனி,
நெய்வேலி—607 802

## "Our family album will be enriched with this masterpiece of regal elegance"

"When I look at our old family portraits, my parents resplendent in heavy brocade and exquisite silk, it brings back memories of happy days gone by. Which is why I chose Gwalior Suiting for this formal portrait. I knew that its subtle grace and exquisite weave would give the picture that timeless touch of regal elegance."

M.A.K. PATAUDI

**GWALIOR SUITING**

**IN A CLASS OF ITS OWN**

A PRODUCT OF GRASIM INDUSTRIES LTD



APP-GR-87-01-283



**"என் மகளுக்கு கேர்ஃப்ரீ வாங்கித்தர நான் முடிவுசெய்தது ஏனென்றால்."**

அந்த நாட்கள் எனக்கு இன்றும் நினைவிருக்கு. அப்போது எனக்கு என் மகள் வயதிருக்கும். மாதத்தில் அந்த 5 நாட்களை எத்தனை கடினமாக கடந்தேன்... சங்கடம், தொல்லை, சிரமம். அதைவிட மோசம் என்னவென்றால் எங்கள் காலத்தில் வீட்டுத் தயாரிப்புகளையே உபயோகித்தோம். அது தர்மசங்கடமாயிருக்கும். அதைத் துவைத்து காயப் போட்டு போதும் போதும் என்றாகிவிடும். ஆனால், இப்போது காலம் மாறிவிட்டது.

நான் வாழ்ந்த காலம் வேறு. அதிலிருந்து முற்றிலும் மாறுபட்ட காலத்தில் வாழ்கிறாள் என் மகள். இக்காலப் பெண்கள் மாதத்தின் அந்த 5 நாட்களில் கூட மிகத் துடிப்போடு செயல்பட வேண்டியுள்ளது. எங்கள் காலத்தை விட இப்போது, மாறிவரும் உலகிற்கேற்ப பன்மடங்கு சுறுசுறுப்புடன் இயங்க வேண்டியுள்ளது. ஆகவேதான், என் மகளுக்கு நான் கேர்ஃப்ரீ தேர்ந்தெடுத்தேன். காரணம், நான் இளம் பெண்ணாக இருந்தபோது அனுபவப்பட்டதைப் போல், என் மகளும் சிரம்ப்படக் கூடாதல்லவா.

முக்கியமான அம்சம் என்னவென்றால் கேர்ஃப்ரீ ஒரு ரெடிமேட் நாப்கின். நான் அந்தக் காலத்தில் செய்தது போல் என் மகள் துவைத்துக் காயப் போட்டு சங்கடப்பட வேண்டியதில்லை. தேவையானபோது ஒவ்வொரு முறையும் புத்தம் புதிய சுத்தமான ஒரு நாப்கினை எடுத்து அவள் உபயோகிக்கலாம். ஒரு தாயாகிய எனக்கு எது முக்கியம் என்றால், கேர்ஃப்ரீ மிகமிக சுகாதாரமானது என்பதுதான்.

**உலர்வும் சுகமும்**

அது, கனமில்லாமல் மெல்லியதாக அடக்கமாக இருந்தாலும் என் மகளுக்கு தேவையான பாதுகாப்பைத் தருகிறது. மாத விலக்கை நாப்கினுள் விரைவாக உறிஞ்சிக் கொள்ளக்கூடிய அது, நன்கு அதிகம் உறிஞ்சும் அடுக்குகள் கொண்டது. அது எப்போதுமே உலாவான உணர்வோடும் வசதியாகவும் வைத்துக் கொள்வதாக என் மகளே கூறுகிறாள். அது மட்டுமா, கேர்ஃப்ரீ எக்ஸ்ட்ரா லார்ஜும் (கூடுதலான பெரிய நாப்கின்) உள்ளது.

நீண்ட, அகன்ற, துடிப்பான கேர்ஃப்ரீ எக்ஸ்ட்ரா லார்ஜ், அவளுக்கு கூடுதல் பாதுகாப்பையும் பத்திரமான உணர்வையும் அளிக்கிறது— அந்த சங்கடமான நாட்களில் அல்லது அவளுக்கு



அது தேவைப்பட்டபோது.

கேர்ஃப்ரீ உபயோகிப்பதால் வெளியில் சென்று சுற்றி வந்தாலும்கூட அவள் பாதுகாப்பாகவும், பத்திரமாகவும் உணர்கிறாள்.

ஆகவேதான், எங்கள் காலத்தில் கிடைக்காத ஒன்றை என் மகளுக்குத் தர முடிவதை எண்ணி பூரிப்படைகிறேன்...அதுதான் கேர்ஃப்ரீ வசதி...கேர்ஃப்ரீ பாதுகாப்பு, மாறிவரும் காலத்தோடு நாமும் மாற வேண்டாமா!

*கேர்ஃப்ரீ சானிட்டரி நாப்கின் - இன்றைய மாறிவரும் உலகிற்கேற்ற முழுமையான சுகம், முழுமையான பாதுகாப்பு*




10 உள்ள பேக்கிலும் சிக்கனமிக்க 20 மற்றும் 30 உள்ள பேக்கிலும் கிடைக்கிறது

# கேர்ஃப்ரீ. காரணம், காலம் மாறுவதற்கேற்ப அவளும் மாறுகிறாள்.

ஜான்ஸன் அண்ட் ஜான்ஸன்

OBM/9072/TAM



# ஆபத்தான விளைவுகள்

## 5

''சார்! மானேஜர் உங்களைக் கூப்பிட றார்!'' என்றவாறே எதிரில் வந்து நின்றான் ஓர் அட்டெண்டர் — தப்பு, தப்பு! — சராகா அட்டெண்டிங் எக்ஸிக்யூடிவ்.

''முடிந்தால் வரேன்னு போய் சொல் லுய்யா!'' — பதில் சொல்லியனுப்பினான் அருண்.

அடுத்த இரண்டாவது நிமிடம் மானேஜர் சிவம் அவன் எதிரில் வந்து நின்றார். ஒரு பாக்கெட் கற்பூரம், நாலு கட்டு ஊதுவத்தி பிளஸ் ஒரு பாக்கெட் ஃபில்டர் சிகரெட் டைச் சுலபமாகக் கொளுத்தக் கூடிய அள வுக்கு அவரது முகத்தில் அக்கினி ஜ்வாலை வீசியது. கரடி போல ரோமமுள்ள அவரது கரங்களில் ஈட்டிகள் குத்திட்டு நிற்க, வாயில் நுரை ததும்பும் அளவுக்குக் கோபம் கொப் பளித்தது. ''யூ.... யூ.... யூ....'' என்று திணற லுடன் திட்ட ஆரம்பித்தார்.

''அதற்கு மேலே இங்கிலீஷ் ஆல்ஃபபெட் மறந்து போயிட்டுதா சார்?'' என்று கொழுப் புக் குறையாமல் கேட்டு, கோபத்தில் ஒரு டின் பெட்ரோல் ஊற்றினான் அருண்.

''ஸில்லி கூஸ்! நான் கூப்பிட்டால், 'முடிந் தால் வரேன்'னு பதில் சொல்லி அனுப் பறியே! மரியாதை தெரியாதவனாக இருக் கிறாயே!''

''சார், நீங்கள் என்னைச் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. கைநிறையப் பேப்பர்கள் வைத்திருந்தேன். அதையெல்லாம் ஸார்ட் பண்ணி முடிந்தால் வரேன் என்றுதான் சொன்னேன். உங்களைப் போய் அவமதிப் பேனா சார்? எத்தனை பொறுப்பான வேலை கொடுத்திருக்கிறீர்கள்?''

''சரி, சரி, நிறுத்து....'' என்று அவனது கிண்டலைப் புரிந்து கொள்ளாமல் தொடர்ந் தார் மானேஜர். ''ஒரு முக்கியமான விஷயம் சொல்லணும், உன்னிடம்!''

''சொல்லுங்க சார்!''

''இந்த ஃபைலிங் பேப்பர்களிலே சில டாப் சீக்ரெட் பேப்பர்களும் கலந்திருக்கின் றன. கம்பெனியின் எதிர்காலமே அவற்றிலே அடங்கியிருக்கிறது....''

''இருந்துட்டுப் போகட்டுமே! எனக்கு ஆட்சேபனை யில்லை!''

''அப்படிப்பட்ட பேப்பர்கள் கையில் கிடைத்தவுடன் நீ எதுவும் படிக்காமல் அப் படியே சுருட்டி....''

''கொளுத்திவிட வேண்டும். அவ்வளவு தானே?''

''நாசமாய்ப் போச்சு! எல்லாத்தையும் சுருட்டி எம்.டி.யிடம் கொண்டு போய்க் கொடுத்து விடணும்.....''

''படித்துப் பார்க்காவிட்டால் சீக்ரெட் பேப்பரா இல்லையா என்பது எப்படி சார் தெரியும்?''

''அது வெரி சிம்பிள். இதோ பார்!''

முகுந்தன்

என்ற சிவம் சட்டைப் பையிலிருந்து சிவப்பு மசிப் பேனவை எடுத்து, மேஜை மீது கிடந்த பேப்பர்களின் வலது பக்க மூலையில் ஸ்டை லாக அமெரிக்க டாலர் குறியைப் போட்டார். "இப்படி அடையாளம் போட்டிருக்கும். புரிகிறதா?"

மண்டையைப் பலமாக ஆட்டினன். திருப்தியடைந்தவராக வெளியேறினர் சிவம்.

பிறகுதான் கவனித்தான். சிவப்பு மசிப் பேனவை விட்டு விட்டுப் போயிருந்தார் சிவம். அதை எடுத்து மேலும் சில காகிதங் களில் அவரைப் போலவே டாலர் குறி போட்டுப் பார்த்தான். அதே சமயம் லேகா உள்ளே நுழையவும் எல்லாவற்றையும் மேஜை டிராயருக்குள் போட்டு மூடிவிட்டு, "என்ன மறுபடியும் தேடு படலமா?" என்று வரவேற்றான்.

"ஆமாம்!" என்ற லேகா, காகிதக் குவிய லின் அருகில் சென்று இடுப்பில் கைவைத்த படி, எந்தக் கட்டை இழுக்கலாமென்று யோசிக்கலானள்.

"ஒன் மினிட்... அந்த மாருதி கார் உங் களுடையதா?"

முதுகில் சாட்டையடி விழுந்ததுபோலச் சட்டென்று திரும்பினள் லேகா. "என்னது! காரா! கனக் கண்டீர்களா என்ன?"

"கண்ணுலே கண்டதைத்தான் சொல் றேன். ஞாயிற்றுக்கிழமை சாயந்தரம் நீங்கள் ரொம்ப ஸ்டைலாகக் கார் ஓட்டிக் கொண்டு போகவில்லே? கார் நம்பர் சொல்லட்டுமா? 9639!"

லேகா ஒருகணம் மருண்டாள். அடியுதட் டைக் கடித்தாள். பிறகு, "இங்கே ஆபீசில் பேச வேண்டாம். அப்புறமாக வெளியில் போய்ப் பேசுவோமே!" என்றாள் மெல்லிய குரலில்.

"நான் தயார்! எங்கே சந்திக்கலாம், சொல்லுங்கள்!"

"ஆபீஸ் டயம் முடிந்த பிறகு, பிருந்தாவன் ஹோட்டல் ஃபேமிலி ரூம்லே சந்திப் போம்!"

அருண் காத்திருந்தான். லேகா வரு வதற்குக்கொஞ்சம்லேட்டாகிவிட்டது. அதற் குள் இரண்டு கைவிரல்களிலும் இருந்த நகங் களைச் சுத்தமாகக் கடித்துத் துப்பி விட்டிருந் தான்.

லேகா வந்தாள். முதல் கேள்வியாக, "நீங் கள் என்னைக் காரில் பார்த்ததை ஆபீசில் வேறு யாரிடமும் சொல்லி விட வில்லேயே?" என்று கேட்டாள்.

"இதுவரையில் இல்லே...."

"இனிமேலும் சொல்லக் கூடாது. ப்ரா மிஸ் செய்து கொடுங்கள்...."

"தலேயில் அடித்தா, கையில் அடித்தா?"

"அதெல்லாம் வேண்டாம். வெறும் வார்த்தை போதும்...."

"சரி, ப்ராமிஸ்!"

"நீங்கள் பார்த்தது எங்கள் வீட்டுக் கார் தான்..."

"அப்படியானல் விவசாயக் குடும்பம், வறுமைப் போராட்டம் என்று சொன்ன தெல்லாம் ரீல்தான?"

"70 எம்.எம். ரீல்!"

"எதற்காக அப்படிச் சொன்னீர்கள்?"

"அப்படிச் சொல்லித்தான் ஆபீசில் எல் லாரையும் நம்ப வைத்திருக்கிறேன்...."

"அதுதான் ஏன் என்கிறேன்?"

"எனக்குச் சராகாவில் எப்படியாவது வேலே கிடைக்க வேண்டும் என்பதற்காகத் தான். ஒரு முக்கியமான காரியத்தைச் செய்து முடிப்பதாக ஒப்புக் கொண்டிருக்கிறேன். அதனல்தான் இந்த நாடகம்...."

"சுத்தமாகப் புரியவில்லே மிஸ் லேகா... அதுசரி, நீங்கள் மிஸ் என்பது உண்மைதான? அல்லது அதுவும் பொய்யா?"

தலேயைச் சற்றே தாழ்த்தி, ஓரக் கண்ணுல் அவனைப் பார்த்தபடியே, "நான் இந்த நிமி டம் வரையில் மிஸ்தான்!" என்றாள் நாணப் புன்னகையுடன்.

"நீங்கள் இப்படிப் பார்த்து இதே போலச் சிரித்தீர்களானல் எனக்குக் கதை கேட்கிற மூட் போயே போய்விடும்... ஸோ, உங்க நாடகம் பற்றித் தொடருங்கள்!"

தொண்டையைக் கனைத்துக் கொண்டாள் லேகா. "என் அப்பாவும் ஒரு பிஸினஸ் மேன்தான். குறிப்பாகச் சொல்லப் போனல், சராகா பார்மா போலவே அவரும் மருந்து கம்பெனிதான் நடத்துகிறர். தலேவலி, இருமல் இப்படிச் சாதாரண நோய் களுக்கான மருந்துகள், டானிக்குகள் என்று தயாரிக்கிறர். அதிலே போட்டி அதிகம், லாபம் குறைவு. எனவே வேறு யாரும் தயா ரிக்காத ஒரு மருந்தைத் தயாரித்து விற்பனை செய்தால் என்ன என்று யோசித்தார். அந்தச் சமயம் பார்த்து எயிட்ஸ் வந்து சேர்ந்தது..."

"எயிட்ஸா? உங்க அப்பாவுக்கா? அடப் பாவமே!"

"சேச்சே! அவருக்கில்லே...."

"அப்படியானல் உங்களுக்கா? கொஞ் சம் தள்ளி உட்காருகிறீர்களா? இஃப் யூ டோண்ட் மைண்ட்!"

"முட்டாள்தனமாகக் குறுக்கே பேசா திருந்தால் நான் மேலே சொல்கிறேன். இல்லாவிட்டால்....."

பயந்தவன் போலக் கைகட்டி வாய் புதைத்


அமெரிக்காவைச் சேர்ந்த நீல் மெக் டொனல் என்பவர் டெலிபோன் டைரக் டரியில் தன்னுடைய பெயர் கடைசிப் பெயராக வர வேண்டும் என்பதற்காகத் தன் பெயரை மாற்றிக் கொண்டார். எப்படி மாற்றிக் கொண்டார் தெரி யுமா? 'ZEBEDEE ZZYP' என்று!

தகவல்: [illegible]

ஆதாரம்: The Great Short Stories




Soft & Silky Lotion
Lakme
"ஆகா!... எத்தனை வசதி."
ஸா:ப்ட் அண்ட் ஸில்க்கி
ஹேர் ரிமூவிங் லோஷன்.
இப்போது
45 மி.லி. பாட்டில்
வாங்குந்தோறும்
இலவசம்
எல்கா பொட்டு*
FREE
ELKA BINDI
Soft & Silky Lotion
HAIR REMOVER
Lakmè
FREE FROM Lakmè
Elkā
Lakmè
ஸா:ப்ட் அண்ட் ஸில்க்கி ஹேர் ரிமூவிங் லோஷன்.
இந்த ஹேர் ரிமூவிங் லோஷனை உபயோகப்படுத்துவதில் எந்த சிரமமுமில்லை, சங்கடமுமில்லை.
மிருதுவான மேனி மீது எளிதாகவும் சீராகவும் பரவுகிறது!
இரண்டு சைஸ்களில் கிடைக்கிறது: 80 மி.லி. மற்றும் 45 மி.லி.
ஆம்! எத்தனை சிக்கனம்.
ஸா:ப்ட் அண்ட் ஸில்க்கி லோஷன் அங்கமெங்கும் மென்மை உணர்வு.
45 மி.லி.பாட்டில் விலை ரூ. 10.70
(தல வரிகள் தனி)
லக்மே
* 45 மி.லி.பாட்டிலில், சரக்குகள் தீரும் வரை.


மகளே, நினைவு வச்சுக்க. முதலில் டார்டாய்ஸ் கொசு வர்த்திச் சுருளே கொளுத்தி வைக்கணும்.
வாழ்விலே ஒரு முக்கிய உபதேசம்: கொசுத்தொல்லையிலிருந்து விடுபட டார்டாய்ஸ் கொசுவர்த்திச் சுருள்
என் மாசற்ற மேனிஎழிலின் ரகசியம், டார்டாய்ஸ் கொசுவர்த்திச் சுருள்.
டார்டாய்ஸ் கொசு வர்த்திச் சுருள்
தயாரிப்பாளர்:
பாம்பே கெமிகல்ஸ் ப்ரைவேட் லிமிடெட்
பம்பாய்-400 023. போன்: 273831

தான் அருண்.

"எயிட்ஸைக் கண்டு எல்லாருமே கதி கலங்கிப்போயிருக்கிறார்களல்லவா? அதைக் குணப்படுத்த ஒரு மருந்தைக் கண்டுபிடித்து விட்டால் ஏகப்பட்ட பணத்தை வாரிக் குவித்து விடலாமென்று நினைத்தார் டாடி. எங்கள் கம்பெனி ஆராய்ச்சிப் பிரிவும், அதற்கான ஆய்வுகளில் தீவிரமாக இறங்கியது. கிட்டத்தட்ட பதினைந்து லட்ச ரூபாய் செலவு செய்த பின்னும், சரியான மருந்தைக் கண்டுபிடிக்கமுடியவில்லை. அப்போது, அதிர்ச்சி தரும் விதத்தில் ஒரு செய்தி கிடைத்தது. வேறொரு கம்பெனி, எயிட்ஸ் நோய்க்கான மருந்தைக் கண்டு பிடித்துவிட்டதாம்! அது...."

"நம்ம சராகாதானே?"

"கரெக்ட்! டாடி இடிந்தே போய்விட்டார் நியூஸைக் கேட்டு.... அவருக்குக் கிடைக்க வேண்டிய புகழ், பணம் எல்லாவற்றையும் இழந்துவிட்டோமே என்று ரொம்ப வருத்தப்பட்டார். இருந்தாலும் துணிச்சலாக ஒரு திட்டம் போட்டார்...."

"என்ன திட்டம்?"

"நிதி வசதிக் குறைவினால், சராகா நிறுவனம் இன்னும் அந்த மருந்தைத் தயாரிக்க ஆரம்பிக்கவில்லை. அவர்களை நாம் முந்திக் கொள்ள வேண்டும் என்று திட்டம் போட்டார். அதற்கு முக்கிய தேவை அந்த மருந்துக்கான ஃபார்முலா. அதைக் கவர்ந்து வரும் பொறுப்பை நான் ஏற்றுக் கொண்டேன்...."

"சரியான கிரிமினல் பரம்பரைதான்!"

"அந்த ஃபார்முலா பேப்பர்கள் இன்னும் ஃபாக்டரிக்குப் போகவில்லை. நம்ம ஹெட் ஆபீசில்தான் இருக்கின்றன. எனவே, நான் ஒரு கதையைச் சொல்லி இங்கே வேலைக்குச் சேர்ந்திருக்கிறேன்...."

"உங்களுக்கும் உங்க அப்பாவுக்கும் துளிக் கூட மூளை கிடையாது என்று சொல்வேன். எவ்வளவு முக்கியமான — ரகசியமான ஃபார்முலா அது! அத்தனை சுலபமாக உங்கள் கையில் சிக்கி விடுமா என்ன?"

"உங்களுக்குத்தான் நம்ம எம்.டி. பாணி பற்றித் தெரியாது... அவர் கொஞ்சம் கிறுக்குத்தனமானவர் என்று நம்ம ஆபீசில் யாரைக் கேட்டாலும் சொல்வார்கள். ரகசியம் என்று தனியே பிரித்து வைத்தால்தான் அதற்குக் குறி வைத்துத் தேடுவார்கள். ரகசியமான காகிதங்களைக் கூடச் சர்வ சாதாரணமாகப் போட்டு வைத்திருந்தால் யாரும் அதைக் கிளறிப் பார்க்க மாட்டார்கள் என்று அடிக்கடி சொல்வாராம்..."

"ஓகோ! இப்போது புரிகிறது நீங்கள் ஃபைலிங் பேப்பர்களுக்கு நடுவே அடிக்கடி வந்து நிற்பதற்கான காரணம்!"

"நிச்சயமாக அந்த ஃபார்முலா பேப்பர்கள் ஏதாவது ஒரு ஃபைலிலோ அல்லது உங்க ரூமிலுள்ள குவியலிலோதான் இருந்தாக வேண்டும். இதுவரையில் என்னிடம் சிக்கவில்லை. ஃபைலிங் செய்வதுதான் உங்கள் முழு நேர வேலை என்பதால் அது உங்கள் பார்வையில் படாமல் இருக்காது. அந்தப் பேப்பர்களை மட்டும் என்னிடம் நீங்கள் எடுத்துக் கொடுத்துவிட்டீர்களானால், மேட்டர் க்ளோஸ்!"

"அதோடு என் வேலையும் க்ளோஸ் ஆகிவிடும்!"

"ப்ளீஸ்! எனக்காக — லேகாவுக்காக — இந்தச் சின்ன உதவி செய்யக் கூடாதா நீங்கள்?"

"லுக் ஹியர்! செய்வதால் எனக்கு என்ன லாபம்?"

"ஏன் இல்லாமல்? டாடியிடம் சொல்லி, கைநிறையப் பணம் வாங்கித் தருகிறேன். அல்லது, எங்கள் கம்பெனியிலேயே ஒரு நல்ல வேலை போட்டுத் தரச் சொல்கிறேன்..."

"அதெல்லாம் தேவையில்லை. நான் உங்களுக்கு உதவுகிற பட்சத்தில் நான் கேட்டதைக் கொடுப்பீர்களா?"

"கேளுங்கள். ஸ்கை இஸ் த லிமிட்... வானளாவிய அளவுக்கு...."

"நிறுத்துங்கள்! வானளாவிய என்ற வார்த்தையைக் கேட்டாலே கொஞ்ச நாளாகக் குலை நடுங்குகிறது. வேணும் தாயே, பேப்பர்கள் முதலில் எனக்குக் கிடைக்கட்டும். அப்புறம் பேரம் பேசுவோம்!"

வாட்ச்சைத் திருப்பி, மணி பார்த்தாள் லேகா. "நேரமாகிறது. எட்டு மணிக்குள் நான் ஹாஸ்டலில் இருந்தாக வேண்டும்."

"பழையபடி பொய் சொல்ல ஆரம்பித்து விட்டீர்களா?"

"நோ... நோ.... போடுகிற வேஷத்தைப் பக்காவாகப் போட வேண்டுமென்பதற்காக நான் ஹாஸ்டலில்தான் தங்கியிருக்கிறேன். வீக்—என்டில் மட்டும் டாடியைப் பார்க்க எங்கள் பங்களாவுக்குப் போவேன். காரில் என்னை நீங்கள் பார்த்தது ஞாயிற்றுக்கிழமை தானே!"

"ஓ, ஐஸீ....! சரி, கவலைப்படாமல் போய் வாருங்கள். பள்ளிக்கூடத்தில் சாக்பீஸ் திருடியிருக்கிறேன். காலேஜில் லைப்ரரி புத்தகங்களை அபேஸ் செய்திருக்கிறேன். வேலையில்லாமல் வருஷக் கணக்கில் முடங்கியிருந்த போது வீட்டில் சில்லறை நிறையத் திருடியிருக்கிறேன். அப்போதெல்லாம் கெட்டுப் போகாத என் ஹீரோ இமேஜா ஆபீசில் ஃபார்முலா திருடுவதால் கெட்டுப் போய் விடப் போகிறது! நான் இருக்க பயமேன்!" என்று லேகாவுக்கு ஆறுதல் சொல்லி, பஸ் ஏற்றிவிட்டான் அருண்.

**ரா**யபுரத்தில் ஒரு பிரும்மாண்டமான காம்பவுண்டுக்குள் தாறுமாறாகச் சில கட்டடங்கள் முளைத்திருந்தன. எல்லாவற்றுக்கும் சராசரி வயது நாற்பதுக்குக் குறையாது. சுண்ணாம்புப் பூச்சிழந்து, காறை பெயர்ந்து, ஆங்காங்கே செங்கற்கள் பல்லிளிக்க, வெளிப்புறத்தில் ஏகத்துக்குத்தூசியும்தும்பும் மண்டிக் கிடந்தன.

அந்தக் கட்டடங்களுக்கு இருந்த ஒரே ஒரு அந்தஸ்து, அவை சென்னையிலுள்ள பல பெரியநிறுவனங்களின்கிடங்குகளாகஅமைந்

ததுதான். எனவே பகல் முழுவதும்—சமயங்களில் இரவில் கூட — லாரிகள் வந்து நின்று உறுமுவதும், 'தடால்! தடால்!' என்ற ஓசையுடன் சரக்குகள் இறக்கி ஏற்றப்படுவதும், கூச்சலும் கும்மாளமுமாக இருக்கும்.

ஒரு நாள் நள்ளிரவைக் கடந்த ஒரு நேரம். கௌரவமான கம்பெனி ஒன்றின் பெயர்ப் பலகையை நெற்றியில் தாங்கிய ஒரு கட்டடத்தின் இரும்பு ஷட்டர்கள் போடப்பட்டு இரு முனைகளிலும் கனமான பூட்டுக்கள் தொங்க, அருகிலேயே ஒரு ஸ்டூலில் அமர்ந்து பீடி இழுத்துக் கொண்டிருந்தான் இடுப்பில் கத்தி செருகிய ஒரு கூர்க்கா.

ஷட்டர்களுக்குப் பின்னால் —

விஸ்தாரமான ஒரு ஹாலில், மரப் பெட்டிகளுக்கு நடுவே, நாற்காலியில் கால் மேல் கால் போட்டு அமர்ந்திருந்தான் ஓர் இளைஞன். கறுப்புதான் என்றாலும் கவர்ந்திழுக்கும் தன்மை இருந்தது அவனிடம். அவனுக்கு எதிரில் நடுத்தர வயதுக்காரர் ஒருவர் தலைகுனிந்து நின்றிருந்தார்.

''கிடைத்த சந்தர்ப்பத்தைக் கோட்டை விட்டு விட்டீர்களே! சராகா கம்பெனிக்கு அவன் வருவான் என்று தெரிந்துதானே உங்களை அன்று அனுப்பினேன். குறி தவறிவிட்டீர்களே! வெட்கமாயில்லை உங்களுக்கு!'' என்று கோபத்தைக் கக்கினான் இளைஞன்.

''மயிரிழையில் தப்பிவிட்டான்....'' என்று முணுமுணுப்புக் குரலில் ஏதோ சொல்ல முற்பட்டார் எதிரில் நின்றவர்.

''அது போகட்டும்.... சாயந்தரமே வளசரவாக்கத்தில் அவன் வீட்டுக்குப் போய் நின்றீர்களே — என்ன ஆயிற்று? முழங்காலுக்குக் கீழே காயம் பட்டுக் கொண்டு திரும்பினீர்கள். அவன் — அந்த சத்யா — தப்பிவிட்டானே! அவனைச் சுடத்தான் துப்பில்லை, அவனுடைய டயரியைப் பறிக்கவுமா வக்கில்லை?''

''என்னை நம்புங்கள்.... அவன் என்னைச் சுட்டு விட்டுத் தப்பி ஓடிய பிறகு, அந்த வீடு முழுவதும் தேடிப் பார்த்தேன். ஆனால் டயரி கிடைக்கவில்லை....''

''எப்படிக் கிடைக்கும்? அவன் தன் கையோடு டயரியையும் எடுத்துக் கொண்டல்லவா போய்விடுகிறான்? அவனைத் தீர்த்துக் கட்டினால் தவிர, டயரி நம் கைக்குக் கிடைக்காது!''

''அதற்கும் ஒரு திட்டத்தோடுதான் வந்திருக்கிறேன். அன்று வளசரவாக்கத்தில் சத்யாவைச் சந்தித்துப் பேசியவன் பெயர் அருண். சராகாவில் வேலை பார்க்கிறான் என்று கண்டு பிடித்திருக்கிறேன்....''

''ஆகா! பெரிய கண்டுபிடிப்புதான்!''

''அந்த அருணை வைத்தே சத்யாவைத் தொலைத்துக் கட்டுகிறேனா இல்லையா பாருங்கள்!''

கறுப்பு இளைஞன் அலட்சியமாகச் சிரித்தான்.

''இப்படிச் சொல்லி இன்னும் கொஞ்ச நாள் தாக்குப் பிடிக்கலாம் என்று பிளான் போலிருக்கிறது!''

முகம் சிவந்தார் எதிரில் நின்றவர்.

''இல்லை! இன்னும் பதினைந்தே நாளில் செய்து முடிக்கிறேன்!''

''தவறினால்?''

''நீங்கள் என் உடலைக் கூவத்தில் மிதக்க விடுவீர்கள்... தெரிந்த விஷயம்தானே?''

இளைஞன் ஆமோதிப்பதாகத் தலையாட்டினான்.

(தொடரும்)

## அருள்வாக்கு

**மா**தா, பிதா, குரு என்று மூன்றை வேதம் சொல்லியிருக்கிறதோ இல்லையோ? அதனால் மாதா, பிதாவைத் தானாக ஒரு புத்திரன் எதிர்த்துக் கொள்ளக் கூடாது என்றாலும், இப்போது நான் குரு என்று பேர் வைத்துக்கொண்டு உட்கார்ந்திருக்கிறவன்—சொல்வதால் வரதக்ஷிணை விஷயத்தில் மட்டும் மாதா பிதாவின் அபிப்ராயம் சாஸ்திரப்படி இல்லாவிட்டால் பிள்ளைகள் அவர்களை எதிர்த்து வாதம், ஸத்யாக்ரஹம் பண்ண வேண்டும்.


இது நம் யுவர்கள், கான்ஸர் மாதிரி நம் சமூகத்தில் புரையோடி அரிக்கிற ஒரு கொடுமையை அகற்றி நம் சமுதாய மறுமலர்ச்சிக்குச் செய்கிற மகத்தான தொண்டாக இருக்கும். நம் [illegible] நம்



பிக்கைக்காக மட்டும் இன்றி, மனிதாபிமானக் கடமையாகவும் இதை நம் இளைஞர்கள் செய்ய முன் வர வேண்டும்.

நெடுங்காலப் பயிராகவும், எதிர் காலத்துக்கு உத்தரவாதமாயும் தார்மீகப் பாதுகாப்பாகவும் இருக்கிற விவாகம் என்ற விஷயத்தில் பெரியவர்கள் பார்த்துப் பெண்ணை நிச்சயம் செய்கிறபடிதான் பிள்ளைகள் செய்ய வேண்டும். ஆனால் அந்தப் பயிரையே பூச்சி அரிக்கிற மாதிரி வந்திருக்கிற வரதக்ஷிணைக் கொடுமைக்கு உடந்தையாக இருந்து விடக் கூடாது. அப்பா, அம்மா சொற்படி கேட்பதோடு சமூகத்துக்குச் செய்ய வேண்டிய கடமையும் இருக்கிறதல்லவா? வரதக்ஷிணை கேட்டால் கல்யாணத்துக்குக் கண்டிப்பாக மறுத்து விட வேண்டியது பிள்ளையின் கடமை. இது குடும்பத்துக்கு, மதத்துக்கு, சமூகத்துக்கு, பெண் குலத்துக்கு எல்லாவற்றுக்கும் செய்கிற தொண்டு. இப்படியாக இளைஞர்கள் எல்லாம் சபதம் செய்து அதை நிறைவேற்ற வேண்டும்.

**— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.**



# டீ உலகில் உயர் வட்டம்

## சக்கரா டீ




உயர் வகுப்பினர் பாராட்டும்
தேநீர்ச் செல்வம் சக்கரா டீ.
சொகுசான சுவைமண, திட
குணங்களின் முழுமை
வட்டம். தேநீரிலே
சுக போகத்தின் உயர்
வட்டம்: சக்கரா டீ.

உயர் வட்ட ரசிகர்களுக்கு
உயர் வளமுள்ள தேயிலை

**சக்கரா டீ**

டாட்டா டீ லிமிடெட்
உலகிலேயே மிகப்பெரிய டீ கம்பெனி.

daCunha/TT/246/87/TM

# பொன்மொழிப் போட்டி-6 முடிவு

**சரியான விடை:**

பாரதி: சூரியனைக் கண்டதும் குருவிகள் பாடிக் கொண்டு வெளியே பறக்கும்; ஆந்தைகள் இருட்டுக்குள் நுழையும். எல்லா மனிதரையும் வசப்படுத்தக்கூடிய தெய்வ பக்தி இதுவரை மனுஷ ஜாதியில் காணப்படவில்லை.

லிங்கன்: ஒருவனுடைய பதவிக்காலம் முடியும்போது அவனுக்கு எல்லாருமே எதிரிகளாகிப் போனாலும், ஒரே ஒரு நண்பன் மிச்சமிருந்தால் போதும் — அவனுடைய மனசாட்சி.

பால்கிவாலா: வாய்மையே வெல்லும் என்று நம்பிக் கொண்டிருந்தால் போதாது. வாய்மை வெல்லும் தருணம் வரும் வரை பொய்மை ஆளட்டும் என்று விட்டு வைக்கவும் கூடாது.

சத்யசாயி பாபா: இறை வழிபாட்டினை மதம் என்கிறோம். அறிவை மதி என்கிறோம். மதியையும் மதத்தையும் இணைத்துப் பார்த்தால் புரியும் மதம் என்பது மதியைப் பலப்படுத்தவே என்று.

காந்தி: வன்முறையால் எதை அடைகிறோமோ அதனை அதைவிடச் சக்தி மிக்க வன்முறையிடம் இழக்கிறோம்.

**145 வாசகர்கள் சரியான விடையை எழுதியுள்ளனர். ரூ. 200/— பரிசைப் பிரித்து ஒவ்வொருவருக்கும் ரூ. 2/— பரிசாக அனுப்பப்படுகிறது.**

*1. கே. எஸ். மாலதி, கல்கத்தா — 19; 2. என். எஸ். சுதா, நாக்பூர்; 3. ஏ. ஆர். விஜயலக்ஷ்மி, தஞ்சை; 4. கா. கனிமொழி, கம்பம்; 5. வி. வஸந்தவல்லி, செகந்தராபாத்; 6. என். இராஜம், நாகர்கோவில்; 7. என். ராமகிருஷ்ணன், தூத்துக்குடி — 2; 8. என். சக்குபாய், புதுடெல்லி — 26; 9. எஸ். பத்மினி, தாராபுரம்; 10. ஆர். மாறன், வடக்கு காரைக்குறிச்சி; 11. பானு அசோக், திருச்சி — 1; 12. வி. மாலதி, கோவை — 18; 13. இரா. கோட்டீஸ்வரன், மீனாட்சிபுரம்; 14. எஸ். சுப்புலட்சுமி, குன்னுவாரன்கோட்டை; 15. நா. ஜெகதீஸ், மதுரை — 1; 16. கே. நவீனா, பாளையங்கோட்டை; 17. ஆர். ராமமூர்த்தி, செகந்தராபாத்; 18. பானுமதி, சென்னை — 44; 19. இரா. சம்பத்குமார், இராசிபுரம்; 20. எஸ். பிரியதர்சினி, மதுரை — 1; 21. கா. க. வேலாயுதன், கோவை — 16; 22. சி. சின்னதம்பி, குறிஞ்சிப்பாடி; 23. க. நஞ்சுண்டேஸ்வரன், தருமபுரி; 24. பி. நாகராஜ், புதுவை — 16; 25. ஆர். விஸ்வநாதன், சென்னை — 33; 26. கே. மங்களம், நெல்லிக்குப்பம்; 27. மணிவேலன், அரூர்; 28. வி. சித்ரா, திருக்கோவிலூர்; 29. ஜே. மோகனகிருஷ்ணன், திருச்சி — 4; 30. கே. சிவசண்முகம், சாத்தனூர்; 31. எஸ். பாரதி செல்வராஜ், ஹோசூர்; 32. உஷா சுப்ரமணியன், கோவை — 38; 33. சி. பி. சாவித்ரி, குந்தா பாலம் அஞ்சல்; 34. ஜி. ஆர். விஜயா, புதுவை; 35. இரா. காந்திமதி, சென்னை — 15; 36. சிதம்பர செல்வராசன், தோட்டூர்; 37. எஸ். கண்ணன், சென்னை — 53; 38. ஜே. ப்ரியா, சென்னை — 28; 39. பி. கணேசன், பாண்டமங்கலம்; 40. கே. சரவணன், மல்லியம்; 41. வி. புவனேஸ்வரி, தஞ்சை — 7; 42. ஏ. ஆர். மனோகர், ஆத்தூர்; 43. வி. சீனிவாச வரதன், பம்மல்; 44. ஜி. ரமேஷ்குமார், நாமக்கல்; 45. பாலசுப்ரமணியன், புதுடெல்லி; 46. வி. ராம்ஜி, சென்னை — 20; 47. எஸ். பிரகாஷ், திருவண்ணாமலை, 48. ஏ. அனந்த பத்மநாபன், திருநெல்லிக்காவல்; 49. ச. ஜெயசக்திவேல், திருமங்கலம்; 50. கே. கே. பச்சையப்பன், கூகலூர்; 51. கே. எம். ரவிச்சந்திரன், மதுரை — 20; 52. ஆர். ஏ. கே. பாஷா, மதுரை — 10; 53. எம். பிருந்தா, கோவை — 1; 54. டி. வைஷ்ணவி தேவி, சென்னை — 1; 55. சாயிலக்ஷ்மி சீனுவாசன், ஆறுபாதி; 56. ராணி, அரிமளம்; 57. கு. கணேசன், சென்னை — 15; 58. மி. அ. மேரி, சென்னை — 4; 59. வி. வசந்தகுமாரி, தஞ்சை; 60. மீனாக்ஷி, பூனே; 61. ஆர். கணேசன், முடிகொண்டான்; 62. வி. அலமேலு அம்மாள், இராஜபாளையம்; 63. கே. சுந்தரராஜன், திண்டுக்கல்; 64. ஆர். சுந்தரம், மதுரை — 4; 65. டி. ஜி. ஸ்ரீசைலன், சென்னை — 44; 66. ருக்மிணி கிருஷ்ணன், திருப்பூர்; 67. ஏ. கணேஷ், சென்னை — 4; 68. எஸ். அலமேலு, சென்னை — 88; 69. ஏ. தர்மராஜ், தாண்டிக்குடி; 70. மா. இராக, பரமக்குடி; 71. உஷா, கோவை — 1; 72. சாந்தா கிருஷ்ணன், சென்னை — 18; 73. பி. பாஸ்கரன், சாக்கோட்டை; 74. ஆ. முருகசுவாமிநாதன், அம்பாசமுத்திரம்; 75. ஆர். வெங்கடசாமி, திருவனந்தபுரம்; 76. ஆ. பெருமாள், உசிலம்பட்டி; 77. பி. கருணாநிதி, சென்னை — 19; 78. கே. தயாளன், சென்னை — 14; 79. அப்துல் மஜீத், புன்னை புளியம்பட்டி; 80. ஜி. தேவிகா ராணி, மதுரை; 81. பி. சாவித்ரி, சேலம் — 7; 82. ஆர். செல்வி, புது பம்பாய்; 83. மைதிலி கிருஷ்ணன், சென்னை — 83; 84. ஆர். திருவேங்கடம், ஆடூர் அகரம்; 85. லக்ஷ்மி ராதா கிருஷ்ணன், கோவை — 18; 86. எஸ். ராமஸ்வாமி, மஹாதேவபுரம்; 87. கே. காயத்ரி, மதுரை — 2; 88. கங்கா ராமலிங்கம், திருவனந்தபுரம்; 89. அ. பார்த்தசாரதி, சென்னை — 11; 90. என். சுந்தரி, சென்னை — 17; 91. ஜானகி ரங்கநாதன், சென்னை — 18; 92. பி. தேவி, திண்டுக்கல்; 93. எஸ். இராமமூர்த்தி, பாளையங்கோட்டை; 94. டி. டேவிட் ஜான்பீரிட்டோ, திருத்துறைப்பூண்டி; 95. எஸ். சந்த்யா, சென்னை — 94; 96. பி. எஸ். ராஜகோபாலன், மயிலாடுதுறை; 97. டி. அருணா, பெருங்களத்தூர்; 98. பி. வி. பாலாஜி, சென்னை — 11; 99. எஸ். சகுந்தலா, ஈரோடு — 1; 100. எஸ். ஆரோக்யதாஸ், சிவந்தியம், 101. பி. நந்தகோபால், கோவை; 102. ஜி. ஆறுமுகம், கோவை — 38; 103. எஸ். அருள்மொழி, காட்டூர்; 104. எஸ். வி. சேகர், சென்னை — 61; 105. வி. ஆர். சிவசுப்ரமணியன், சென்னை — 80; 106. ஆர். விஜயகுமார், உள்ளி; 107. ரேவதி ஸ்ரீகண்டன், திருச்சி — 23;*

மற்ற பெயர்கள் அடுத்த இதழில்......

# பொன்னியின்



## அத்தியாயம் 38
## நந்தினியின் ஊடல்

பெரிய பழுவேட்டரையர் கடைசியாகத் தமது மாளிகைக்குத் திரும்பியபோது நள்ளிரவு கழிந்து மூன்றாம் ஜாமம் ஆரம்பமாகியிருந்தது. வீதிப் புழுதியை வாரி அடித்துக் கொண்டு சுழன்று சுழன்று அடித்த மேலக் காற்றைக் காட்டிலும் அவருடைய உள்ளத்தில் அடித்த புயல் அதிக புழுதியைக் கிளப்பியது. அருமைச் சகோதரனை அவ்வளவு தூரம் கடிந்து கொள்ள வேண்டியிருந்தது பற்றிச் சிறிது பச்சாத்தாபப்பட்டார். அவர் மீது தம்பி வைத்திருந்த அபிமானத்துக்கு அளவேயில்லை. அந்த அபிமானத்தின் காரணமாகத்தான் ஏதோ சொல்லிவிட்டான். இருந்தாலும் சந்தேகக்காரன். எதற்காக அநாவசியமாய் நந்தினியைப் பற்றிக் குறை கூற வேண்டும்? மனித சுபாவம் அப்படித்தான் போலும். தான் செய்த தவறுக்குப் பிறர் பேரில் குற்றம் சொல்லித் தப்பித்துக் கொள்ள முயல்வது சாதாரண மக்களின் இயற்கை. ஆனால் இவன் எதற்காக அந்த இழிவான முறையைக் கடைப்பிடிக்க வேண்டும்? கைவசம் சிக்கியிருந்த அந்த மோசக்காரத் திருட்டு வாலிபனை விட்டு விட்டு, அதற்காக ஒரு பெண்ணின் பேரில், அதுவும் மதனியின் பேரில் குற்றம் சொல்லுவது இவனுடைய வீரத்துக்கும் ஆண்மைக்கும் அழகாகுமா? போனால் போகட்டும்! அதற்காகத்தான் அவன் வருந்தி மன்னிப்பும் கேட்டுக் கொண்டுவிட்டானே? மேலும் அதைப் பற்றி நாம் எதற்காக நினைக்க வேண்டும்?

இருந்தாலும், அவன் கூறியதில் அணுவளவேனும் உண்மை இருக்கக் கூடுமா? ஒருவேளை இந்த முதிய பிராயத்தில் நமக்குப் பெண் பித்துத்தான் பிடித்திருக்குமோ? எங்கேயோ காட்டிலிருந்து பிடித்து வந்த ஒரு பெண்ணுக்காக, கூடப் பிறந்த சகோதரனை, நூறு போர்க்களங்களில் நமக்குப்

# செல்வன்

பக்க பலமாயிருந்து போரிட்டவனை, பல முறை தன் உயிரைப் பொருட்படுத்தாமல் நமக்கு வந்த அபாயத்தைத் தடுத்துக் காத்தவனையல்லவா கடிந்து கொள்ள வேண்டியிருந்தது? அப்படி என்ன அவன் உயர்த்தி? அவளுடைய பூர்வோத்திரம் நமக்குத் தெரியாது. அவளுடைய நடவடிக்கையும் பேச்சும் சில சமயம் சந்தேகத்துக்கு இடமாகத்தான் இருக்கின்றன. சீச்சீ! தம்பியின் வார்த்தை நம் உள்ளத்திலும் இத்தகைய குழப்பத்தை உண்டாக்கி விட்டதே! என்ன அநியாயம்? அவள் எப்படி நம்மிடம் உயிர்க்குயிரான அன்பு வைத்திருக்கிறாள்? எவ்வளவு மட்டு மரியாதையுடன் நடந்து கொள்ளுகிறாள்? நம்முடைய காரியங்களில் எல்லாம் எவ்வளவு உற்சாகம் காட்டுகிறாள்? சிலசமயம் நமக்கு யோசனைகள் கூடச் சொல்லி உதவுகிறாளே? இந்த அறுபது வயதுக்கு மேலான கிழவனைத் துணிந்து மணந்து கொண்டாளே, அதைப்பார்க்கவேண்டாமா? தேவலோக மாதரும் பார்த்துப் பொறாமைப் படும் படியான அந்த சுந்தரிக்குச் சுயம்வரம் வைத்தால், சொர்க்கத்திலிருந்து தேவேந்திரன் கூட ஓடி வருவானே? இந்த உலகத்து மணிமுடி வேந்தர் யார் தான் அவளை மணந்து கொள்ள ஆசைப் பட மாட்டார்கள்? ஆ! இந்தச் சுந்தர சோழன் கண்ணில் அவள் அகப்பட்டிருந்தால் போதுமே? அப்படிப்பட்டவளைப் பற்றி எந்த விதத்திலும் ஐயப்படுவது எவ்வளவு மடமை? இளம் பெண்ணை மணந்து கொண்ட கிழவர்களுக்கு இல்லாத சந்தேகங்கள் எல்லாம் தோன்றி வாழ்க்கையை நரகமாக்கிக் கொள்வார்கள் என்று கேள்விப்பட்டிருக்கிறோம். உலக வாழ்க்கையில் அத்தகைய உதாரணங்களைப் பார்த்துமிருக்கிறோம். அம்மாதிரி ஊரார் சிரிப்பதற்கு நம்மை நாமே இடமாக்கிக் கொள்வதா?

இருந்தபோதிலும் சிற்சில விவரங்களை அவளுடைய வாய்ப் பொறுப்பில் கேட்டறிந்து கொள்வதும் அவசியந்தான். அடிக்கடி முத்திரை மோதிரம் வேண்டும் என்று கேட்டு வாங்கிக் கொள்கிறாளே எதற்காக? அடிக்கடி தன்னந்தனியாக லதா மண்டபத்தில் போய் உட்கார்ந்து கொள்ளுகிறாளே, அது எதற்கு? யாரோ ஒரு மந்திரவாதி அடிக்கடி அவளைப் பார்க்க வருகிறதாகக் கேள்விப் படுகிறோமே, அவளே ஒப்புக் கொண்டாளே, அது எதற்காக? மந்திர்வாதியிடம் இவள் என்னத்தைக் கேட்டறியப் போகிறாள்? மந்திரம் போட்டு இவள் யாரை வசப்படுத்த வேண்டும்? இதெல்லாம் இருக்க, கலியாணம் பண்ணியும் பிரம்மச்சாரி என்ற நிலையில் என்னை எத்தனை காலம் வைத்திருக்கப் போகிறாள்? ஏதோ விரதம், நோன்பு என்று சொல்கிறாளே தவிர, என்ன விரதம் என்ன நோன்பு என்று விளங்கச் சொல்கிறாள் இல்லை! கதைகளிலே வரும் தந்திரக்காரப் பெண்கள் தட்டிக் கழிக்கக் கையாளும் முறையைப் போலத்தானே இருக்கிறது? அதற்கு இனிமேல் இடம் கொடுக்கக் கூடாது! இன்றிரவு அதைப் பற்றிக் கண்டிப்பாகப் பேசித் தீர்த்துக் கட்டி விட வேண்டியதுதான்!

பழுவேட்டரையர் அவருடைய மாளிகைவாசலுக்கு வந்தபோது அரண்மனைப் பெண்டிரும் ஊழியர்களும் தாதியர்களும் காத்திருந்து வரவேற்றார்கள். ஆனால்

**அமரர் கல்கி**




யொத்த கையை அவளு டைய தோளின் மீது மெதுவாக வைத்தார். நந்தினியோ... வஜ்ராயு தத்தை யொத்த கையை ஒரு தள்ளு தள்ளினாள். அம்மம்மா! மென்மைக் கும் மிருதுத் தன்மைக் கும் இத்தனை பலமும் உண்டா?

"என் உயிரே! உன் பட்டுக் கையினால் தொட்டு என்னைத் தள் ளினாயே, அதுவே என் பாக்கியம்! திரிகோண மலையிலிருந்து விந்திய மலை வரையில் உள்ள வீராதி வீரர் யாரும் செய்ய முடியாத செயலை நீ செய்தாய்! அது என் அதிர்ஷ்டம்! என்றாலும், எதற் குக் கோபம் என்று சொல்ல வேண் டாமா? உன் தேன் மதுரக் குரலைக் கேட்க என் காது தாபம் அடைந்து தவிக்கின்றதே?" என்று கெஞ்சினார் ஆயிரம் போர்க்களங்களில் வெற்றி கண்ட அந்த மகா வீரர்.

அவருடைய கண்கள் சுற்றிச் சுழன்று பார்த்தும் அவர் பார்க்க விரும்பிய இளையராணியைமட்டும்காணவில்லை. விசாரித்ததில்,இன்னும்லதாமண்டபத் தில் இருப்பதாகத் தெரிய வந்தது. அவர் மனத்தில் "நள்ளிரவு ஆன பிற கும் அங்கு இவளுக்கு என்ன வேலை?" என்ற கேள்வியுடன், தம்மை அலட்சி யம் செய்கிறாளோ என்ற ஐயமும், கோபமும் எழுந்தன. சிறிது ஆத் திரத்துடனேயே கொடி மண்ட பத்தை நோக்கிச் சென்றார்.

இவர் கொடி மண்டப வாசலை அடைந்தபோது நந்தினியும் அவளு டைய தோழியும் எதிரே வருவதைக் கண்டார். அப்படி வந்தவள் இவரைக் கண்டதும் நின்று, அவரைப் பார்க்கா மல், தோட்டத்தில் குடி கொண்டிருந்த இருளை நோக்கத் தொடங்கினாள். தாதிப் பெண் சற்று அப்பாலேயே நின்று விட்டாள்.

பழுவேட்டரையர் நந்தினியின் அரு கில் வந்த பின்னரும் அவள் அவரைத் திரும்பிப் பார்க்கவில்லை. நந்தினி யைக் கடிந்து கொள்ளலாம் என்று எண்ணிக் கொண்டு வந்ததற்கு மாறாக அவளுடைய கோபத்தை இவர் தணிக்க முயல வேண்டியதாயிற்று!

"நந்தினி! என் கண்மணி! என்ன கோபம்? ஏன் பராமுகம்?" என்று கேட்டுக் கொண்டு, தம் இரும்பை

"தாங்கள் என்னைப் பிரிந்து போய் எத்தனை நாள் ஆயிற்று? முழுமை யாக நாலு நாள் ஆகவில்லையா?" என்று சொன்ன நந்தினியின் குரலில் விம்மல் தொனித்தது. அது எத்தனை யோ வாள்களையும் வேல்களையும் தாங்கி நின்றும் தளராத பழுவேட் டரையரின் நெஞ்சத்தை அனலில் இட்ட மெழுகைப் போல் உருக்கி விட்டது.

"இதற்காகத்தானா இவ்வளவு கோபம்? நாலு நாள் பிரிவை உன் னால் சகிக்க முடியவில்லையா? நான் போர்க்களத்துக்குப் போக நேர்ந் தால் என்ன செய்வாய்? மாதக் கணக் காகப் பிரிந்திருக்க நேரிடுமே?" என்றார்.

"தாங்கள் போர்க்களத்துக்குப் போனால் மாதக் கணக்கில் தங்களை நான் பிரிந்திருப்பேன் என்றா எண்ணி னீர்கள்? அந்த எண்ணத்தை மாற்றிக் கொள்ளுங்கள். தங்களுடைய நிழலைப் போல் தொடர்ந்து நானும் போர்க் களத்துக்கு வருவேன்...."

"அழகாயிருக்கிறது! உன்னைப் போர்க்களத்துக்கு அழைத்துப் போனால் நான் யுத்தம் பண்ணினால் போலத்தான்! கண்மணி! இந்த மார்பும் தோள்களும் எத்தனையோ கூரிய அம்புகளையும் வேல் முனைகளையும் தாங்கியதுண்டு. அவ்வாறு ஏற்பட்ட காயங்கள் 64 என்று உலகோர் என்னைப் புகழ்வது உண்டு. ஆனால் உன்னுடைய மிருதுவான மலர் மேனியில் ஒரு சிறு முள் தைத்துவிட்டால், என்னுடைய நெஞ்சு பிளந்து போய் விடும். எத்தனையோ வாள்களும் வேல்களும் என்னைத் தாக்கிச் சாதிக்க முடியாத காரியத்தை உன் காலில் தைக்கும் சிறிய முள் சாதித்து விடும். உன்னை எப்படி யுத்த களத்துக்கு அழைத்துப் போவேன்? நீ இத்தனை நேரம் கருங்கல் தரையில் நின்று கொண்டிருப்பதே எனக்கு வேதனையாயிருக்கிறது. இப்படி வா! வந்து உன் மலர்ப் படுக்கையில் வீற்றிரு! உன் திருமுகத்தைப் பார்க்கிறேன். நாலு நாள் பிரிவு உனக்கு மட்டும் வேதனை அளித்தது என்று நினையாதே! உன்னைக் காணாத ஒவ்வொரு கணமும் எனக்கு ஒரு யுகமாயிருந்தது. இப்போதாவது என் தாபம் தீர, உன் பொன் முகத்தைப் பார்க்கிறேன்!" என்று கூறி, நந்தினியின் கரத்தைப் பற்றி அழைத்துக் கொண்டு போய் மஞ்சத்தில் உட்கார வைத்தார்.

நந்தினி தன் கண்களைத் துடைத்துக் கொண்டு பழுவேட்டரையரை நிமிர்ந்து பார்த்தாள். தங்க விளக்கின் பொன் ஒளியில் அவளுடைய முகத்தில் மலர்ந்த முத்து முறுவலைப் பார்த்தார் தனாதிகாரி. ஆகா! இந்தப் புன் சிரிப்புக்கு மூன்று உலகத்தையும் கொடுக்கலாமே? மூன்று உலகமும் நம் வசத்தில் இல்லாதபடியால், நம் உடல் பொருள் ஆவி மூன்றையும் இவளுக்காகத் தத்தம் செய்யலாம்! ஆனால் இவளோ நம்மிடம் ஒன்றும் கேட்கிறாள் இல்லை! — இவ்விதம் எண்ணினார் அந்த வீராதி வீரர். அவளைக் கேள்வி கேட்பது, கடிந்து கொள்வது என்கிற உத்தேசம் போயே போய்விட்டது! நந்தினி காலால் இட்ட பணியைத் தலையால் நடத்தி வைக்கும் நிலைமைக்கு வந்து விட்டார்! எவ்வித அடிமைத்தனமும் பொல்லாததுதான்! ஆனால் பெண்ணடிமைத்தனத்தைப் போல் ஒருவனை மதி இழக்கச் செய்வது வேறொன்றுமில்லை!

"நாலு நாள் வெளியூரில் இருந்து விட்டுத்தான் வந்தீர்களே? திரும்பி வந்தவுடனே நேரே ஏன் இங்கு வரவில்லை? என்னை விடத் தங்களுக்குத் தங்கள் தம்பிதானே முக்கியமாகி விட்டார்!" என்று கேட்டாள் நந்தினி. கேட்டு விட்டுக் கள்ளக் கோபத்துடன் அவரைக் கடைக்கண்ணால் பார்த்தாள்.

"அப்படியில்லை, என் கண்மணி! வில்லிலிருந்து புறப்பட்ட பாணத்தைப் போல் உன்னிடம் வருவதற்குத்தான் என் மனம் ஆசைப்பட்டது. ஆனால் அந்த அசட்டுப் பிள்ளை — மதுராந்தகன் — சுரங்க வழியின் மூலமாகப் பத்திரமாகத் திரும்பி வந்து சேர்கிறானா என்று தெரிந்து கொள்வதற்காகவே தம்பியின் வீட்டில் தாமதிக்க வேண்டியதாயிற்று...."

"ஐயா! தாங்கள் எடுத்த காரியங்களிலெல்லாம் எனக்குச் சிரத்தை உண்டு. தங்கள் முயற்சி அனைத்தும் வெற்றி பெற வேண்டுமென்றுதான் நானும் ஆசைப்படுகிறேன். ஆனாலும் நான் ஏற வேண்டிய மூடு பல்லக்கில் ஓர் ஆண் பிள்ளையைத் தாங்கள் ஏற்றிக் கொண்டு போவதை நினைத்தால் எனக்குக் கஷ்டமாகியிருக்கிறது. நாடு நகரங்களில் உள்ள ஜனங்கள் எல்லோரும் தாங்கள் போகுமிடமெல்லாம் என்னையும் கூட அழைத்துப் போவதாக எண்ணுகிறார்கள்...."

"அது எனக்கு மட்டும் சந்தோஷமளிக்கிறது என்று நினைக்கிறாய்? இல்லவே இல்லை! ஆனால் எடுத்த காரியம் பெரிய காரியம். அதை நிறைவேற்றுவதற்காகச் சகித்துக் கொண்டு செய்கிறேன். மேலும், இந்த யோசனை கூறியதே நீதான் என்பதை மறந்துவிட்டாயா? உன்னுடைய மூடு பல்லக்கில் மதுராந்தகனை அழைத்துப் போகும்படி நீதானே சொன்னாய்? கோட்டையிலிருந்து போகும்போதும்


வரும்போதும் அவனைத் தனியாகச் சுரங்க வழியில் அனுப்பும் யுக்தியையும் நீதானே கூறினாய்....?''

''என்னுடைய கடமையைத்தான் செய்தேன். கணவர் எடுத்திருக்கும் காரியத்துக்கு உதவி செய்வது மனைவியின் கடமை அல்லவா? ஏதோ எனக்குத் தெரிந்த யுக்தியைச் சொன்னேன் தங்களுக்கு அதனால்....''

''அது மட்டுமா செய்தாய்? இந்த மதுராந்தகன் உடம்பெல்லாம் விபூதியைப் பூசிக் கொண்டு ருத்ராட்ச மாலையை அணிந்து நமசிவாய ஜபம் செய்து கொண்டிருந்தான்! கோவில், குளம் என்று சொல்லிக் கொண்டு, 'அம்மாவுக்குப் பிள்ளை நான்தான்' என்பதை நிரூபித்துக் கொண்டிருந்தான்! அரசாள்வதில் ஆசை உண்டாக்க நாங்கள் எவ்வளவோ முயன்றும் முடியவில்லை. இரண்டு தடவை நீ அவனுடன் பேசினாய்; உடனே மாறிப் போய்விட்டான். இப்போது அவனுக்கு உள்ள இராஜ்ய ஆசையைச் சொல்லி முடியாது. தற்போது அவனுடைய மனோராஜ்யம் இலங்கையிலிருந்து இமயமலை வரையில் பரவி இருக்கிறது! பூமியிலிருந்து ஆகாசம் வரையில் வியாபித்திருக்கிறது. நம்மைக் காட்டிலும் அவனுக்கு அவசரம் தாங்கவில்லை. சோழ சிம்மாசனத்தில் ஏறத் துடித்துக் கொண்டிருக்கிறான். நந்தினி! அந்தப் பிள்ளை விஷயத்தில் நீ என்ன மாய மந்திரம் செய்தாயோ, தெரியவில்லை....! ஆமாம், நீதான் இப்படிப்பட்ட மாய மந்திரக்காரியாயிருக்கிறாயே? வேறு மந்திரவாதியை நீ ஏன் அழைக்கிறாய்? அதைப் பற்றி அநாவசியமாக ஜனங்கள்....''



''அரசே! அதைப் பற்றி அநாவசியமாக யாரேனும் பேசினால், அப்படிப்பட்ட துஷ்டர்களின் நாக்கைத் துண்டித்துப் புத்தி கற்பிப்பது தங்கள் பொறுப்பு. மந்திரவாதியை நான் ஏன் அழைக்கிறேன் என்பதை முன்னமே சொல்லியிருக்கிறேன். தாங்கள் மறந்திருந்தால், இன்னொரு தடவையும் சொல்லுகிறேன். பழையாறையிலுள்ள அந்தப் பெண் பாம்பின் விஷத்தை இறக்குவதற்காகத்தான். நீங்கள் ஆண்மை உள்ள புருஷர்கள். யுத்த களத்தில் நேருக்கு நேர் நின்று ஆண் பிள்ளைகளோடு போரிடுவீர்கள். 'கேவலம் பெண் பிள்ளைகள்' என்று அலட்சியம் செய்வீர்கள். பெண்களுடன் போர் செய்வது உங்களுக்கு அவமானம். ஆனால் நூறு ஆண்பிள்ளைகளைக் காட்டிலும் ஒரு பெண் பிள்ளை அதிகமான தீங்கு செய்துவிடுவாள். பாம்பின் கால் பாம்பு அறியும். அந்தக் குந்தவையின் வஞ்சனையெல்லாம் உங்களுக்குத் தெரியாது; எனக்குத் தெரியும். தங்களையும் என்னையும் சேர்த்து அவள் அவமானப்படுத்தியதைத் தாங்கள் மறந்திருக்கலாம்; நான் மறக்க முடியாது. நூறு பெண்களுக்கு மத்தியில் என்னைப் பார்த்து. 'அந்தக் கிழவனுக்குத்தான் சாகப் போகிற சமயத்தில் பெண் மோகம் பிடித்துப் புத்தி கெட்டுப்போய்விட்டது;—உன் அறிவு எங்கேயடி போயிற்று? அந்தக் கிழவனைப் போய் ஏன் மணந்து கொண்டாய்?' என்று கேட்டாளே, அதை நான் மறக்க முடியுமா? 'தேவலோக மோகினியைப் போல் ஜொலிக்கிறாயே? எந்த ராஜகுமாரனும் உன்னை விரும்பி மாலையிட்டுப் பட்டமகிஷியாக வைத்திருப்பானே? போயும் போயும் அந்தக் கிழ எருமை மாட்டைப் போய்க் கலியாணம் செய்து கொண்டாயே?' என்று அவள் என்னைக் கேட்டதை மறக்க முடியுமா? இந்த உடம்பில் உயிருள்ள வரையில் மறக்க முடியாது!'' என்று கூறி நந்தினி விம்மி அழத் தொடங்கினாள். அவளுடைய கண்களில் பொங்கிய கண்ணீர் தாரை தாரையாகக் கன்னங்களின் வழியாகப் பெருகி அவளது மார்பகத்தை நனைத்தது.



## அத்தியாயம் 39
## உலகம் சுழன்றது!

முதிய பிராயத்தில் தாம் கலியாணம் செய்து கொண்டது பற்றிப் பலர் பலவிதமாகப் பேசிக் கொள்கிறார்கள் என்பதைப் பழுவேட்டரையர் அறிந்திருந்தார். அப்படி நிந்தனையாகப் பேசியவர்களில் குந்தவைப் பிராட்டியும் ஒருத்தி என்பது அவர் காதுக்கு எட்டியிருந்தது. ஆனால் குந்தவை என்ன சொன்னாள் என்பதை இதுவரை யாரும் அவரிடம் பச்சையாக எடுத்துச் சொல்லவில்லை. இப்போது நந்தினியின் வாயினால் அதைக் கேட்டதும் அவருடைய உள்ளம் கொல்லர் உலைக் களத்தை ஒத்தது. குப், குப் என்று அனல் கலந்த பெருமூச்சு வந்தது. நந்தினியின் கண்ணீர் அவருடைய உள்ளத் தீயை மேலும் கொழுந்து விட்டெரியச் செய்த நெய்யாக உதவிற்று.

''என் கண்ணே! அந்தச் சண்டாளப் பாதகி அப்படியா சொன்னாள்? என்னைக் கிழ எருமை மாடு என்றா சொன்னாள்? இருக்கட்டும்; அவளை .... அவளை .... என்ன செய்கிறேன், பார்! எருமை மாடு அல்லிக் கொடியைக் காலில் வைத்து நசுக்குவது போல் நசுக்கி எறிகிறேன், பார்! இன்னும் .... அவளை .... அவளை ....'' என்று பழுவேட்டரையர் கோபாவேசத்தினால் பேச முடியாது தத்தளித்தார். அவர் முகம் அடைந்த கோர சொரூபத்தை வர்ணிக்க முடியாது.




நந்தினி அவரைச் சாந்தப்படுத்த முயன்றாள். அவருடைய இரும்புக் கையைத் தன் பூவையொத்த கரத்தினால் பற்றி விரல்களோடு விரல்களை இணைத்துக் கோத்துக் கொண்டாள்.

"நாதா! எனக்குநேர்ந்த அவமானத்தைத் தாங்கள் பொறுக்க மாட்டீர்கள் என்பது எனக்குத் தெரியும். ஆனால் மத்தகஜத்தின் மண்டையைப் பிளந்து இரத்தத்தைக் குடிக்கும் வலிமையுள்ள சிங்கம், கேவலம் ஒரு பூனையின் மீது பாய முடியாது. குந்தவை ஒரு பெண் பூனை; ஆனால் பெரிய மந்திரக்காரி. மாயமும் மந்திரமும் செய்துதான் எல்லாரையும் அவள் இஷ்டம் போல் ஆட்டி வைத்துக் கொண்டிருக்கிறாள்! இந்த சோழ ராஜ்யத்தையே ஆட்டி வைத்துக் கொண்டிருக்கிறாள். அவளுடைய மந்திரத்தை மாற்று மந்திரத்தால் தான் வெல்ல வேண்டும். தங்களுக்கு விருப்பமில்லாவிட்டால் சொல்லி விடுங்கள். இன்றைக்கே நான் இந்த மாளிகையை விட்டு வெளியேறுகிறேன்..." என்று கூறி மீண்டும் விம்மினாள்.

பழுவேட்டரையரின் கோப வெறி தணிந்தது; மோக வெறி மிகுந்தது.

"வேண்டாம், வேண்டாம்! ஆயிரம் மந்திரவாதிகளை வேண்டுமானாலும் அழைத்து வைத்துக் கொள். நீ போக வேண்டாம்! என் உயிர் அனையவள் நீ! 'அனையவள்' என்ன? என் உயிரே நீதான்! உயிர் போய்விட்டால் அப்புறம் இந்த உடம்பு என்ன செய்யும்...? இப்போது என்னை நீ விலக்கி வைத்திருப்பது என்னை உயிரோடு வைத்துக் கொல்கிறது! இத்தனை மந்திரம் தெரிந்து வைத்திருக்கிறாயே! எனக்கு ஒருமந்திரம் சொல்லித்தரக்கூடாதா?" என்றார்.

"நாதா! தங்கள் கையில் வாளும் வேலும் இருக்கும்போது மந்திரம் எதற்கு? பேதைப் பெண்ணாகிய என்னிடம் விட்டுவிடுங்கள் மாயமந்திரங்களை! தங்களுக்கு எதற்கு மாயமும் மந்திரமும்?" என்றாள் நந்தினி.

"கண்ணே! நீ உன் பவள வாய் திறந்து 'நாதா' என்று அழைக்கும் போதே என் உடம்பு சிலிர்க்கிறது. உன் பொன் முகத்தைப் பார்த்தால் என் மதி சுழல்கிறது! என் கையில் வாளும் வேலும் இருப்பது உண்மைதான். அதையெல்லாம் போர்க்களத்தில் பகைவர்களைத் தாக்குவதற்கு உபயோகிப்பேன். ஆனால் அந்த ஆயுதங்களை வைத்துக் கொண்டு இந்தக் கொடி மண்டபத்தில் என்ன செய்வேன்? மன்மதனுடைய பாணங்களுக்கு எதிர்ப் பாணம் என்னிடம் ஒன்றுமில்லையே? உன்னிடம் அல்லவா இருக்கிறது? எனக்கு மந்திரம் எதற்காக என்று கேட்கிறாய். என் உடலையும் உயிரையும் ஓயாமல் எரித்துக் கொண்டிருக்கிறதே — அந்தத் தீயைத் தணிப்பதற்காகத்தான்! அதற்கு ஏதாவது மந்திரம் உனக்குத் தெரிந்தால் சொல்லு! இல்லையென்றால், உன் பூமேனியைத் தொட்டு மகிழும் பாக்கியத்தை எனக்குக் கொடு! எப்படியாவது என் உயிரைக் காப்பாற்று! கண்மணி! உலகம் அறிய சாஸ்திர விதிப்படி நீயும் நானும் மணந்து இரண்டரை ஆண்டுகள் ஆகின்றன! ஆயினும் நாம் உலக வழக்கப்படி இல்வாழ்க்கை நடத்த ஆரம்பிக்கவில்லை. விரதம் என்றும் நோன்பு என்றும் சொல்லி என்னை ஒதுக்கியே வைத்

துக் கொண்டிருக்கிறாய். கரம் பிடித்து மணந்து கொண்ட கணவனை வாட்டி வதைக்கிறாய்! அல்லது ஒரு வழியாக எனக்கு உன் கையினால் விஷத்தைக் கொடுத்துக் கொன்று விடு.....!''

நந்தினி தன் செவிகளைப் பொத்திக் கொண்டு, ''ஐயையோ! இம்மாதிரி கொடிய வார்த்தைகளைச் சொல்லாதீர்கள்! இன்னொரு முறை இப்படிச் சொன்னால், நீங்கள் சொல்லுகிறபடியே செய்து விடுவேன். விஷத்தைக் குடித்துச் செத்துப் போவேன். அப்புறம் தாங்கள் கவலையற்று நிம்மதியாக இருக்கலாம்!'' என்றாள்.

''இல்லை, இல்லை; இனி அப்படிச் சொல்லவில்லை. என்னை மன்னித்து விடு! நீ விஷங் குடித்து இறந்தால் எனக்கு மன நிம்மதி உண்டாகுமா? இப்போது அரைப் பைத்தியமாயிருக்கிறேன். அப்பொழுது முழுப் பைத்தியமாகி விடுவேன்.....!''

''நாதா! எதற்காகத் தாங்கள் பைத்தியமாக வேண்டும்? என்றைக்கு நாம் கைப்பிடித்து மணந்து கொண்டோமோ, அன்றைக்கே நாம் இரண்டு உடம்பும் ஓர் உயிரும் ஆகிவிட்டோம். உயிரும் உயிரும் கலந்துவிட்டன; உள்ளமும் உள்ளமும் சேர்ந்துவிட்டன; தங்கள் இதயத்தின் ஒவ்வொரு துடிப்பும் இங்கே என் இதயத்தில் எதிரொலியை உண்டாக்குகிறது. தங்கள் நெஞ்சில் உதிக்கும் ஒவ்வொரு எண்ணமும் இங்கே என் அகக் கண்ணாடியில் பிரதிபலிக்கிறது. தங்கள் புருவம் நெரிந்தால் என் கண் கலங்குகிறது. தங்கள் மீசை துடித்தால் என் குடல் துடிக்கிறது. இப்படி நாம் உயிர்க்குயிரான பிறகு, கேவலம் இந்த உடலைப் பற்றி ஏன் சிந்தனை? மண்ணினால் ஆன உடம்பு இது; ஒரு நாள் எரிந்து சாம்பலாகி மண்ணோடு மண் ஆகப் போகிற உடம்பு இது...!''




''நிறுத்து! நிறுத்து! உன் கொடுமையான வார்த்தைகளைக் கேட்டு என் காது கொப்புளிக்கிறது!'' என்று பழுவேட்டரையர் அலறினார். மேலும் அவள் பேச இடங்கொடாமல் பேசினார்: ''மண்ணினால் ஆன உடம்பு என்றா சொன்னாய்? பொய்! பொய்! தேன் மணம் கமழும் உன் கனி வாயினால் அத்தகைய பெரும் பொய்யைச் சொல்லாதே! உன் உடம்பை மண்ணினால் செய்ததாகவா சொன்னாய்? ஒரு நாளும் இல்லை. உலகில் எத்தனையோ பெண்கள் இருக்கிறார்கள். அவர்களையெல்லாம் பிரம்ம தேவன் மண்ணினாலும் செய்திருக்கலாம். கல்லினாலும் செய்திருக்கலாம். சுண்ணாம்பினாலும் செய்திருக்கலாம். கரியையும் சாம்பரையும் கலந்தும் செய்திருக்கலாம். ஆனால் உன்னுடைய திருமேனியைப் பிரம்மா எப்படிச் செய்தான் தெரியுமா? தேவலோகத்து மந்தார மரங்களிலிருந்து உதிர்ந்த மலர்களைச் சேகரித்தான்; சேகரித்த மலர்களைத் தேவலோகத்தில் தேவாமிர்தம் வைத்திருக்கும் தங்கக் கலசத்தில் போட்டான். அமுதமும் மலர்களும் ஊறிக் கலந்து ஒரே குழம்பான பிறகு எடுத்தான். அந்தக் குழம்பில் வெண்ணிலாக் கிரணங்களை ஊட்டினான். பண்டைத் தமிழகத்துப் பாணர்களை அழைத்து வந்து யாழ் வாசிக்கச் சொன்னான். அந்த யாழின் இசையை




யும் கலந்தான். அப்படி ஏற்பட்ட அற்புதமான கலவையினால் உன் திருமேனியைப் படைத்தான் பிரம்மதேவன்..."

"நாதா! ஏதோ பிரம்மாவுக்குப் பக்கத்தில் இருந்து பார்த்தவரைப் போல் பேசுகிறீர்களே! இந்த வர்ணனைகளுக்கெல்லாம் நான் ஒருத்திதானா அகப்பட்டேன்? தங்களுடைய அந்தப்புரத்தில் எவ்வளவோ பெண்ணரசிகள் இருக்கிறார்கள். இராஜ குலங்களில் பிறந்தவர்கள். எத்தனையோ நீண்ட காலமாக அவர்களுடன் இல்லறம் நடத்தியிருக்கிறீர்கள். என்னைத் தாங்கள் பார்த்து இரண்டரை ஆண்டுதான் ஆகிறது...!" என்று நந்தினி சொல்வதற்குள், பழுவேட்டரையர் குறுக்கிட்டார். அவருடைய உள்ளத்தில் பொங்கிக் கொண்டிருந்த உணர்ச்சி வெள்ளத்தை வார்த்தைகளின் மூலமாகவாவது வெளிப்படுத்திவிட விரும்பினார் போலும். அவரைப் பற்றி எரித்த தாபத் தீயைச் சொல் மாரியினால் நனைத்து அணைக்க முயன்றார் போலும்.

"நந்தினி! என் அந்தப்புரத்து மாதர்களைப் பற்றிச் சொன்னாய். பழமையான பழுவூர் மன்னர் குலம் நீடித்து வளர வேண்டும் என்பதற்காகவே அவர்களை நான் மணந்தேன். அவர்களில் சிலர் மலடிகளாகித் தொலைந்தார்கள். வேறு சிலர் பெண்களையே பெற்றளித்தார்கள். 'கடவுள் அருள் அவ்வளவுதான்' என்று மனநிம்மதியடைந்தேன். பெண்களின் நினைவையே வெகு காலம் விட்டொழித்திருந்தேன். இராஜாங்க காரியங்களே என் கவனம் முழுவதையும் கவர்ந்திருந்தன. சோழ ராஜ்யத்தின் மேன்மையைத் தவிர வேறு எந்த நினைவுக்கும் இந்த நெஞ்சில், இடமிருக்கவில்லை. இப்படி இருக்கும்போதுதான் பாண்டியர்களோடு இறுதிப் பெரும் யுத்தம் வந்தது. வாலிபப் பிராயத்துத் தளபதிகள் பலர் இருந்தபோதிலும் என்னால் பின்தங்கி இருக்க முடியவில்லை. நான் போர்க்களம் சென்றிராவிட்டால், அத்தகைய மாபெரும் வெற்றி கிடைத்தும் இராது. பாண்டியர் படையை அடியோடு நாசம் செய்து மதுரையில் வெற்றிக் கொடி நாட்டிய பிறகு கொங்கு நாடு சென்றேன். அங்கிருந்து அகண்ட காவேரிக் கரையோடு திரும்பி வந்து கொண்டிருந்தேன். வழியில் காடு அடர்ந்த ஓர் இடத்தில் உன்னைக் கண்டேன். முதலில் நீ அங்கு நிற்கிறாய் என்பதை என்னால் நம்பவே முடியவில்லை. கண்ணை மூடி மூடித் திறந்து பார்த்தேன். அப்போதும் நீ நின்றாய். 'நீ வன தேவதையாக இருக்க வேண்டும்; அருகில் சென்றதும் மறைந்து விடுவாய்!' என்று எண்ணிக்கொண்டு நெருங்கினேன். அப்போதும் நீ மறைந்துவிடவில்லை. 'புராணக் கதைகளிலே சொல்லியிருப்பது போல, சொர்க்கலோகத்திலிருந்து சாபம் பெற்றுப் பூமிக்கு வந்த தேவ கன்னிகை அல்லது கந்தர்வப் பெண்ணாயிருக்க வேண்டும்; மனித பாஷை உனக்குத் தெரிந்திராது!'' என்று எண்ணிக் கொண்டு, ''பெண்ணே! நீ யார்?'' என்று கேட்டேன். நீ நல்ல தமிழில் மறுமொழி கூறினாய். 'நான் அநாதைப் பெண்; உங்களிடம் அடைக்

கலம் புகுந்தேன்; என்னைக் காப்பாற்றுங்கள்' என்றாய். உன்னைப் பல்லக்கில் ஏற்றி அழைத்துக் கொண்டு வந்தபோது என் மனம் எண்ணாததெல்லாம் எண்ணியது. உன்னை எங்கேயோ, எப்போதோ, முன்னம் பார்த்திருப்பது போலத் தோன்றியது. ஆனால் நினைத்து நினைத்துப் பார்த்தும் எங்கே என்று தெரியவில்லை. சட்டென்று என் மனத்தை மூடியிருந்த மாயத் திரை விலகியது; உண்மை உதயமாயிற்று. உன்னை இந்த ஜன்மத்தில் நான் முன்னால் பார்த்ததில்லை. ஆனால் முந்தைய பல பிறவிகளில் பார்த்திருக்கிறேன் என்பது தெரிந்தது. அந்தப் பூர்வ ஜன்மத்து நினைவுகள் எல்லாம் மோதிக் கொண்டு வந்தன. நீ அகலிகையாக இந்த உலகில் பிறந்திருந்தாய்; அப்போது நான் தேவேந்திரனாக இருந்தேன். சொர்க்க லோக ஆட்சியைத் துறந்து ரிஷி சாபத்துக்கும் துணிந்து உன்னைத் தேடிக் கொண்டு வந்தேன். பிறகு நான் சந்தனு மகாராஜனாகப் பிறந்திருந்தேன். கங்கைக் கரையோடு வேட்டையாடச் செல்கையில் உன்னைக் கண்டேன்; பூலோகப் பெண்ணைப் போல் உருக் கொண்டிருந்த கங்கையாகிய உன்னைக் காதலித்தேன். பிறகு ஒரு காலத்தில் காவேரிப் பூம்பட்டினத்தில் நான் கோவலனாய்ப் பிறந்திருந்தேன். நீ கண்ணகியாக அவதரித்திருந்தாய். என் அறிவை மறைத்த மாயையினால் உன்னை சில காலம் மறந்திருந்தேன். பிறகு மாயத் திரை விலகிற்று. உன் அருமையை அறிந்தேன். மதுரை நகருக்கு அழைத்துச் சென்றேன். வழியில் உன்னை ஆயர் குடியில் விட்டு விட்டு சிலம்பு விற்கச் சென்றேன். வஞ்சத்தினால் உயிரை இழந்தேன். அதற்குப் பழிக்குப் பழியாக இந்தப் பிறவியில் மதுரைப் பாண்டியன் குலத்தை நாசம் செய்து விட்டுத் திரும்பி வரும்போது உன்னைக் கண்டேன். பல நூறு ஆண்டுகளுக்கு முன்பு பிரிந்த கண்ணகி நீதான் என்பதை உணர்ந்தேன்....!''

இப்படிப் பழுவேட்டரையர் முற்பிறவிக் கதைகளைச் சொல்லிக் கொண்டு வந்தபோது நந்தினி அவர் முகத்தைப் பார்க்காமல் வேறு திசையை நோக்கிக் கொண்டிருந்தாள். அதனால் அவள் முகத்தில் அப்போது தோன்றிய பாவ வேறுபாடுகளைப் பழுவேட்டரையர் கவனிக்கவில்லை. கவனித்திருந்தால், அவர் தொடர்ந்து பேசியிருப்பாரா என்பது சந்தேகந்தான்.

மூச்சு விடுவதற்காக அவர் சற்று நிறுத்தியபோது, நந்தினி அவரைத் திரும்பிப் பார்த்து, ''நாதா! தாங்கள் கூறிய உதாரணங்கள் அவ்வளவு பொருத்தமாயில்லை. எல்லாம் கொஞ்சம் அபசகுனமாகவே இருக்கின்றன. வேண்டுமென்றால், தங்களை மன்மதன்



என்றும் என்னை ரதி என்றும் சொல்லுங்கள்!'' என்று முன்போல் முக மலர்ந்து புன்னகை செய்தாள்.

பழுவேட்டரையரின் முகமும் அப்போது மகிழ்ச்சியினாலும் பெருமையினாலும் மலர்ந்து விளங்கியது. எவ்வளவு அவலட்சணமான மனிதனாயினும், தான் காதலித்த பெண்ணினால், 'மன்மதன்' என்று அழைக்கப்பட்டால் குதூகலப்படாதவன் யார்! என்றாலும் தற்பெருமையை விரும்பாதவர்போல் பேசினார்.

''கண்மணி! உன்னை ரதி என்பது மிகவும் பொருத்தமானதுதான். ஆனால் என்னை 'மன்மதன்' என்று சொல்வது பொருந்துமா! உன் அன்பு மிகுதியினால் சொல்கிறாய்!'' என்றார்.

''நாதா! என் கண்களுக்குத் தாங்கள்தான் மன்மதன். ஆண் பிள்ளைகளுக்கு அழகு வீரம். தங்களைப் போன்ற வீராதி வீரர் இந்தத் தென்னாட்டில் யாரும் இல்லை என்பதை உலகமே சொல்லும். அடுத்தபடியாக, ஆண்மை படைத்தவர்களுக்கு அழகு தருவது அபலைகளிடம் இரக்கம். அந்த இரக்கம் தங்களிடம் இருப்பதற்கு நானே அத்தாட்சி. இன்ன ஊர், இன்ன குலம் என்று தெரியாத இந்த ஏழை அநாதைப் பெண்ணைத் தாங்கள் அழைத்து வந்து அடைக்கலம் அளித்தீர்கள். இணையில்லாத அன்பையும் ஆதரவையும் என் பேரில் சொரிந்தீர்கள். அப்படிப்பட்ட தங்களை நான் வெகுகாலம் காத்திருக்கும்படி செய்ய மாட்டேன். என்னுடைய விரதமும் நோன்பும் முடியும் காலம் நெருங்கி விட்டது....'' என்றாள்.



''கண்மணி! என்ன விரதம், என்ன நோன்பு என்பதை மட்டும் தெளிவாகச் சொல்லி விடு! எவ்வளவு சீக்கிரம் முடித்துத் தரலாமோ அவ்வளவு சீக்கிரத்தில் முடித்துத் தருவேன்!'' என்றார் பழுவூர் அரசர்.

''தன்னைக் காட்டிலும் மன்மதன் வேறு இல்லை என்று எண்ணியிருக்கும் இந்தச் சுந்தர சோழருடைய சந்ததிகள் தஞ்சைச் சிம்மாசனத்தில் ஏறக் கூடாது. தற்பெருமைகொண்ட அந்தக் குந்தவையின் கர்வத்தை ஒடுக்க வேண்டும்....''

''நந்தினி! அந்த இரண்டு காரியங்களும் நிறைவேறி விட்டதாகவே நீ வைத்துக் கொள்ளலாம். ஆதித்தனுக்கும் அருள்மொழிவர்மனுக்கும் பட்டம் கிடையாது. மதுராந்தகனுக்கே பட்டம் கட்ட வேண்டும் என்று இந்த ராஜ்யத்தின் தலைவர்கள் எல்லாரும் சம்மதித்துவிட்டார்கள்....''

''எல்லாரும் சம்மதித்து விட்டார்களா? உண்மைதானா?'' என்று நந்தினி அழுத்தமாகக் கேட்டாள்.

''இரண்டு மூன்று பேரைத் தவிர மற்றவர்கள் எல்லாரும் சம்மதித்து விட்டார்கள். கொடும்பாளூரானும், மலையமானும், பார்த்திபேந்திரனும் நம்முடன் என்றும் இணங்க மாட்டார்கள். அவர்களைப் பற்றிக் கவலையில்லை.....''

''ஆயினும், காரியம் முடியும் வரையில் ஜாக்கிரதையாக இருக்க வேண்டியதுதானே?''

''அதற்குச் சந்தேகம் இல்லை. எல்லா ஜாக்கிரதையும் நான் செய்து கொண்டுதான் வருகிறேன். மற்றவர்களின் முட்டாள்தனத்தினால் பிசகு நேர்ந்தால்தான் நேர்ந்தது. இன்றைக்குக் கூட அத்தகைய பிசகு ஒன்று நேர்ந்திருக்கிறது. காஞ்சியிலிருந்து வந்த ஒரு வாலிபன் காலாந்தகனை ஏமாற்றி விட்டுச் சக்கரவர்த்தியைச் சந்தித்து ஓலை கொடுத்திருக்கிறான்.....''

''ஆகா! தங்கள் தம்பியைப் பற்றித்

# Binatone

# 3 YEAR QUARTZ GUARANTEE

## on Colour Picture Tube

பினடோனின் நவீன குவார்ட்ஸ் நுட்பச் சாதனையின் பலன்

உங்கள் டிவியின் கலர்படக் குழாயை எல்லா நேரங்களிலும் பாதுகாக்கும் ஈடிணையற்றதொரு கண்டுபிடிப்பு; லண்டனிலும் ஜப்பானிலும் உள்ள பினடோன் ஆராய்ச்சி & அபிவிருத்திப் பிரிவு விஞ்ஞானபூர்வமாக நிரூபித்துள்ளது.

டிவி வாங்குவோர் ஒவ்வொரு நாளும் குவார்ட்ஸ் டிவியை கேட்டுவாங்குவதில் வியப்பில்லை.

புதியதை வாங்குங்கள், சிறந்ததை வாங்குங்கள், இதைவிடச் சிறந்தது வேறில்லை.



## Binatone

*Q QUARTZ | C COLOUR | F FILTER | S SYSTEM

நீடித்துழைக்க தயாரிக்கப்பட்டது

மேல்விவரங்களுக்கு உங்கள் உள்ளூர் டீலருடன் தொடர்புகொள்க. சிரமம் இருப்பின் அணுகுக :
பினடோன் எலக்ட்ரானிக்ஸ் 23/4788-90 அன்ஸாரி ரோடு, தரியாகஞ்ச், புதுதில்லி-110002.

Arms Communications-416 TAM

# விஸ்ட்ரம்

ஒரு டயபடிக் உணவு




நீரிழிவுக்காரர்களுக்கென்றே பிரத்யோகமாக வடிவமைக்கப்பட்டது.

சோர்வை நீக்கி, சக்தியை கொடுத்து தெம்பை ஊட்டுகின்றது

கொழுப்புச் சத்து சிறிதும் இல்லாதது

முழுவதும் தானிய, பருப்பு வகைகளால் ஆனது

செயற்கை வண்ணமோ, மணமோ, ருசியோ சேர்க்கப்படாதது இயற்கை தந்த பாதுகாப்புடன் அளிக்கப்படுகிறது

ஸ்பென்ஸர்ஸ், சிந்தாமணி, நீல்கிரிஸ் மற்றும் எல்லா மருந்துக் கடைகளிலும், டிபார்ட்மெண்டல் கடைகளிலும் கிடைக்கும்.

தாங்கள் ஓயாமல் புகழ்ந்து கொண்டிருக்கிறீர்கள். அவருக்குச் சாமர்த்தியம் போதாது என்று நான் சொல்லவில்லையா?''

''இந்த விஷயத்தில் அசட்டுத்தனமாகத்தான் போய்விட்டான்! ஏதோ நம் அரண்மனை முத்திரை மோதிரத்தை அந்த வாலிபன் காட்டியதாகச் சொல்கிறான்....!''

''ஏமாந்து போனவர்கள் இப்படித்தான் ஏதாவது காரணம் சொல்வார்கள்! ஏமாற்றிய அந்த வாலிபனைப் பிடிக்க முயற்சி ஏதும் செய்யவில்லையா?''

''முயற்சி செய்யாமல் என்ன? கோட்டைக்கு உள்ளேயும் வெளியேயும் வேட்டை ஆரம்பமாகிவிட்டது! எப்படியும் பிடித்து விடுவார்கள். இதனாலெல்லாம் நம்முடைய காரியத்துக்கு ஒன்றும் பங்கம் வந்துவிடாது. சக்கரவர்த்தி காலமானதும் மதுராந்தகன் சிம்மாதனம் ஏறுவது நிச்சயம்..''

''நாதா! என்னுடைய விரதம் என்னவென்பதைத் தங்களுக்குத் தெரியப்படுத்தும் காலம் இப்போது நெருங்கி வந்துவிட்டது....''

''கண்ணே! அதைச் சொல்லும்படிதான் நானும் கேட்கிறேன்....''

''மதுராந்தகன் — அந்த அசட்டுப் பிள்ளை — பெண் என்றால் பல்லை இளிப்பவன் — அவன் பட்டத்துக்கு வருவதினால் என்னுடைய விரதம் நிறைவேறிவிடாது....''

''வேறு எதனால் நிறைவேறும்? உன் விருப்பத்தைச் சொல்லு! நிறைவேற்றி வைக்க நான் இருக்கிறேன்...''

''அரசே! என் சிறு பிராயத்தில் ஒரு பிரபல ஜோசியன் என் ஜாதகத்தைப் பார்த்தான். பதினெட்டுப் பிராயம் வரையில் நான் பற்பல இன்னல்களுக்கு உள்ளாவேன் என்று சொன்னான்....''

''இன்னும் என்ன சொன்னான்?''

''பதினெட்டுப் பிராயத்துக்குப் பிறகு தசை மாறும் என்றான். இணையில்லாத உன்னத பதவியை அடைவேன் என்று சொன்னான்....''

''அவன் சொன்னது உண்மைதான்! அந்த ஜோசியன் யார் சொல்லு! அவனுக்குக் கனகாபிஷேகம் செய்து



வைக்கிறேன்.''

''நாதா!''

''கண்ணே!''

''இன்னும் அந்த ஜோசியன் கூறியது ஒன்று இருக்கிறது. அதைச் சொல்லட்டுமா?''

''கட்டாயம் சொல்லு! சொல்லியே தீர வேண்டும்!''

''என்னைக் கைப்பிடித்து மணந்து கொள்ளும் கணவர் மணிமகுடம் தரித்து ஒரு மகா சாம்ராஜ்யத்தின் சிம்மாதனத்தில் ஐம்பத்தாறு தேசத்து ராஜாக்களும் வந்து அடிபணிந்து ஏத்தும் சக்கரவர்த்தியாக வீற்றிருப்பார் என்று அந்த ஜோசியன் சொன்னான். அதை நிறைவேற்றுவீர்களா?''

பழுவேட்டரையரின் செவியில் இவ்வார்த்தைகள் விழுந்ததும், அவருக்கு முன்னாலிருந்த நந்தினியும் அவள் வீற்றிருந்த மஞ்சமும் சுழன்றன. லதா மண்டபம் சுழன்றது. அந்த மண்டபத்தின் தூண்கள் சுழன்றன. எதிரே இருந்த இருளடர்ந்த தோப்புச் சுழன்றது. நிலாக் கதிரில் ஒளிர்ந்த மர உச்சிகள் சுழன்றன. வானத்து நட்சத்திரங்கள் சுழன்றன. இருபுறத்து மாளிகைகளும் சுழன்றன. உலகமே சுழன்றது!

(தொடரும்)



# பசியும்

என் புதிய மனைவி எதையாவது சமைத்துக் கொண்டு வந்து வைத்தால், 'ஆஹா, ஓஹோ, பேஷ் பேஷ்' என்றெல்லாம் சதா புகழ்ந்து கொண்டே இருக்க வேண்டும். அப்போதுதான் அவளுக்கு ஆனந்தமாய் இருக்கும். இல்லையேல் முகம் காற்று இறங்கிய பலூனைப் மாறிவிடும். இந்த விஷயமெல்லாம் எனக்குத் தெரியாது. ஏனென்றால் நானோ ஒரு சேல்ஸ் ரெப்ரசென்டேடிவ். கையில் தோல் பையை எடுத்துக் கொண்டால் எங்கே பயணம் என்பது எனக்கே தெரியாது. பெரும்பாலான நாட்கள் நான் சென்னையிலிருந்து காணாமல் போய் விடுவேன்.

"கியா பாத்ஹை?" என்று பாம்பே செனபாத்தியில் கேட்டுவிட்டு, "எலா உன்னரு?" என்று விஜயவாடாவில் விசாரித்துவிட்டு, 'எந்தா அயாளு பறையுன்னது?' என்று கேரளா கோட்டயத்தில் கேட்டுத் தெரிந்து கொண்டு வீடு திரும்புவது வழக்கம். என்னுள் சகல பாஷைகளும் சங்கமம். ருசி பசி என்று பெரிதாய் ஏதும் பாகுபாடு இல்லை. ச்ர்வ மாநில உணவுகளையும் என் வயிறு சகஜமாய் ஏற்றுக் கொள்ளும். இப்படியொரு நிலையில் என் மனைவியின் சமையலைப் புகழ எப்படிப் புத்தி போகும்?

அன்றும் அப்படித்தான்.

தொடர்ச்சியான இரண்டு வாரச் சுற்றுப் பயணத்திற்குப் பிறகு தொங்கிப் போய் வீடு திரும்பினேன்.

மனைவி பவானி என்னை எதிர்பார்த்து வாசலில் நின்றிருந்தாள். புன்னகை பூத்தாள்.

"வாங்க! எவ்வளவு நேரமா உங்களுக்காகக் காத்துக்கிட்டிருக்கேன் தெரியுமா?" என்றாள் ஏக்கத்துடன். "ஏன் இவ்வளவு லேட்டு?" — குரல் நெஞ்சைப் பூஜ்யம் டிகிரிக்குக் கொண்டு வந்தது.

"ஸாரி, பவானி!" என்று உள்ளே நுழைந்தேன். மைசூரிலிருந்து அவளுக்காக வாங்கி வந்த சேலையை உறையுடன் ஆசையாய்த் தந்தேன்.

"இந்தா டார்லிங், உனக்குன்னு மைசூர் லேருந்து ஒரு புடைவை வாங்கிக்கிட்டு வந்தேன்."

அவள் மிகுந்த பரவசத்தோடு அதை வாங்கிக் கொண்டு என்னைப் பார்த்தாள். கண்களில் ஜலம் கட்டியது. அப்போதுதான் அவள் ஒரு 'எமோஷனல் டைப்' என்பதைத் தெரிந்து கொண்டேன். "என்ன பவானி இது?" என்று செல்லமாய்க் கன்னத்தைத்

# ருசியம்...!

தட்டினேன்.

குளித்துவிட்டுச் சாப்பாட்டு அறைக்கு வந்தபோது மேஜையின் மீது எல்லாம் தயாராய் இருந்தது. கமகமவென்று மணம் நாசியைத் துளைத்தது. இருந்த பசியில், அவள் பரிமாறியதும் ஹார்பர் லோட் அடிப்பது போல் கபகபவென்று சாப்பிட ஆரம்பித்தேன்.

பவானி மிகுந்த ஆவலாய்க் கேட்டாள்.

"நல்லா இருக்கா?"

"நல்லாத்தான் இருக்கு." ஏதோ நினைவாய்ச் சொல்லிவிட்டேன். அவள் முகம் கவலைக்கிடமாய் ஆயிற்று.

"அது என்ன 'தான்' போடறீங்க?"

"ஸாரி, ரொம்ப நல்லா இருக்கு."

"ஆமாம். அதுவும் நான் கேட்டாத்தான் சொல்றீங்க?"

"சரி, இனிமே நீ கேட்காமலே சொல்றேன்."

"நான் உங்களுக்காக எவ்வளவு ஆசையா செஞ்சு வைச்சேன், தெரியுமா? நீங்க என்னடான்னா...."

கண்கள் வருஷிக்கத் தயார் நிலையில் இருந்தன. இது அவளுடைய விசேஷ குணம். சின்ன விஷயத்தையெல்லாம் சினிமாஸ்கோப் ஆக்கிவிடுவாள். எந்த சமயத்தில் அழுவாள், எந்த சமயத்தில் சிரிப்பாள் என்பது ஊகிக்க முடியாத சமாசாரம். அவள் அழுவதைப் பார்த்தால், நீலிக்கே அலுப்புத் தட்டிவிடும். பொறுமையைக் கடைப்பிடித்து, அவளைத் தேற்றும் பணியில் இறங்கினேன்.

"என்னடா கண்ணு, இதுக்கெல்லாம் போயி கோவிச்சுக்கறே? பைவ் ஸ்டார் ஹோட்டல் சமையலை விட இது எவ்வளவு டாப்பா இருக்கு தெரியுமா?"

பூரித்துப் போனாள். கண்களைப் பெரிதாக்கினாள்.

"நிஜமாவா சொல்றீங்க?"

"பின்னே, பொய்யா சொல்றேன்? இதெல்லாம் ஒரு கலை. எல்லோருக்கும் வருமா? எங்கே எனக்காகக் கொஞ்சம் சிரி"

சிரித்தாள். என் பக்கத்தில் வந்து நின்றாள். என் சட்டை பட்டனைத் திருகிக் கொண்டே ஆவலாய்க் கேட்டாள்.

"இந்தப் புடைவை எப்படியிருக்குன்னு நீங்க சொல்லவேயில்லையே?"

பார்த்தேன். அது அவளுக்கு எடுப்பாய் இல்லை. வெளிப்படையாய்ச் சொல்லிவிட்டேன்.

"உன்னுடைய நிறத்துக்கு இது அவ்வளவு எடுப்பாய் இல்லையே, பவானி, இதை எங்கே வாங்கினே?"

அவள் முகத்தில் கப்பென்று இருள் மண்டியது.

"நல்லா இருக்கு நீங்க சொல்றது? நீங்க வாங்கிட்டு வந்த புடைவை, நீங்களே நல்லா இல்லைங்கறீங்க...."

வாரி அடித்து உட்கார்ந்தேன். எங்கோ பிசகு ஏற்பட்டிருக்கிறது என்பதை உணர்ந்தேன். அப்போதே அதற்குக் காரணகர்த்தா யார் என்பதையும் புரிந்து கொண்டேன்.

சக ஊழியன் நந்து! அவனும் என்னுடன் மைசூருக்கு வந்திருந்தான். இருவரும் ஆளுக்கொரு புடைவையை வாங்கினோம். ஆனால் புடைவை எப்படியோ மாறிவிட்டது. சோடா பாட்டில்கண்ணாடி போட்டிருந்தும், புடைவை உறை ஒரே மாதிரி இருந்ததால் அவன் மாற்றி எடுத்துக் கொண்டு போய்விட்டான்.

விஷயத்தைச் சொன்னேன்.

"ஒண்ணுமில்லே பவானி. புடைவை எப்படியோ கைமாறியிருக்கு."

"எப்படிங்க மாறும்? வேறே யாருக்காவது புடைவையை வாங்கினீங்களா?"

"சீ! சீ! என்ன கேள்வி இது? என்னோட ஒரு பாவி வந்திருந்தான். அவன் செஞ்ச வேலையிது. நான் ஒழுங்காத்தான் வாங்கின புடைவையைப் பத்திரப் படுத்தி வச்சேன்."

"சும்மா சொல்றீங்க. என் மேல் உங்களுக்கு அக்கறை இருந்தா இப்படிக் கேர்லஸ்ஸா இருந்திருப்பீங்களா?"

"அப்படியெல்லாம் ஒண்ணுமில்லே ராஜா...." என்றேன் கொஞ்சலாய். "இப்பக் கூட ஒண்ணும் மிஞ்சிடலே. நீ ஒண்ணு செய்யேன்."

"என்ன?"

"இந்தப் புடைவையைப் பேசாம உன் தங்கச்சி மாதவிக்குக் கொடுத்துடு. அவளுக்குத்தான் இது பொருத்தமா இருக்கும். உனக்கு நான் வேறே புடைவை வாங்கித் தரேன்."

ஏனோ இந்தப் பாழாய்ப் போன யோசனையைச் சொல்லித் தொலைத்தேன். நிலைமை இன்னும் மோசமானது!

"என்ன வார்த்தை சொல்லிட்டீங்க? எனக்குப் புரிஞ்சு போச்சுங்க. என்னைவிட உங்களுக்கு என் தங்கச்சிதான் பெரிசா போயிட்டா...."

நான் அப்படி என்ன சொல்லிவிட்டேன்?

"ப்ளீஸ் டோண்ட் கெட் எக்ஸைடட்" என்றேன் சாந்தமான குரலில். "நான் சொல்றதைக் கொஞ்சம் நிதானமாக் கேளு".

அவள் என்னைப் பேசவிடவில்லை. நான் ஏதோ ஒரு பெரிய துரோகம் செய்துவிட்டதைப் போல என்னைப் பார்த்தாள்.

"இன்னும் என்னங்க கேட்க வேண்டியிருக்கு? நீங்கதான் பட்டவர்த்தனமா சொல்லிட்டீங்களே. உங்களுக்கு என்னைக் கண்டா பிடிக்கலே. யு டோண்ட் லவ் மி. உங்களுக்கு என்தங்கச்சியைத்தான்பிடிச்சிருக்கு. என்னைவிட அழகா, தளதளன்னு இருக்கா, இல்லே? அதான் என்னைக் கண்டா பிடிக்கலே. யூ

மதுமலேனு



''பையனை ஏன் சார் அடிக்கிறீங்க?''

''பின்னே என்ன சார். 'பள்ளிக்கூடத்துக்குப் போடா'ன்னு, 'இப்போ என்னப்பா அவசரம்? பின்னாடி முதியோர் கல்வியில படிச்சுக்க றேங்கறான்!''

— அரகண்டநல்லூர் சாதிக்பாஷா.

ஹேட் மி. யூ டோண்ட் லவ் மி...''

சின்னத்தூறலாக இருந்த விசும்பல் பலத்த மழையானது. சடேரெனக் கட்டிலில் குப்புற விழுந்து மெத்தையில் முகத்தைப் புதைத்துக் கொண்டாள். நான் விதானத்தை வெறித்துப் பார்த்தேன்.

ஆபீஸில் நுழைந்ததும் நந்து தென்பட்டான். அவனை ஓங்கி அறைய வேண்டும் போலிருந்தது.

''ஸாரிடா....'' என்று அருகே வந்தான்.

''என்னடா ஸாரியும், பூரியும்? பைனாகுலர் மாதிரி கண்ணாடி மாட்டிக்கிட்டிருக்கியே, அப்பக் கூடவா உனக்குக் கண்ணு அவிஞ்சு போச்சு?''

''டேய் கோவிச்சுக்காதேடா. நான் என்ன, வேணும்னு செஞ்சேன்? புடைவையை மாத்தி எடுத்துக்கிட்டுப் போனதுல என் வீட்டுலயும் எவ்வளவு பெரிய கலாட்டா நடந்துச்சு தெரியுமா? இன்னொரு புடைவையை எந்தப் பொண்ணுக்குக் கொண்டு போயி கொடுத்தீங்கன்னு என் பொண்டாட்டி என்னைப் பிலுபிலுன்னு பிடிச்சு உலுக்கிட்டா. நேத்துல இருந்து சாப்பாடு கூட இல்லே.'' பரிதாபமாய்ச் சொன்னான்.

என் கோபம் குறைந்தது. அதே சமயம் என் மனசில் ரகசியமான சந்தோஷம் வட்டமடித்தது. இவன் மனைவியைவிட என் மனைவியே மேல் போலிருக்கிறது.

இடைவேளையின்போது நந்துவை இன்டர்காமில் அழைத்தேன். வந்தான்.

''என்ன சாப்பிடப் போவோமா?''

''நான் ஒண்ணும் கொண்டுட்டு வரலேடா'' என்றான் கையை விரித்து.

''சும்மா சோக கீதம் பாடாதேடா! எனக்குத்தான் சாப்பாடு வீட்டுலேருந்து காரியரில் வந்திருக்கே. ரெண்டு பேரும் ஷேர் பண்ணிச் சாப்பிடுவோம். வா.''

டிப்பன் காரியர் பாரமாய் இருந்தது. உள்ளே என்னென்ன வகையறுக்களோ தெரியவில்லை. நந்துவின் நாக்கில் தானாய்த் தண்ணீர் ஒழுகியது. டிபன் காரியரைத் திறந்தேனோ இல்லையோ திருப்பரங்குன்ற கழுகு மாதிரி சுபசுபவென்று விழுங்கினான். ஐந்தே நிமிடத்தில் முக்கால்வாசியைக் காலி செய்தான். பிறகு சொன்னான்.

''நீ கொடுத்து வைச்சவண்டா.''

நான் விநோதமாய் அவனைப் பார்த்தேன்.

''எதுக்குடா?''

''இவ்வளவு பிரமாதமா சமைக்கிற ஒருத்தியை மனைவியா அடையறதுக்கு உண்மையிலேயே கொடுத்து வைச்சிருக்கணும். என் மனைவியும் இருக்காளே!''

''ஏண்டா?''

''அதை ஏன் கேட்கிறே? இந்த மாதிரியெல்லாம் என் பொண்டாட்டிக்குச் சமைக்க வராது. எல்லாம் ஆயுர்வேத மருந்து மாதிரி இருக்கும். இந்த அழகுல நல்லா இருக்கா, நல்லா இருக்கான்னு நூத்தி எட்டு தடவை கேட்பா. அதுலயே பாதி வாழ்க்கை வெறுத்திடும்.''

அவனுடைய அங்கலாய்ப்பு எனக்குப் புரிந்தது. அதேசமயம் எனக்குள் ஒரு கேள்வியும் எழுந்தது. 'என் மனைவியின் சமையல் உண்மையிலேயே பிரமாதம்தானா?'

அந்த விநாடியே பவானியைப் பாராட்ட மனசு துடித்தது.

வீட்டுக் கதவைத் தட்டியதும் வேலைக்காரி காதம்பரி வந்து கதவைத் திறந்தாள். என் புருவங்களின் விசாரிப்பு புரிந்ததும்,

''அம்மாவுக்கு உடம்பு சரியில்லாம படுத்துக்கிட்டிருக்காங்க. சின்னம்மா இப்போதான் போனாங்க,'' என்றாள்.

வேகமாய்ப் படுக்கை அறைக்குச் சென்றேன். மனைவி கண்ணை மூடிப் படுத்திருந்தாள். நெற்றி வியர்த்திருந்தது. கையைத் தொட்டுப் பார்த்தேன். உஷ்ணமாய் இருந்தது.

அவள் பலவீனமாய் என்னைப் பார்த்தாள்.

''ஜுரமா, பவானி?'' என்றேன் வருத்தத்துடன். ''கொஞ்சம் எழுந்திரு. டாக்டர் கிட்டே போயிட்டு வருவோம்.''

''வேண்டாங்க'' என்றாள் ஈனஸ்வரத்தில். ''இப்பத்தான் டாக்டர் கிட்டே போயிட்டு வந்தேன்.''

அசுவாரஸ்யமாய் இருந்த அந்த வேளையில் அவளைத் தெம்பூட்ட நினைத்து அவளிடம் அந்த விஷயத்தைச் சொன்னேன்.

''பவானி! இன்னைக்குச் சமையல் ஏ ஒன் தெரியுமா? டாப் கிளாஸ். இப்படியொரு சமையலை யாராலேயும் செய்ய முடியாது.''

அதிர்ச்சியின் சின்னமாய் அவளது புருவங்கள் உயர்ந்தன. முகம் சரேலென்று இறுகிப் போயிற்று.

''உங்களுக்குத்தான் என் சமையல்னாலே பிடிக்காதே! என்னோட தங்கச்சி பண்ணா தானே உங்களுக்குப் பிடிக்கும்? உங்களுக்கு அவ மேலதானே இஷ்டம். இப்படியொரு பச்சைத் துரோகம் பண்ண உங்களுக்கு எப்படிங்க மனசு வந்தது.''

எனக்குத் தூக்கி வாரிப் போட்டது.

''பவானி!''

''டோண்ட் டச் மி. என்னைக் கண்டா தான் உங்களுக்குப் பிடிக்கலையே! யு டோண்ட் லவ் மி. யு ஹேட் மி. என் தங்கச்சியைத் தான் உங்களுக்குப் பிடிச்சிருக்கு. ஐ நோ... ஐ நோ... யு டோண்ட் லவ் மி.''

'சின்னம்மா இப்போதான் போனாங்க' என்று வேலைக்காரி சொன்னது அந்தக் கணத்தில் நினைவுக்கு வர, எனக்கு ஓங்கித் தலையில் அடித்துக் கொள்ள வேண்டும் போல் இருந்தது.

பவானி குலுங்கிக் குலுங்கி அழ ஆரம்பித்தாள்.


கோத்ரெஜ்
புதிய
மேகா
ஏ ஓ எஸ்* கொண்ட
நீல டிடர்ஜெண்ட் கட்டி
என்ன
அருமையான
சலவை !
MEGA
Mudra: B:GS 4223 TAM
*ஏஓஎஸ், அதிக நுரையையும் அதிக சலவைத்
திறனையும் தரும் அற்புதமான மூலப்பொருள்.

# நிழல் யுத்தம்

## பாலகுமாரன்

## 5

வீரம் என்பது பயிற்றுவிக்கப்படுகின்ற குணம் அல்ல. ஏதோ ஒரு நேரத்தில் உள்ளே அது நிகழ்ந்து விடுகிறது. வீரம் என்பது உபாதைகளுக்குத் துணிந்து விடும் செயல். வலி தாங்கும் துணிவு.'மரணம் வரும். அவ்வளவுதானே' என்று, சதா மிரட்டிக் கொண்டிருக்கும் ஓர் உணர்வைத் துச்சமாக்குதல்.

கண்ணெதிரே மலர்ச்சியும், சிரிப்பும், கும்மாளமும் திறனும் மிக்க இளைஞர்கள் ஆயிரக்கணக்கில் சிதைந்து செத்தபோது அந்த மாயவரத்துப் பிராமண இளைஞன் மூஷ்டி மடக்கினான்.

இத்தனை பேர் கண் முன்னாடி கொன்னுட்டு.... 'வுட்டுடுவேனா, உன்னை!' என்று உள்ளே மனம் கறுவினான். யுத்தம் என்பதை முழுவதும் அனுபவிக்க ஆசைப்பட்டான். வாஷிங்டனில் நேசப் படைகளில் ஒருவனாய் ஏற்றுக் கொள்ளப்பட்டான். பேர்ள் ஹார்பர் பலமாகத் தாக்கப்பட்டபோது, வீரம் காட்டிய எல்லோருக்கும் பதவி உயர்வு வழங்கப்பட்டது. சங்கரன் சார்ஜென்ட் ஆக்கப்பட்டான். லெப்டினன்ட் ஜெனரல் ஓமர் ப்ராட்லியிடம் போய் வேலை செய்யும்படி அனுப்பப்பட்டான்.

மெல்லிய மூக்குக் கண்ணாடியும் சாந்தமான முகமும் கொண்ட அந்த லெப்டினன்ட் ஜெனரலுக்குச் சங்கரனைப் பார்த்தவுடன் பிடித்துவிட்டது.

''ஆங்கிலம் பேசுவாயா இந்தியனே...''

மடை திறந்தாற் போல் மாயவரம் கல்லூரியில் மனனம் செய்த கீட்ஸ் கவிதைகளைச் சொல்ல, ப்ராட்லி கைதட்டிப் பாராட்டினார்.

''போர்க்களத்துக்கு நடுவே கவிதை சொல்பவன் எனக்குத் தேவைதான்.''

''எதற்கு ஐயா?''

''அவ்வப்போது நான் மனிதன் என்பதை நினைப்பூட்டிக் கொள்ள.''

பிரிட்டனுக்குத் தளவாடங்கள் போகும்போது துணைக்கு அமெரிக்கக் கடற்படை போயிற்று. ஜெர்மனியின் யூ போட் என்கிற நீர் மூழ்கிக் கப்பல்களைத் துரத்தித் துரத்தி அடித்தது.

பெரிய முள்ளுப் பந்து போல் மிதக்கும் மிதவைக் குண்டுகள் தேடித் தேடி நாசம் செய்தது. நான்கு வருடங்களைப் ப்ராட்லி கூடவே இருந்து, சட்டைப் பித்தான் தைத்து, மேஜை சுத்தம் செய்து, பேப்பர்களை அடுக்கிக் கொடுத்து, டெலிபோன் கால் கவனித்து, தேவையெனில் சமைத்துப் போட்டு, நேரம் கிடைக்கிறபோது கவிதைகள் பேசி, 'லெப்டினன்ட் ஜெனரலை நான்கு மணி நேரம் தூங்க விடுங்கள், நான் அவரை எழுப்பமாட்டேன்!' என்று பிற அதிகாரிகளை முறைத்துக் கொள்ளும் அளவுக்குச் செல்வாக்கு உயர்ந்தது..

''ஷாங்கி... ஜெனரலை மேல் தள விருந்துக்கு எப்படியாவது அழைத்து வா ஷாங்கி'' — ஸோல்ஜர்கள் கெஞ்சும் அளவுக்குத் தோரணை உயர்ந்தது.

எடுபிடிதான். ஆனால் அமெரிக்கா முழுக்கச் சுற்ற முடிந்தது. உதவியாள்தான். பசிபிக் சமுத்திரம் மொத்தமும் உலா வந்தாயிற்று.

நடுக்கடலில் பிரிட்டிஷ் கப்பலில் சர்ச்சிலைச் சந்திக்க முடிந்தது. உலக சரித்திரத்தின் முக்கியமான நாட்களில் முக்கியமான இடத்தில் உயிரோடு வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறோம் என்கிற நினைப்பு நெஞ்சை விம்ம வைத்தது.

ரம் குடிப்பதும் மாட்டு மாமிசம் சாப்பிடுவதும் சாதாரணமாயிற்று. அமெரிக்க ஸோல்ஜர்களுடன் வில்லியன் தெருக்களில் உலாவிப் பிரும்மாண்டமான விபசாரியுடன் ஒருமுறை உறவு அனுபவித்தாயிற்று.

கப்பல்கள், இன்னும் அதிகமான க்ளைடர் ஏரோப்ளேன்கள், மூன்று லட்சம் ஸோல்ஜர்களோடு மழை பொழியும் ஜூன் மாதம் 1944—ல், பிரிட்டிஷ் சானலில் சந்தித்துக் கொண்டிருக்கையில், 'இன்வேஷன்' என்கிற செய்தி வர, ஐஸனோவர் தலைமையில் பிரிட்டிஷ் சானலைக் கடந்து பிரான்ஸ், நார்மண்டி கடற்கரையில் தாக்குதல் நடந்ததில் பங்கு பெற முடிந்தது.

''ஷாங்கி, கரையில் நின்று விடுகிறாயா?'' லெப்டினன்ட் ஜெனரல் ப்ராட்லி கேட்டபோது சங்கரன் தீர்மானமாய் மறுத்துவிட்டான்.

டக்போட்டில் இறங்கி ஜெர்மன் வசப்பட்ட நார்மண்டி கடற்கரையை அமெரிக்க இளைஞர்கள் தாக்குகிறபோது கப்பலில் இருந்து 'ஆஞ்சனேய நந்தனம் வீரம் ஜானகி சோக நாசகாரணம்' என்று ஸ்தோத்திரம் செய்யத் தோன்றிற்று.

ஜெர்மானியர்களை பிரான்ஸிலிருந்து விரட்டுகையில் பிரான்ஸில் எல்லாத் தெருக்களையும் சங்கரன் பார்த்தான்.

பெர்லினை நாலா பக்கமும் நெருக்கித் தாக்குதல் போட்டு அழித்ததைக் கண்ணெதிரே கண்டான். ஜெர்மனி சரண



டைந்து, யுத்தம் நின்றது. இனி யுத்தம் இல்லை என்கிறபோது சங்கரன் சட்டென்று உள்ளே ஓர் இடம் காலியாவதை உணர்ந்தான். எல்லா ஸோல்ஜர்களும் இரும்புத் தொப்பியை வீசி எறிந்துவிட்டு அவரவர் ஊருக்குக் கிளம்பத் துவங்கும்போது நகம் கடித்துத் தவித்தான்.

"உன் ஊர் எது ஷாங்கி?"

"மாயவரம்..."

"எங்கே....?"

"இந்தியாவில்."

"இந்தியாவில் பாம்புகள் அதிகம் உண்டா?"

"இப்போது இல்லை."

"மக்கள் தொகை அதிகமா?"

"கொஞ்சம்...."

"அது ஏன் ஷாங்கி... இந்தியா செக்ஸ் நாடா?"

பதில் சொல்லத் தெரியவில்லை.

"ஜனத் தொகை கட்டுப்படுத்த யுத்தம் ஒரு புதிய வழி. இந்தியாவில் யுத்தமே இல்லையாமே. ஆசீர்வதிக்கப்பட்ட ஜனங்கள்."

"ஷாங்கி, நீ இந்தியாவுக்கு எப்போது போகிறாய்?"

"போக வேண்டும்."

ப்ராட்லி அங்கேயே அமெரிக்காவிலேயே தங்கிவிடும்படி கூறினார். அமெரிக்கப் பிரஜையாகி விடுமாறு வற்புறுத்தினார். சங்கரன் ஊர் பார்த்துவிட்டு வருவதாய்க் கூறிவிட்டுக் கப்பல் ஏறினான். ஒரு குண்டு கூடச் சுடாமல், ஒருவரைக் கூடக் கொல்லாமல், இரண்டாம் உலகப் போரில் முழுவதுமாய்த் தன்னை ஈடுபடுத்திக் கொண்ட மாயவரத்து இளைஞன் பம்பாய் வந்தான். போகும்போது அமெரிக்கர்கள் அவனை மேஜர் என்று ரேங்க் உயர்த்தினார்கள். சம்பளப் பணமும் சன்மானமுமாய் டாலர்கள் கொடுத்தார்கள்.

ப்ராட்லியின் கைப்பட எழுதிய சான்றிதழ், அவரின் ரிவால்வர், பேனா, அவரோடு எடுத்துக் கொண்ட போட்டோ, சிகரெட் பெட்டிகள், மதுப் புட்டிகள், கத்தை கத்தையாய் அமெரிக்க டாலர்களுடன் பம்பாய் வந்து இறங்கினவனை யாரும் லட்சியம் செய்யவில்லை. டாலர்களை இந்தியாவில் உள்ள பிரிட்டிஷ் ஸோல்ஜர்களிடம் நல்ல விலைக்கு விற்று விட்டுத் தங்கமாய் — இந்திய காசாய் மாற்றிக் கொண்டு, சென்னை வந்தபோது மீரா ஓடிக் கொண்டிருந்தது. ஹரிதாஸில் வெள்ளைக் குதிரையில் வரும் எம்.கே. தியாகராஜ பாகவதரைப் பற்றிப் பேச்சு இருந்தது.

'அப்பனைப் பாடும் வாயால், ஆண்டி சுப்பனைப் பாடுவேனோ' என்கிற விவாதம் நடந்து கொண்டிருந்தது. இந்தியாவுக்குச் சுதந்திரம் கிடைத்து விடும் என்கிற நம்பிக்கை பலமாய் வளர்ந்திருந்தது.

மாயவரத்தில் வந்திறங்கிய ஷாங்கியை வியப்போடு சுற்றி நின்று பார்த்தார்கள். மாட்டு வண்டியில் வீட்டை அடைந்தபோது அம்மா வாசல் தெளித்துக் கோலம் போட்டுக் கொண்டிருந்தாள்.

அந்தக் கோலம் டாக்படில் மாதிரி இருந்தது. மேலே வானம் நிர்மலமாய்த் தெரிந்தது. மேகங்களைக் காணோம். மேகங்களுக்குக் களைத்துவிட்டதா? அவை கரைந்து காணாமல் போய் விட்டனவா? தெரியவில்லை.

"வீடு.... வீடுதான் சுகம் ஐயரே.... வெளியே சுத்தினவனுக்குத்தான் வீடு சுகம் தெரியும்."

**வீ**டு சுகமில்லை. அப்பாவுக்குக் காசநோய். அம்மாவுக்குச் சூதகம். சகோதரிகளைக் கொடுமைப்படுத்திப் பம்பரமாய் ஆட்டி வைக்கிற மாப்பிள்ளைகளின் கதைகள்.

'குழம்புல உப்பு இல்லேன்னு விறகுக் கட்டையால போட்டு அடி அடின்னு அடிச்சு இங்கே கொண்டு வந்து விட்டுட்டான். இரண்டு வருஷமா இங்கேதான் இருக்கா' நாலு குழந்தைகளோடு மூத்த தமக்கை வீட்டில் இருந்தாள்.

கன்னம் ஒட்டி உதடு பருத்துக் கண்களில் உயிர் தேக்கி வளைய வந்து கொண்டிருந்த தமக்கையைப் பார்க்க ரத்தம் கொதித்தது.

"எங்கே அந்த பாஸ்டர்ட்?"

"யாரு....."

"உன் புருஷன்?"

"எங்கேயோ தத்தாரியாச் சுத்தறதாக் கேள்வி."

"ஏன்? வேலை என்ன ஆச்சு?"

"பிடிக்கலையாம். விட்டுட்டார்."

"சாப்பாட்டுக்கு...?"

"கோவில்ல சாப்பிடறதாச் சொன்னார். பிராமணனுக்குச் சாப்பாட்டுக்கு என்ன குறைவு. எங்கேயாவது போடுவா..."

"இங்கே வரதேயில்லையா?"

"போன மாசம் வந்தார்."

"வந்து...."

"ஒருவேளை சாப்பிட்டுட்டுப் போனார்."

புரியவே இல்லை. இந்திய இளைஞர்கள் மனநிலை புரியவேயில்லை.

"காவி கட்டிண்டுட்டார்."

"எதுக்கு?"

"சம்சாரம் பந்தமாம். பிராண அவஸ்தையாம்."

"சோத்துக்கு மட்டும் வரானா....



**"எதுவுமே வாங்காத நீங்கள், எதற்காகத் தவறாது சந்தைக்குச் செல்ல வேண்டும்?"**

**"எனக்குத் தேவைப்படாத பல பொருட்கள் அங்கே உள்ளன. அவற்றைப் பார்த்து ஆச்சரியப்படுவதற்காகத்தான்!"**

**சொன்னவர்: சாக்ரட்டீஸ்; தகவல்: காயத்ரி.**

பொறுக்கி...''

''அப்படிச் சொல்லாதடா... ஞானம் வந்துடுத்தோ என்னமோ, நான் பொம்மனாட்டி, அஞ்ஞானி, கிடந்து உழண்டு கிடக்கேன்.''

''....... வரும்.''

''சிகரெட் குடிக்கிறியா?''

''ஏன் கேட்கறே?''

''உதடு கறுத்துக் கிடக்கே?''

''ம்..ம்...

''எங்காத்துக்காரர் கிட்ட இதுவரைக்கும் ஒரு கெட்ட பழக்கம் கிடையாது. வெத்தலை பாக்குக் கூடப் போட மாட்டார்.''

''கெட்ட பழக்கமும் கிடையாது. பொறுப்பும் கிடையாது. கெட்ட பழக்கமே இல்லாத கொடூரன். பிள்ளைகள் நலனே தெரியாத பெரும்போக்குத் தகப்பன். நான்கு பெற்று விட்டுப் பிரம்மச்சரியம் காப்பாற்றுகிற சண்டாளன். யோசிக்க யோசிக்க ஒன்று புரிந்தது. இந்திய இளைஞர்கள் விவேகானந்தரைத் தவறாகப் புரிந்து கொண்டார்கள். எதற்கும் ஆசைப்படாத சந்நியாசியாய் இருக்க ஆசைப்பட்டார்கள். வேடம் போட்டார்கள். திண்ணையில் தூங்கி, கோவிலில் சாப்பிட்டு, கையேந்திப் பிச்சை கேட்டு எளிமையான,சோம்பேறியான வாழ்க்கைக்கு ஆசைப்பட்டார்கள். இந்த ஆசைக்குப் பெண்களை வதைத்தார்கள். குடும்பத்தைக் குழப்பினார்கள்.

பதினெட்டு வயதில் கல்யாணம். முப்பது வயதில் சந்நியாசம்.

''மகா பாவி.... உருப்படுவானா அவன்!''

''ஏன்....? நீ என்ன ஒழுங்கு.... நீயும் பாவிதான்.''

''என்ன சொல்றே?''

''நிச்சயம் பண்ணின பொண்ணை விட்டுட்டு ஓடினியே... கல்யாணம் ஆகுமா அவளுக்கு. அப்படியே கிடக்கா. அக்கரைக்கும் போகாமல் ஆறும் தாண்டாமல்?''

சொரேர் என்றது.

''உண்மையாகவா?''

''எப்படிடா கல்யாணம் நடக்கும்? எவன் பண்ணிப்பான் அவளை?''

மறுநாள் காலையில் பெண்ணைப் பெற்றவனைப் போய்ப் பார்த்தான்.

''பகவானே... வந்துட்டியா... வாப்பா... வேறே எவனையும் பண்ணிக்கலையே... சந்தோஷம், என் பூஜை வீணாகலை. உடனே நாள் பார்க்கிறேன்.

இரண்டாவது மாதமே திருமணம் நடந்தது.

''சௌந்தரம், ஐ'ம் ஸாரி'' கட்டில் விளிம்பில் உட்கார்ந்து முதல் வார்த்தையாய் மன்னிப்புக் கேட்டான்.

''அதெல்லாம் பரவாயில்லை. நீங்க வந்தேளே அதே பெரிசு....'' அந்தப் பெண் மண்டியிட்டது. என்ன வேணு செய் என்பது போல் நின்று கொண்டது.

பெண் விடுதலை வேண்டும்.
பெரிய கடவுள் காக்க வேண்டும்
மண் பயனுற வேண்டும்.
வானகம் இங்கு கைபட வேண்டும்.

சமீபமாய்ப் படித்த பாரதியார் கவிதை மனசுள் ஓடிற்று. பாரதி தவிர இந்த மண்ணில் நல்லதாய் எந்த விஷயமும் இல்லை என்று சங்கரனுக்குப் பட்டது.

(தொடரும்)

# திருப்பம்!

# ஹனீபா

பட்டுச் சேலைகளின் விலை அதிகரித்திருக்கிறதே, இனிமேல், மில் புடவையைத் தான் கட்ட வேண்டும் என்ற நிலையை மாற்றி, குறைந்த விலையிலும், தரமான பட்டுப் புடவைகளை, அனைவரும் வாங்கலாம் என்றதோர் திருப்பத்தை ஏற்படுத்தியது ஹனீபா டெக்ஸ்டைல்ஸ்.

திருமணம் போன்ற நிகழ்ச்சிகளில், இல்லத்திலுள்ள அனைவரும் பட்டுப்புடவைகள் வாங்கி, அணியக்கூடிய வகையில், எளிமையான பட்ஜெட்டில், எழில் மிக்க பட்டுப் புடவைகளை வாங்கக் கூடிய திருப்பத்தை உருவாக்கியவர் ஹனீபா.

நதிகள் சங்கமிப்பது கடல், அதுபோல் காஞ்சீபுரம், பனாரஸ், தர்மாபுரம, ஆரணி பட்டுப புடவைகள் அனைத்தும் சங்கமிக்கும் இடமாக ஹனீபா டெக்ஸ்டைல்ஸ் ஒரு திருப்பத்தை உண்டுபண்ணிக் காட்டியிருக்கிறது.

ஹனீபா — வெளிநாடுகளுக்கு துணிகள் ஏற்றுமதி செய்வதன் மூலம், காஞ்சீபுரம், பனாரஸ், போன்ற பட்டுப்புடவைகளுக்கான டிசைன்களில், புதிய மாற்றங்களை ஏற்படுத்தி டிசைன் பரிவர்த்தனை செய்யக்கூடிய திருப்பத்தையே உருவாக்கியவர்.

**ஹனீபா**
**டெக்ஸ்டைல்ஸ்**

14, சர். தியாகராயா ரோடு,
பாண்டி பஜார்,
சென்னை-600 017.

national 1479



Bournvita
நல்ல வளர்ச்சி
போர்ன்விடா பயிற்சி!
அன்னையர், அறிவர்! கேட்பரிஸ் போர்ன்விடா கோகோ, மால்ட், பால் மற்றும் அசல் சீனியின் ஊட்ட நலன்களைக் கொண்டது. போர்ன்விடா குழந்தைகள் மிக விரும்பும் அத் தனிச் சுவையை பாலின் குணத்துடன் அளிக்கிறது.
தினமும் போர்ன்விடா அளிக்கப்படும் குழந்தைகள் வேலையிலும் விளையாட்டிலும் கூர்மையோடிருக்கிறார்கள். அது அவர்களுக்கு ஆரோக்கியத்தையும் சுறுசுறுப்பையும் அளிக்கிறது. அவர்களுடைய வளர்ச்சிக்கு எல்லா வகையிலும் நலன் அளிக்கிறது.
அதன் தனிச் சுவையுடன் இணைந்திட்ட இன்றைய வளர்ச்சி.
கேட்பரிஸ்
போர்ன்விடா
Cadbury's
Bournvita
MILK
Bournvita
Cadbury's
Bournvita
Rs. 2/-
LESS
MILK
Bournvita
The Tastier Food Drink
9175 TAM



# அமரர் கல்கி

## நினைவுச் சிறுகதைப் போட்டி – 1987

| | | |
|---|---|---|
| முதல் பரிசு | ரூ | 1500 |
| இரண்டாவது பரிசு | ரூ | 750 |
| மூன்றாவது பரிசு (இரு கதைகளுக்குத் தலா ரூ 375 வீதம்) | ரூ. | 750 |

ஆக மொத்தம் ரூ 3000 பரிசுகளாக வழங்கப் பெறும்.

தவிர பிரசுரத்துக்கு ஏற்கப்படும் ஒவ்வொரு கதையும் ரூ 125 சன்மானம் பெறும். அறிமுக எழுத்தாளர்களுக்குப் போனஸ் உண்டு.

- கதைகள் சொந்தக் கற்பனை என்றும், இதற்கு முன் வேறு எந்த உருவிலும் பிரசுரமானதில்லை என்றும் உறுதிமொழி தேவை.

- அறிமுக எழுத்தாளர் எனில் இதற்கு முன் எந்தப் பத்திரிகையிலும் எழுதியதில்லை என்றும் போட்டி முடிவு அறிவிக்கப்படும்வரை எழுத மாட்டேன் எனவும் உறுதி மொழி தர வேண்டும்.

- நடுவர் குழு கதைகளைப் பரிசீலித்துப் பரிசுக்குரிய கதைகளைத் தேர்ந்தெடுக்கும்.

**கதைகளை அனுப்ப வேண்டிய கடைசி தேதி: ஜூன் 15**

- உறையின் மேல் அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி என்று குறிப்பிடுதல் அவசியம்.
- பிரசுரத்துக்கு ஏற்கப்படாத கதைகளைத் திரும்பப் பெறப் போதிய அளவு தபால் தலை ஒட்டிய சுயவிலாசமிட்ட உறையைக் கதையுடன் கூடவே அனுப்புதல் வேண்டும். பின்னால் தனியே அனுப்பிப் பயனில்லை.
- கதைகள் கல்கியில் நாலு பக்கங்களுக்கு மேற்படாதிருப்பது நலம். ஒருவர் எத்தனை கதைகள் வேண்டுமானாலும் அனுப்பலாம்.
- எவ்விதக் கடிதப் போக்குவரத்தும் கிடையாது.
- சந்தேகம் எழும் விஷயங்களில் கல்கி ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.
- போட்டி முடிவும் முதல் பரிசுக் கதையும் கல்கி ஆகஸ்டு 2 ஆண்டு மலரில் பிரசுரமாகும்.
- எழுத்தாளர்கள் பெருமளவில் உற்சாகத்துடன் கலந்து கொண்டு ஒத்துழைக்க வேண்டுகிறோம்.

**ஆசிரியர், கல்கி, சென்னை-600 034.**


இன்முகத்துடன் இரண்ய கசிபு!
கதை: ஜனனி படம்:
அலுவலக ஆண்டு விழா மலரில் மானேஜர் படம். ராகவலுக்கோ ஆத்திரம்!
ஹூம்! நேற்று ஒரு சிறு தவறுக்காக நாலு பேர் முன்னால் என்னைத் திட்டித் தீர்த்தாயே! உன்னை என்ன செய்கிறேன்பார்.
ஹா ஹா! சாட்சாத் இரண்ய கசிபு!
படத்தைப்பார்த்த ஸ்டெனோ சுமதி...
உடனே கிழிச்சுடுங்க ஸார்! பயமாயிருக்கு!
படம் பறிக்கப்பட்டது. பறித்தவன் கேதாரி.
பிரமாதம்! டெஸ்பாட்ச் ராமசாமியிடம் காட்டிட்டு வரேன்!


படம் திரும்பி வரவேயில்லை...
ஆனால் பிளாக்மெயில் வந்தது!
டேய்! நூறு ரூபாய் கொடு! உன்னிடம் இல்லேன்னா யாரிடமாவது வாங்கிக் கொடு!
என்னடா, மிரட்டல்!
பணம் தரப் போறியா இல்லியா? இல்லேன்னு சொல்லு, நீ போட்ட படம், மானேஜர் பார்வைக்குப் போயிடும்!
அடப்பாவி!
ஏற்கெனவே மானேஜர் எனக்கு மண்டகப்படி நடத்தி யிருக்கார். ஆத்திரக்காரர். இந்தப்படம் அவரிடம் போனால்.. மெமோ, ஸஸ்பென்ஷன், உத்யோகம் அம்போ!...
இந்தா நீ கேட்ட பணம்!
ரொம்ப தாங்க்ஸ்! அடிக்கடி வருவேன்! பை!
கேதாரி சொன்னபடி செய்தான். எவ்வளவு நாள்தான் கொடுத்து அழுவது? ராகவன் பொறுமை இழந்தான்...
போடா! இனி சல்லிக் காசு தர முடியாது! உன்னாலானதைப் பார்த்துக்க...


கேதாரி கோபத்துடன் போய், சற்று நேரத்தில்....
ஸார் மானேஜர் கூப்பிடறார்!
வருவது வரட்டும்; தலையெழுத்துப் படி நடக்கட்டும்!
மானேஜர் அறையில்...
கங்கிராட்ஸ் ராகவன்! ரொம்ப நல்லா படம் போடறீங்களே!... உக்காருங்க...
நான் இளைஞனாயிருந்த போது விஜயவாடாவிலே இரண்ய கசிபு வேஷம் போட்டு நடிச்சிருக்கேன்னு உங்களுக்கு எப்படி தெரிஞ்சுது?
ஹி... ஹி... விஜயவாடாவிலேருந்து என் சித்தப்பா வரும்போதெல்லாம் உங்க நடிப்பை வெகுவா சிலாகிச்சுப் பேசுவார்.. அதான்..
ராகவனின் 'ரீல்' முடிய...
அந்த இடியட் கேதாரி, உங்க கற்பனைத் திறனைப் புரிஞ்சுக்காம என்னென்னவோ பிதற்றி ரிப்போர்ட் எழுதியிருக்கான். கண்டிக்கணும். நீங்க போய் அவனை வரச் சொல்லுங்க!
எஸ், ஸார்!

# “சேமிப்பில் சிறந்தவர்கள் பெண்களா, ஆண்களா?”

## ஸ்ரீராம் குரூப் இதயம் பேசுகிறது

## இணைந்து நடத்தும்

புதுமையான

# பட்டிமன்றம்

இடம் : மியூஸிக் அகடாமி, சென்னை-4.

நேரம் : 11-5-1987 திங்கள், மாலை 6.30 மணி.

வரவேற்புரை: திரு. மணியன், ஆசிரியர், இதயம் பேசுகிறது—ஞானபூமி.

நடுவர் : டாக்டர் அவ்வை நடராசன்

பங்கு கொள்வோர்:

“சேமிப்பில் சிறந்தவர்கள் பெண்களே” அணி:

திரு. சோ. சத்தியசீலன்
திரு. ஆ. ஜெகந்நாதன்
திருமதி. அரசு மணிமேகலை

“சேமிப்பில் சிறந்தவர்கள் ஆண்களே” அணி:

திரு. அ. வ. ராஜகோபாலன்
திரு. அ. அறிவொளி
திருமதி. நிர்மலா சுரேஷ்

நன்றியுரை: டாக்டர் விக்கிரமன், ஆசிரியர், அமுதசுரபி.

வருகை தரும் அனைவருக்கும் அமுதசுரபியின் வெளியீடான “வெற்றி உங்கள் கையிலே” என்ற அருமையான கையேடு அன்பளிப்பாக வழங்கப்படும்.

நினைவூட்டுகிறோம்:
ஸ்ரீராம் இன்வெஸ்ட்மெண்ட்ஸில் புதிய டிபாசிட்களுக்கு
அன்பளிப்பு வழங்கும் திட்டம் 14-5-87 வரைமட்டுமே.



## ஸ்ரீராம் குரூப் கம்பெனிகள்

தலைமை நிர்வாக அலுவலகம்:
“ஸ்ரீராம் ஹவுஸ்”, 1 தேக்கூரி எஸ்டேட்,
சென்னை-86. போன்: 454805.

நிகழ்ச்சிக்குத் தயவு செய்து உங்கள் அழைப்பிதழைக்-கொண்டு வரவும்.

அழைப்பிதழைப் பெற விரும்புவோர்,
ஸ்ரீராம் இன்வெஸ்ட்மெண்ட்ஸ்
54, உஸ்மான் ரோடு, சென்னை-17ல் பெறலாம்.



ஸ்ரீராம் சேமிப்பில் சேருங்கள், சீரும் சிறப்புமாய் வாழுங்கள்

ADWAVE/SGC/3324

# பட்டிக்காடு



சர்பத் அருந்திவிட்டு, பஸ்ஸுக்குத் திரும்பிய சபாபதி, திகைத்தான். தஞ்சாவூரிலிருந்து ஜன்னல் ஓர ஸீட்டில் உட்கார்ந்து வந்திருந்தான், அவன். இங்கு, சர்பத்துக்காக அவன் இறங்கியபோது, புதிய பிரயாணிகள் மளமளவென்று ஏறினார்கள். எனவே, பக்கத்திலிருந்த அழுக்கு வேட்டி ஆசாமியிடம், 'இடத்தைப் பார்த்துக் கொள்' எனச் சொல்லி இருந்தான்.

ஆனால், இப்போது அந்த அழுக்கு வேட்டியே சபாபதியின் ஸீட்டை ஆக்கிரமித்துக் கொண்டிருந்தானே.

என்ன பண்ணலாம்? அவனோ பட்டிக்காடு. கைநாட்டுப் பேர்வழி.

அவனிடம் போய், 'என் இடத்தை விடு' என்று அதட்ட முடியுமா? விட்டுக் கொடுப்பதுதான் நாகரிகம்.

பஸ், புறப்பட்டு பதினைந்து நிமிடம். ''என்னங்க சாரு... ஒண்ணுமே பேசாமல் வர்றீங்களே'' என்று இளித்தான், அந்த ஆள்.

சபாபதி பேசவில்லை.

அவனும் விடவில்லை.

''உத்தியோகம் பார்க்கிறீங்க. படிச்ச நாலு விஷயம் தெரிஞ்சவங்க. ஏதாவது பேசுவீங்கன்னு பார்த்தால்...சாப்பாட்டுக்கு ஆலையிலே முடைஞ்சது மாதிரி வாயை மூடிட்டு வர்றீங்களே...''

''போய்... பட்டிக்காடு... சும்மா வர மாட்டாய். அநாகரிகம் பிடிச்ச உன்னோடு எவன், ஐயா பேசுவான்.''

அடக்கி வைத்த ஆத்திரம் அப்படியே வெடித்தது, சபாபதியிடம். அத்திமீறித் தாக்குதலால் வெலவெலத்துப் போனான், அவன். அப்புறம் வாயே திறக்கவில்லை.

புதுக்கோட்டை வந்ததும் எல்லோரும் சாப்பிட இறங்கினர்.

மீண்டும் பஸ் ஏறியபோது, ஆச்சரியம். ஜன்னல் ஓர ஸீட்டை விட்டு, பழையபடி நடு ஸீட்டில் உட்கார்ந்திருந்தான், அவன்.

ஏன் இந்த மாற்றம். சபாபதிக்குப்புரியவில்லை. 'தான் அப்படி உட்கார்ந்தது தவறு' என்று அவன் மரமண்டைக்கு உறைத்திருக்குமோ?

''ஏனய்யா மறுபடியும் இடம் மாறிவிட்டீர்?'' என்றான், எகத்தாளமாக.

''ஜன்னல் ஓரமா பொட்டை வெயில், சாரு. எங்களுக்கு இதெல்லாம் சகஜமாயிடுச்சு. ஆனால், உங்களுக்குத் தாங்க முடியாது. அதனால்தான் கந்தர்வகோட்டையிலிருந்து இடம் மாறி உட்கார்ந்திருந்தேன். இனி, பஸ் கிழக்காலே திரும்பிடும். வெயில் அடிக்காது.'' விகற்பமின்றிச் சொல்லிவிட்டுப் பளிச்சென்று சிரித்தான், அழுக்கு வேட்டி.

நெஞ்சுக்குள் என்னவோ உறுத்தியது, சபாபதிக்கு.

நாகரிகமாய் நடந்து கொண்டது, யார்?

— தமிழினியன்



# சிவராமன் செய்த



லைப் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பொரேஷன் ஆப் இந்தியா
30 ஆண்டுகள் மக்கள் சேவையில்

# சிறு தவறு

வாழ்க்கையை நன்முறையில் திட்டமிட்டு நடத்துவதில் நம்பிக்கை உடையவர் சிவராமன்.

தனக்கு எதிர்பாராது ஏதாவது நேர்ந்துவிட்டால் தனது குடும்பம் பொருளாதார பாதுகாப்பு இன்றி துன்பச் சுழலில் சிக்கிவிடக் கூடாது என்று எண்ணி முன் யோசனையோடு எல்.ஐ.ஸி.யில் ஆயுள் காப்புறுதியும் பெற்றிருந்தார்.

ஒரு நாள் எதிர்பாராமல் சிவராமன் காலமானபோது தான் தெரியவந்தது அவர் செய்துவிட்டிருந்த சிறு தவறு. அவர் தமது மனைவியை ஆயுள் காப்புறுதி தொகைக்கான வாரிசாக நியமனம் செய்ய மறந்துவிட்டிருந்தார்.

இந்த சிறு தவறினால் திருமதி சிவராமனுக்கு சில நிர்வாக சிக்கல்களையும், நடைமுறை தாமதங்களையும் சந்திக்க நேர்ந்ததோடு இறப்பு கேட்பு உரிமை தொகையை பெறுவதிலும் கால தாமதம் ஏற்பட்டது. இதுபோன்ற சிக்கல்களை தவிர்க்க உடனே **வாரிசு நியமனம்** செய்யுங்கள்.

ஆயுள் காப்பு என்பது ஒரு நீண்ட கால ஒப்பந்தம் என்பதை மறந்துவிடாதீர்கள்.

இந்த நீண்ட காலத்தில் ஒருவரது வாழ்வில் பல மாறுதல்கள் ஏற்படுவது இயற்கை. மண வாழ்வினால் பொறுப்புக்கள் அதிகமாகலாம். தனி குடும்பம் ஏற்படும் போது வாழ்க்கை துணைக்கும் குழந்தைகளுக்கும் பொருளாதார பாதுகாப்பு அளிக்க வேண்டியதால் ஏற்கனவே ஆயுள் காப்பு வாரிசுதாரராக நியமித்திருக்கும் தந்தை, தாய், சகோதரர் அல்லது சகோதரிகள் இடத்தில் உங்கள் இல்லத்துணையினை நியமனம் செய்ய நேரிடலாம்.

**மேலும் சொந்த வீடு கட்டிக்கொள்ள நேரிடும்போது ஆயுள் காப்பு பத்திர அடமான மூலம் நிதி நிறுவனங்களில் இருந்து கடன் பெறும் தேவை ஏற்படலாம். கடன் தொகையை முழுவதும் கட்டிய பின்பு நீங்கள் ஏற்கனவே செய்திருந்த வாரிசு நியமனம் தானாக புத்துயிர் பெற்றுவிடாது என்பதை நினைவில் கொண்டு புதிய வாரிசு நியமனம் செய்யுங்கள். சிக்கல்கள் ஏதுமின்றி கேட்புரிமை பணம் பெற இது இன்றியமையாதது.**

ஆயுள் காப்பிற்கான முன்மொழிவின் போது வயது சான்றும் சமர்ப்பிப்பது அவசியம். அப்படி செய்ய தவறி இருந்தால் உங்களுக்கு ஆயுள் காப்பு சேவைபுரியும் எல்.ஐ.ஸி. கிளை அலுவலகத்துடன் உடனே தொடர்பு கொண்டு உங்கள் வயதை பதிவுசெய்து விடுங்கள்.

**உங்கள் வாழ்வின் முக்கிய சேமிப்பை எல்.ஐ.ஸி. மூலம் திட்டமிட்டு சேமிக்கும்போது, வாரிசு நியமனம், தேவையான தருணத்தில் நியமனம் மாற்றுதல், வயது சான்று அளித்தல் போன்ற சிறுசிறு செயல்களில் சற்று கவனம் செலுத்துதல் பின்னாளில் உருவாகக் கூடிய சிக்கல்களை தவிர்ப்பதில் பெரிதும் உதவும்.**

**உங்களுக்கு சிறப்புற பணி ஆற்றுவதில் எங்களுக்கு உதவுங்கள். எங்கள் முகவர்கள் உங்களுக்கு உதவ எப்போதும் தயாராக இருக்கிறார்கள். தக்க தருணத்தில் உங்கள் ஆயுள் காப்பு பற்றிய அறிவுரைகள் பெறவும், சிறந்த பின் வணிக சேவைக்கும் எங்கள் முகவர்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்.**

அரை மணிநேர நிலைக்கண்ணாடி ஆக்கிரமிப்பைத் தளர்த்திக் கொண்ட மாதங்கி தந்தைக்குஎதிரேவந்துமெளனமாகநின்றாள்.

''அப்பா! ஆர்ட் காலரி வரையிலே போய்ட்டு வர்றேன்.''

''உலக அதிசயங்களில் ஒன்று இது —'' என்றார் நரசிம்மன்.

''எது உலக அதிசயம்?''

''வெளியில் போகும் போது என்னிடம் சொல்லிக் கொண்டு போகிறாயே, அது!''

''அப்பா, வரவர என் சிறுசிறு செய்கைகளில் எல்லாம் கூட நீ உலக அதிசயங்களைக் காண ஆரம்பித்து விட்டாய். இது எதில் முடியப் போகிறதோ தெரியவில்லை!''


''அதில்லை மாதங்கி, வழக்கங்கள் திடீரென்று மாறும்போது ஏற்படும், அல்லது ஏற்படுத்தும் வியப்புதான் இது.''

''அப்பா!''

எதிரே உட்கார்ந்திருந்த மாதங்கி அவர் அருகில் வந்து ஒட்டி உட்கார்ந்தாள்.

''மாதங்கி! எனக்கு உன் அம்மாவைப் போல அத்தனை புத்திசாலித்தனம் இடையாதுதான். வேலை நேரம் தவிர, வீட்டில் தூங்கும் போதும் நான் ஒரு சிறை அதிகாரியாகவே எல்லா நாட்களும் தூங்கியிருக்கிறேன். எப்படித் தெரியுமா? என் கனவில் கூட சிறைக்கூடங்களும் கைதிகளின் அணிவகுப்பும், அவர்களிடம்நடத்திய விசாரணையும் வரும். கம்பி போட்ட சிறைச்சாலை வராந்தாவில் நடக்கிற மாதிரி இருக்கும்.

# விருந்துக்கு




காலையில் எழுந்ததும் அவசரம் அவசரமாக டியூட்டிக்குப் போவது, தினம் சிறைக் கூடங்களை இன்ஸ்பெக்ட் பண்ண வேண்டியது, சட்டத்தையும் சிறைக் கட்டுப்பாடுகளையும் மீறும் கைதிகளிடம் கடுமையாகவும், பல நேரங்களில் மிகக் கடுமையாகவும் நடந்து கொள்வது, சிறைச்சாலைச் சட்டங்களை மீறும் சிறை அதிகாரிகளின் மேல், இலாகா ரீதியிலான நடவடிக்கை எடுப்பது, இப்படியே காலம் முழுதும் என் உத்தியோகம் கூட ஒரு சிறை வாழ்க்கையாகவே போய்விட்டது. ஆனால் குற்றவாளி, கொலைகாரன் என்கிற வார்த்தைகளுக்கு அப்பாலும், உள்ளேயும்தான் எத்தனை விதமான மனிதர்கள் என்று புரிந்து கொள்ள உதவிய வாழ்க்கையும் கூட...

உன் அம்மாவோ, நீ பள்ளிக்கூடம் போக ஆரம்பித்த போதே இறந்து போய்விட்டாள்.

உனக்குத்தலைவாரிப்பின்னவும், பீரோவிலிருந்து விதம் விதமாக உடைகளை அணிவித்து அழகுபடுத்தவும் அவள் இல்லை. உனக்கு உணவின் ருசி தெரிந்து சுவையுடன் சாப்பிட ஆசைப்படும்போது உனக்குப் பிடித்ததைச் சமைத்துப் போட அவள் இல்லை. இதை அப்படிச் செய், அதை இப்படிச் செய் என்று உன் அருகில் ஒட்டி உரசி நின்று, உனக்குச் சொல்லித் தர அவள் இல்லை. ஆனாலும் நீ நூற்றுக்கு நூறு எல்லாம் தெரிந்த பெண்ணாக வளர்ந்திருக்கிறாய். பல நேரங்களில் உன் அம்மாவை நினைவுபடுத்துகிற

# வந்தவன்...

## மகரிஷி



மாதிரி உன் செய்கைகள் இருக்கின்றன."

மாதங்கி எழுந்து நின்றாள். அப்பாவை மீண்டும் பேச விட்டால், தான் வெளியே போக முடியாது என்பதை உணர்ந்து,

"அப்பா நீங்கள் பேச ஆரம்பிக்கும் போது மிக நிதானமாக ஆரம்பித்து மெதுவாக உணர்ச்சிமயமாகி பின்பு அதிலேயே லயித்துப் போய்விடுகிறீர்கள். போதும். இப்பவே நீ எமோஷனலாயிட்டே. இனிமேல் தாங்காது. மீதியைப் பிறகு பேசிக் கொள்ளலாம்... நான் ஏழு மணிக்கு ஆர்ட் காலரியில் மிஸ்டர் சக்கரவர்த்தியைச் சந்திக்க வருவதாகக் கூறியிருக்கிறேன்."

"யாரம்மா அந்தச் சக்கரவர்த்தி?"

"அவர் ஓர் ஓவியச் சக்கரவர்த்தியப்பா."

"ஆர்ட்டிஸ்ட்?"

"பெயிண்டர்."

மாதங்கி ஒரு கலா ரசிகை என்பது அவருக்குத் தெரியும்.

வீட்டில் கூட நிறைய ஓவியங்களை வரைந்து லேமினேஷன் பிரேமில் மாட்டி வைத்திருக்கிறாள்.

இந்தக் காலத்தில் இளம் பெண்களும், வாலிபர்களும் புதுப்புது ரசனையுடன் வளர்கிறார்கள்.

"அப்பா."

புறப்படவிருந்த மாதங்கி தயங்கிக் கொண்டே அப்பாவை அழைத்து விட்டுத் தலையைக் கவிழ்த்துக் கொண்டாள்.

"என்ன மாதங்கி?"

"நாளைக்கு இங்கே ஒரு நண்பரை அழைத்து வர உங்கள் அனுமதி வேண்டும்.

"நண்பரா?"

"ஆமாம்."

"பாய் ஃபிரண்டா?"

"அந்த அர்த்தத்தில் இல்லை. வேறு அர்த்தத்தில்."

"எந்த அர்த்தமாக இருந்தாலும் உனக்கு அனுமதி உண்டு. உன் நடவடிக்கைகளில் எனக்கு அளவற்ற நம்பிக்கையுண்டு. போதுமா?"

"நாளைக்கு மாலை வீட்டில் ஒரு சிறு விருந்து வைத்து அவரை அழைக்க வேண்டும்."

"விருந்தா?"

"ஆமாம். அவரை நான் வெறும் நண்பர் போலவோ, விருந்தினர் போலவோ அழைத்து வரவில்லை. ஓர் எதிர்கால நம்பிக்கையுடன் அழைத்து வருகிறேன். முதன் முதலில் நம் வீட்டிற்கு வரும் அவர் வரவை விசேஷமானதாக்க விரும்புகிறேன்."

நரசிம்மன் ஒரு நிமிஷம் பேச முடியாமல் நின்ருர். பிறகு, அவள் தோளில் கைவைத்து, தழைந்திருந்த அவள் முகத்தை நிமிர்த்திச் சொன்னர்:

"இவ்விஷயத்தில் உனக்கு நான் என் மனப்பூர்வமான அனுமதியைத் தந்திருக்கிறேன் என்பது உண்மையே. உன்மேல் எனக்குள்ள நம்பிக்கைதான் இதற்குக் காரணம். இந்த நம்பிக்கை சிதிலமடையாமல் பார்த்துக் கொள்."

அவர் அவளை அப்படியே நிற்க வைத்து விட்டு உள்ளே போய்விட்டார்.

**வி**டிந்தது முதலே மாலை நேரத்தை நோக்கி விரைந்து கொணடிருந்தாள் மாதங்கி. அவளுடைய ஒவ்வொரு காரியத்திலும் ஒரு தனிச் சிரத்தை தெரிந்தது. வீட்டை அலங்கரித்தாள். மேஜை விரிப்புகளை மாற்றினுள். ஜன்னலுக்குப் புதிய திரைச்சீலைகளைத் தொங்க விட்டாள். பீரோவிலிருந்து சில புதிய காட்சிப் பொருள்களை எடுத்துத் துடைத்து வைத்தாள்.

நடுநாயகமாகக் காஞ்சிப் பெரியவரின் ஓவியம் ஒன்று காணப்பட்டது.

அந்த ஓவியம் புதியது... அதை நரசிம்மன் வியப்புடன் பார்த்தபோது ஏதோ ஓரிடத்தில் பூவிதழ்களைப் போல ஒரு நினைவிதழ் ஒரு கணம் விரிந்து பின்பு மூடிக் கொண்டது.

வரப் போகிறவன் கலா ரசனையுள்ளவன். அழகுணர்வு மிக்கவன். இவையுடன் ஆழமான குருபக்தியுள்ளவனுகவும் இருப்பான் போலிருக்கிறது. வரட்டும்... அவனுக்குப் பிடித்திருந்தால் கல்யாண ஏற்பாடுகளை உடனே செய்துவிட வேண்டியதுதான்.

"**அ**ப்பா... அவர் வந்து விட்டார்."

உள்ளே இருந்த நரசிம்மன் மகள் அழைப்பதைக் கேட்டுப் புதியவனை வரவேற்க வாசல் வராந்தாவுக்கு வந்தார்.

சக்கரவர்த்தி புன்னகையுடன் வீட்டின் முன் ஹாலில் நுழைந்தான்.

நல்ல உயரம், சிவப்பான உடம்பு, முகம் சற்று நீளம்தான். தோளில் சிவப்பு நிறத்தில் பை தொங்கிக் கொண்டிருந்தது. தலைக்கேசம் படிமானமில்லாமல் கொஞ்சம் நீளமாக இருந்தது.

நரசிம்மனுக்குக் கைகூப்பிக் கொண்டே உள்ளே வந்தான்.

நரசிம்மன் அவனையே சில விநாடிகள் அதிர்ச்சியுடன் பார்த்துக் கொண்டிருந்து விட்டு அந்த அதிர்ச்சியை மகளிடம் காட்டிக் கொள்ளாமல் சகஜமாகிவிட முயன்று கொண்டிருந்தார்.

நரசிம்மன் சக்கரவர்த்தியிடம் அதிகம் பேசவில்லை. அவனும் அவரிடம் பேசவில்லை. மாதங்கி மட்டுமே அவனிடம் அதிகம் வார்த்தையாடிக் கொண்டிருந்தாள். அந்த மாலைப் பொழுது அவளுக்கு மட்டுமே எல்லையற்ற உற்சாகத்தைத் தந்தது.

விருந்து முடிந்து அவர்கள் இருவரிடமும் விடைபெற்றுக் கொண்டு அவன் வெளியேறிய பின்பு மகளின் அறைக்குள் நுழைந்தார், நரசிம்மன்.

"அப்பா, நீங்கள் விருந்தாளியை வரவேற்பதில் அதிக உற்சாகம் காட்டவில்லை. இதை நான் ஆரம்பத்திலிருந்தே கவனித்துக் கொண்டுதானிருக்கிறேன்."

"சக்கரவர்த்தியை உனக்கு எத்தனை நாட்களாகப் பழக்கம்?"

"இரண்டு வருஷங்களாக அறிமுகம்."

"எப்படி அறிமுகம்?"

"அவருடைய 'ஒன்மேன்ஷோ' வொன்றை ஒருமுறை பார்த்தேன். அந்த ஓவியக் கண்காட்சியைப் பார்த்தது முதல் நான் அவருடைய ரசிகையாகி விட்டேன்!"

"நீ அவனுடைய ஓவியங்களுக்கு ரசிகையாக மட்டும் இரு, மாதங்கி. அதற்கு மேல் வேறு எவ்வித மனக்கோட்டைகளையும் கட்டிக் கொண்டிருக்க வேண்டாம். அவனிடம் தோழமையுடன் இரு. தேவையான உதவிகளைச் செய். அவனிடம் ஓவியம்

---

அவள் : மானேஜர் காலில் விழுந்து கதறி.... அழுது.....

இவள் : பிரமோஷனு, இன்கிரிமென்டா, லோனு.....?

அவள் : என்னிடம் அவர் கடன் வாங்கிய ஐம்பது ரூபாயைத் திரும்ப வாங்கிட்டேன்!

— உ. ராஜாஜி



கற்றுக் கொள். இன்றுபோல் எத்தனை முறை வேண்டுமானாலும் விருந்துக்கு அழைத்துக் கொண்டு வா. இவைகளைப் பற்றியெல்லாம் நான் உனக்குத் தடையேதும் கூற மாட்டேன்...''

''அப்பா!''

மாதங்கி அதிர்ச்சியுடன் தந்தையை அழைத்தாள்.

''அப்பா நீங்கள் சொன்ன இவைகளுக்கு அப்பால் எங்கள் நட்பு வேறு ஒரு லட்சியத்தை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறது.''

''இதுவரை போனது போகட்டும். இனி போக அனுமதிக்க முடியாது'' — அவர் வார்த்தைகளில் தீர்மானமிருந்தது.

''அவரை நான் விரும்புகிறேன்'' — அவளும் தன் எல்லை என்ன என்பதைத் தீர்மானமாகச் சொல்லி விட்டாள்.

''மாதங்கி!''

நரசிம்மன் சினத்துடன் மகளைப் பார்த்தார்.

''அவன் ஒரு கொலையைச் செய்துவிட்டு ஏழாண்டுகள் சிறைத் தண்டனை அனுபவித்தவன். நான் ஓய்வு பெறும் பொழுது அவனுடைய இரண்டாண்டுக் காலச் சிறைத் தண்டனை மீதியிருந்தது. இந்த உண்மை உனக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை. அவனும் சொல்லியிருக்க மாட்டான். அவன் ஏன் கொலை செய்தான்? யாரைக் கொலை செய்தான்? என்பதெல்லாம் எனக்கோ, உனக்கோ இன்று முக்கியமல்ல. ஆனால் அவன் ஒரு கொலைகாரன் என்பது நிரூபிக்கப்பட்டுத் தண்டனையும் விதிக்கப்பட்டிருக்கிறது என்கிற ஓர் உண்மை மட்டும் போதும்.''

மாதங்கி அதிக அதிர்ச்சியடையவில்லை.

''நீங்கள் இன்று சொன்ன உண்மை எனக்கு ஆரம்பத்திலேயே தெரியும். அவர் ரொம்ப நாட்கள் வரை என் காதலை ஏற்க மறுத்ததற்கே தாம் ஒரு விடுதலையான கைதி என்பதுதான் காரணம். பயந்த சுபாவமுள்ள தம் அண்ணனை ஒருவன் தாக்கி விட்டான் என்பதைக் கண்டு ஏற்பட்ட ஆத்திரத்தில் எதிரியைத் தாக்கியதில் முற்றிலும் எதிர்பாராத விதத்தில் அது ஒரு கொலையில் முடிந்து விட்டதையும், அதற்காக வழங்கப்பட்ட தண்டனையையும் அவர் ஆரம்பத்திலேயே சொல்லி விட்டார்..''

''அப்படிச் சொல்லியுமா நீ...?''

''அப்பா அவர் ரொம்ப நல்லவர், பட்டதாரி. நல்ல கலா ரசிகர், ரொம்ப அமைதியானவர். கடவுள் பக்தி உள்ளவர். குரு பக்தி உள்ளவர். எனக்கு அவரைப் பிடித்து விட்டது. பெரிய ஆர்ட் காலரி வைத்து நடத்துகிறார். நிறைய உதவியாளர்களை வைத்துக் கொண்டு விளம்பர போர்டுகள், சினிமா பானர்கள் போன்ற கமர்ஷியல் வேலைகளையும் செய்கிறார்.''

''ஸ்வாமிகளின் ஓவியமொன்றைக் கொண்டு வந்து நடுக்கூடத்தில் மாட்டிய போதேஎனக்குச் சந்தேகம்ஏற்பட்டது. சிறையில் இருக்கும்போதே கூட இவன் செல்லில் அவர் ஓவியத்தை வரைந்து அதைத் தினம் வணங்குவான். ஜெயேந்திரர் சேலம் விஜயத்தின் போது சேலம் மத்தியச் சிறைச்சாலையில் உள்ள கைதிகளுக்கு ஆசி வழங்கச் சென்றிருந்தார். அன்றிலிருந்து இவன் அவருடைய பக்தனாகிவிட்டான். சிறையில் கூட இவன் ரொம்பவும் சாதுவானவன்தான். நான் இருக்கும் வரையில் அவன் பேரில் எவ்விதப் புகாரும் வந்ததில்லை. அவன் நல்லவன்; அமைதியானவன்; ஏதோ சந்தர்ப்ப வசத்தால் கொலை செய்துவிட்டு, சிறைக்கு வந்து விட்டான். அவைகளை யதார்த்த உண்மைகளாக நானும் ஏற்கத் தயார் மாதங்கி... ஆனால்... ஆனால்...''

''எல்லாவற்றையும் யதார்த்த உண்மைகளாக ஏற்க மனமுள்ள உங்களுக்கு அவரை என் வருங்காலத் துணைவராக ஏற்க மனத்தில் இடமில்லை! சிறைச்சாலை ஆண்டு விழா நிகழ்ச்சிகள் வரும்போதெல்லாம் 'கைதிகள் புனர்வாழ்வு வாழ இந்தச் சமுதாயம் இன்னும் கொஞ்சம் பரந்த மனப்பான்மையுடன் மாற வேண்டும். அவர்களும் நம்மைப் போல மனிதர்கள்தான்' என்று நீங்கள் பேசியதைக் கூட அவர் நினைவுபடுத்தினார்... அப்பா அவருக்குப் புனர் வாழ்வு கொடுத்து ரட்சிக்க வேண்டும் என்று நான் நினைக்கவில்லை. சாதாரண மனிதராக எண்ணித்தான் அவரை விரும்புகிறேன்'' என்றாள்.

''அவனை நீ காதலிக்கும் போதே அதற்கான நியாய வாதங்களையும் தயாரித்து வைத்திருப்பாய் என்பது நான் எதிர்பார்த்ததுதான்'' என்று கூறிவிட்டு எழுந்து வெளியே சென்று விட்டார் நரசிம்மன்.

நள்ளிரவை நெருங்கும் போது மாதங்கி, தந்தையின் அறைக்குள் நுழைந்தாள்.

மின் விளக்குகளையெல்லாம் அணைத்து விட்டு மங்கிய வெளிச்சத்தில் அவர் தம் அறையில் குறுக்கும் நெடுக்குமாக நடந்து கொண்டிருந்தார்.

''தூங்கவில்லையா?'' மாதங்கி கேட்டாள்.

''நீ தூங்கவில்லையா?'' — அவர் திருப்பிக் கேட்டார்.

''உன்னுடன் பேச வேண்டும். எனக்குத் தூக்கம் வரவில்லை...

''அப்பா...''

''சொல்லு மாதங்கி?''

''நீங்கள் எல்லா உறவினர்களிடமிருந்தும் ஏன் தனித்து வாழ்கிறீர்கள்? அநேகமாகச் சொந்தக்காரர்களின் வீடுகளில் நடக்கும் எந்த விசேஷங்களுக்கும் நீங்கள் போவதில்லை. வீட்டிற்கு வரும் நெருங்கிய உறவினர்களிடம் கூட, மனம் விட்டுப் பேசாமல் வழிப் போக்கர்களிடம் பேசுவது போல் பழகி அனுப்பியிருக்கிறீர்கள். இதற்கெல்லாம் உங்களால் காரணம் சொல்ல முடியுமா? சொல்ல முடியும். 'ஆனால், நீங்கள் சொல்ல மாட்டீர்கள். என் அம்மாவும் ஒரு கைதியாக இருந்தவள். அவள் விடுதலையான பின் நீங்கள் விவாகம் செய்து கொண்டீர்

கள்...

"ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் அந்த நட்பு மலர்ந்துபின்பு அது உங்கள்இருவருக்குள்ளேயே வளர்ந்துவிட்டது. அவள் விடுதலையாகும் வரை காத்திருந்து பின்பு கல்யாணம் செய்து கொண்டீர்கள். உங்கள் திருமணத்தைச் சமூகம் சாதாரணமானதாக ஏற்கவில்லை. அம்மாவைச் சமூக வட்டத்துக்குள் அனுமதிக்கவில்லை! உங்கள் வாயால் நீங்கள் என்னிடம்இதைச் சொல்லவில்லை. ஆனாலும் இதுதான் உண்மை என்பதைப் பிறர் அரசல் புரசலாகப் பேசியதிலிருந்து நானே தெரிந்து கொண்டேன்."

"மாதங்கி!"

"இப்பொழுது சொல்லுங்கள். அம்மாவை ஒரு கைதி என்று தெரிந்துதானே அவள் விடுதலையான பின்பு பதிவுத் திருமணம்செய்து கொண்டீர்கள். அவளை மணந்தது தவறு என்று நீங்கள் எண்ணியதுண்டா?"

"நிச்சயமாகஇல்லை. அவளை நான் கடைசி வரை நேசித்தேன். இப்பொழுதும் அவளை நேசிக்கிறேன். அவள் நினைவுகளை நேசிக்கிறேன். அந்தச் செடியில் பூத்த ஒரே மலரான உன்னையும் நேசிக்கிறேன்..."

"அப்படியானால் உங்களுக்கொரு நீதி எனக்கொரு நீதியா?"

"மாதங்கி, சமூகத்தின் எதிர்ப்புகளைத் தாங்கிக் கொள்ள எனக்கு மனோதைரியம் இருந்தது. ஆனால், உன் தாயாருக்கு இல்லை. அந்த ஏக்கத்துடனேயே, தாழ்வு மனப்பான்மையில் வாடி, அவள் இறந்து போய்விட்டாள். அம்மாதிரியொரு நிலை உனக்கு வரக் கூடாது என்று பயப்படுகிறேன். எனக்கும் சக்கரவர்த்திமேல் அன்பு உண்டு. நம்பிக்கை உண்டு. அவனை எனக்கு நன்றாகத் தெரியும். இன்றிருக்கிற தைரியம் கடைசி வரையில் நீடிக்கவேண்டும். அப்படிநீடிக்கவில்லையென்றால் உங்களுடைய, எதிர்காலம் ரொம்ப ஏமாற்றமாகப் போய்விடும்..."

"அப்படியொரு நிலைமை நிச்சயமாக வராது. இதில் நாங்கள் இருவருமே தைரியமாக இருக்கிறோம்" என்றவள்,

"இன்று எல்லா நிலைகளிலுமே வாழ்க்கை என்பது ஒரு சவால்தான். அது எந்தரூபத்திலிருந்தால் என்ன? அதை எதிர்கொண்டு வெற்றியடைவதில்தான் மனித ஆற்றலே அடங்கியிருக்கிறது.

"அந்த ஆற்றல் எங்களிருவரிடமும் இருக்கிறது. அம்மா ரொம்பவும் பலவீனப்பட்டுப் போய் இதில் எதிர்நீச்சல் போட முடியாமல் தோற்றுப் போனாள் என்பதற்காக என்னையும் அப்படி நினைத்து விடாதீர்கள்... எல்லோருக்கும் முன்னால் அவருடன் வெற்றிகரமாக வாழ்ந்து காட்டுவேன்... உங்கள் ஆசி மட்டும்தான் எங்களுக்கு வேண்டும்..." என்று முடித்தாள்...

அதற்குப் பின் —

அவரிடம் ஏற்பட்ட மௌனம் அவரது அங்கீகாரமாக அமைந்துவிட்டது!



# ஒரு தாயின் சபதம்

ஜெய்சங்கருக்குத் தூக்குத் தண்டனை உறுதியாகி அது நிறைவேற்றப்படும் அதிகாலைப் பொழுதில் ஸ்ரீவித்யாவிற்கு உண்மைக் கொலைகாரனைப் பற்றிய தகவல் கிடைத்து, வாயெழாமல் அலறி, மூச்செழாமல் தவித்து....

தூக்குத் தண்டனை நிறைவேறி விடுகிறது. உருக்கமான காட்சி.

அப்புறம்தான் சம்பூர்ண ராமாயணமே! (இந்தக் காலத்தில் பதினேழு ரீலுக்கு ஒரு படமா?)

மாஸ்டர் சிலம்பரசனும், தமிழ் இலக்கியாவும் பம்பளிமாஸ் கன்னமும் தையாத்தக்கா கொழு கொழு கால்களுமாய்ச் சிரிப்பதும், நடப்பதும் பாசத்தைப் பரிமாறிக் கொள்வதும் அழகோ அழகு. பால் பவுடர் விளம்பரங்களுக்குக் காட்சிகளை அப்படியே உபயோகப்படுத்தலாம்!

டி. ராஜேந்தர் கறுப்புக் கோட்டு அணியும் வக்கீல். ஜாம்பவான் செந்தாமரையுடன் தமிழில் மோதுகிறார். அவருக்காகவே எழுதப்பட்டிருக்கும் எதுகை, மோனை வசனங்கள். கோர்ட் சீன்களில் எல்லாரையும் மீறிராஜேந்தர்மட்டும்எண்ணெய்க்கடுகாகக் குதிப்பது அவருடைய ரசிகர்களைத் திருப்தி அடைய வைக்கிறது, விசிலடிக்க வைக்கிறது, கைதட்ட வைக்கிறது. நமக்கோ சிரிப்பு வருகிறது.

செட் போடுவது என்பது ராஜேந்தரின் ஸ்பெஷாலிட்டியாக இருக்கலாம். அதற்காக இப்படியா? கண்ணைக் குத்துகிற மாதிரி ராக்ஷஸ- உதடுகள், ராக்ஷஸ இதயங்கள் என்று எல்லாமே ராக்ஷஸ சைஸில். அழகுக்குப் பதில் அருவருப்பு!

மூன்று அறிமுகங்கள். ஒன்று கூட உருப்படியாகத் தேறும் என்று தோன்றவில்லை.

அங்கங்கே டி. ராஜேந்தர் இந்திரஜித் மாதிரி சண்டை போடுகிறார். ஒருவரே நூறு ஆசாமிகளை ஸைலூலாய்டில் அடித்து நொறுக்குகிறார். செந்தாமரையின் ராஜ்யத்தில் காமென்ட்ரி கொடுத்துக் கொண்டே போடும் சண்டை, காமென்ட்ரி யுக்திக்காக ரசிக்கும்படி இருக்கிறது. மற்றபடி யதார்த்தத்திற்கும் சண்டைக்காட்சிக்கும் பல காத தூரம். க்ளைமாக்ஸ் சண்டையில் ஒரு பயங்கரமான செட் தூள் தூளாகிறது. எவ்வளவு பணம் வேஸ்ட் என்று நமக்குத் தோன்றுகிறது.

டி. ராஜேந்தர் படப் பாடல்கள் என்றாலே தேன் சொட்டும். இந்தப் படத்தில் ஒன்று இரண்டில்தான் சொட்டுகிறது.

அரட்டல் மிரட்டல் செந்தாமரை ஜோர்!

அவருடைய உதவியாளராக ஜி. கே., ஜயோ போர்!

எஸ். எஸ். சந்திரன் காமெடி, உப்பில்லாத நீர் மோர்!

ராஜேந்தர் ரசிகர்கள் கைகொடுத்து விடுவார்கள்!

# புலி வேட்டையா, பண வேட்டையா?

* தலையங்கத்தில் பிரதமரை இந்த வாங்கு வாங்கிவிட்டீர்களே! தேவைதான் இந்தச் சாட்டை. சாதாரண ஊழலா இது? உலக அரங்கிலேயே இந்தியாவுக்குத் தலைகுனிவு.

திவாகதுருகம், ஜி. ஆர். கிருஷ்ணன்.

* தலையங்கம் கண்டேன். ஃபேர் பேக்ஸ் விவகாரத்தில் காதில் பூ சுற்றப்படுவதை அழகாக விளக்கியுள்ளீர்கள். கடைசி வரிகள் கவிதை. உமாபதியின் கார்ட்டூன் தத்ரூபம்.

சென்னை — 7, புரசை அ. விஜய்.

* ராஜீவ் ஆரம்பத்தில் நேர்மையாக ஆட்சி புரிந்த போது அவரை 'மிஸ்டர் க்ளீன்' என்று பாராட்டியதும் நீங்களே. அவர் தடம் புரள ஆரம்பித்தபோது 'திருவாளர் அகத்தம்' என்று கூறித் தவறை இடித்துரைத்துத் தலையங்கம் தீட்டியதும் நீங்களே. தங்களின் 'நடுநிலை' என்றும் தொடர வாழ்த்துக்கள்.

குடியாத்தம். அனுராதா ஆபஸ்தம்பன்.

* 'குப்பைக்குப் போன முத்தான திட்டம்' —சிம்பாவிக் அட்டைப்படம் அட்டகாசம்!

ஆளப்பிறந்தவனைச் செமத்தியாகப் புரட்டி எடுத்து விட்டீர்கள். அதிலும், விமரிசனத்தின் கடைசி வரி, செம சூப்பர் —,செம சூடும் கூட.

மதுரை — 20, எஸ், ஜே. இதயா.

* 26.4.87 ந் தேதியிட்ட தங்கள் இதழில் வந்த "குப்பைக்குப் போன முத்தான திட்டம்" என்ற கட்டுரை மிகவும் அருமையாக இருந்தது. முத்து எப்படி வளர்கின்றது என்பதை அறிய முடிந்தது. இதுபோன்ற கட்டுரைகள் தங்கள் இதழில் நிறைய வர வேண்டும்.

சென்னை — 5, எஸ். எஸ். பாரி.

* முன்னாள் அமைச்சர்கள் என்ன செய்கிறார்கள்? என்ற வாசகரின் கேள்விக்கு, தராக சாரின் யதார்த்தமான பதிலைக் கண்டதும் எனக்கு வந்த சிரிப்பை அடக்க முடியவில்லை! இந்த இதழில் நகைச்சுவைத் துணுக்குகள் வராத குறையை, தராக சாரின் ஒரு சில பதில்கள் நிவர்த்தி செய்துவிட்டன!

திருச்சி — 20, அப்துல் சலாம்.

* போலீஸ்காரர்கள் புலிவேட்டைக்குப் போனார்களா? இல்லை பணவேட்டைக்குப் போனார்களா? அவர்களுடைய மாமூல் புத்தியை ஒன்றும் தெரியாத மக்களிடமும் காட்டிவிட்டதை நினைக்கும் போது வயிறு பத்திக்கிட்டு எரியுது!

நாட்டரசன்கோட்டை, இதயகீதா.

## வட்டமேஜை

* 'நாட்டாண்மை' சிறுகதையில் நல்ல நயத்தை மட்டுமல்ல — தமிழகக் கிராமம் ஒன்றினையும் நன்கு காண முடிந்தது! மாறுபட்ட, மனத்தைத் தொட்ட கதை!

சென்னை — 93, எஸ். சம்பத்குமார்.

* அக்கல் எழுதிய 'நாட்டாண்மை' சிறுகதை படித்தேன். குற்றம் செய்தவன் தம் மகன் என்று தெரிந்தும் தண்டனை தரும் நாட்டாண்மை, தன் வாழ்க்கையைக் கெடுத்தவனைத் துணைவனாக ஏற்க மறுக்கும் பெண்ணின் முடிவு ஆகியன அருமையான கிராமியச் சிறுகதைக்கு அச்சாரமாக விளங்கின.

திருப்பரங்குன்றம், வ. உ. சி. பாலகிருஷ்ணன்.

* வேனிற்காலத்தில் எல்லோரும் தண்ணீர்ப் பஞ்சத்தில் அவதியுறுவார்கள். நீங்கள் என்னடாவென்றால் 'ஜோக்' பஞ்சத்தில் அவதியுறுகிறீர்களே...

கோவை — 9, கோ. க. சுரேஷ்.

* இராமநாதபுரம் கலெக்டர் பதவியிலிருந்து மாற்றலில் இருந்தாலும், மனமுவந்து, கல்வி தொடுத்த பிரச்னைக் கணைகளுக்கு அதிகாரிகளுடன் இணைந்து பதில் அளித்து அளப்பரிய ஒத்துழைப்புக் கொடுத்த திரு. திபேந்திரநாத் சாரங்கி அவர்களின் செயல் உண்மையிலேயே போற்றிப் பாராட்டத் தக்க ஒன்றாகும்!

கச்சநகரம், எம். ரவீந்திரன்.

* இராமநாதபுர மாவட்டத்தில் உள்ள அனைத்து ஊர்களையும் மிகவும் ஆழ்ந்து நோக்கியிருக்கிறது கல்கி என்பதைக் கலெக்டருடன் நடத்திய பேட்டியிலிருந்து தெரிந்து கொள்ள முடிந்தது. கலெக்டரின் பொறுப்பான பதில்களும் முப்பதுக்கும் மேற்பட்ட அதிகாரிகள் பேட்டியின் போது உடனிருந்ததும் மகிழ்ச்சிக்குரியதாக இருந்தாலும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டால்தான் சந்தோஷமாக இருக்கும்.

கமுதி, பொ. பொன்ராஜ்குமார்.

* எம்டன் ஜப்பான்காரன் என்றும், இது இரண்டாம் உலக யுத்தத்தில் நடந்ததென்றும் பாலகுமாரன் குறிப்பிடுகிறார். உண்மையில் 'எம்டன்' என்ற கப்பல் 'ஜெர்மனி நாட்டைச் சார்ந்தது. எம்டன் சென்னையில் குண்டு போட்டது,முதல் உலக யுத்தத்தின் போது. குண்டு விழுந்த இடம் இன்றைய உயர்நீதிமன்ற வளாகம்.

தஞ்சாவூர், கோ. சுரேஷ்.

* இராமநாதபுரம் மாவட்டத்தின் வறட்சியைப் போக்கிட வழிவகைகள் பல இருந்தும், வறண்ட மனம் படைத்த அரசியல்வாதிகளையும் சகித்துக் கொண்டு, வறட்சியுடன் வறுமையையும் அணைத்தே வாழப் பழகிவிட்ட அம்மாவட்ட மக்களின் நிலை மிகப் பரிதாபத்திற்குரியது.

காட்டூர், எஸ். அருள்மொழி.

பரதன் அச்சகத்தில் அச்சிட்டவர் வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிட்டவர் வி. வைத்தியநாதன். ஆசிரியர்: கி. ராஜேந்திரன்.

நிர்வாகக் காரியாலயம்: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை—600 032. போன்: 431543 434157.

ஆசிரியர் குழு அலுவலகம்: 28, ஐந்தாவது தெரு, ஏரி வட்டம், நுங்கம்பாக்கம், சென்னை—600 034. போன்: 473389.

ஆண்டுச் சந்தா — உள்நாடு: ரூ 78/—: வெளி நாடு கப்பல் தபால் ரூ 250/—: விமானத் தபால் ரூ 650/—. (ஆறு மாதச் சந்தா ஏற்கப்படும்.)

# அழகோ அழகு ஃப்ரெஸ்கா
# அற்புத நறுமணம் ஃப்ரெஸ்கா







கோத்ரெஜ் அறிமுகப்
படுத்துகிறது ஃப்ரெஸ்கா—
அற்புதமான சோப்.

ஃப்ரெஸ்கா—நிறைந்த சுகந்தம்,
நிகரில்லா நறுமண சோப்.

வளமான நுரை—தந்திடும்
வந்திடும் அதிக நாட்களுக்கு
ஃப்ரெஸ்கா சோப்.

அடக்கமான விலையிலே
அற்புதமான சோப் ஃப்ரெஸ்கா.

**அழகான அற்புதமான சோப் வழங்குவோர் கோத்ரெஜ்**

Registered No. M 4392
Registered as a Newspaper in Sri Lanka

